ஆதிஇறை அல்லா(ஹ்)வின் தூதர்

## மாதரசி கதிஜாவின் காதலர்

# முஹம்மத் (ஸல்)




**மு.அ. ஹைதர் அலீ யகீனுல்லாஷா, B.A.,**

கலீஃபத்துல் காதிரி ஷத்தாரி சுஷிஸ்தி சர் கலீஃபா ரிஃபாயி

## பொருளடக்கம்


சமர்ப்பணம்

அறிமுகம்

ஏகப்பிரம்மத்தில் மோகப் புதையல் முகம்மத் (ஸல்)

பராசக்தி அவதாரம் பாராளும் முகம்மத் (ஸல்)

வேத விநாயகரின் நாத வரிகளில் நபிகள் நாயகம்(ஸல்)

ஆதம்பெற்ற பிள்ளைகள் : ஆண்கள் முகம்மத்! பெண்கள் மஹ்மூதா!

இராமனின் சிந்தையில் முகம்மத் (ஸல்)

போதிமரத்தடி புத்தன் ஓதிய முகம்மத் (ஸல்)

ஏசுமைந்தன் நேசமுகம்மத் (ஸல்)

அன்பெனும் அவதாரம்

வான தலைவன் வடித்த கண்ணீர்

தாயை மறைத்த மாயப் பிரபஞ்சம்

தாய் வேண்டும் இறைவா!

இறையில்லம் கஅபாவில் ஏகாந்த கனவு

முத்தெடுத்த தங்க மங்கை

மடிதான் வேண்டும் மாதரசே

மனித உரிமை கண்ட மணநாள்

கன்னியின் காதலா! கடவுளை தேடிவா!

காரிருள் குகையில் கடுந்தவ சூஃபி

ஜிபுரீலின் அணைப்பில் எழுத்தறிந்தார் இறைதூதர்!

ஒப்பற்ற ஒப்புதல்

ஆன்மாவின் முழக்கம் - அதான்!

சுவர்ண குன்றம்

கடவுள் உருவம்

முகம்மதின் உத்திரவால் மரித்து உயிர்த்த மைந்தன்

மிஃராஜில் சந்தித்த ஏகாந்த லைலா

திரைகடந்த திருக்காட்சி

மாலையில் உதித்த கதிரவன்

மிஃகுராஜில் நிச்சயார்த்தம்

மறைந்தும் மறையா மாய வினோதினி கதிஜா

அலீகண்ட நபியின் அதிசய விசுவரூபம்

அறிவின் எல்லையில் அகமும் புறமும்!

முன்னோடி மதுவிலக்கு

மரணமில்லா பெருவாழ்வு

மடியில் விழுந்த நிலா

வாடிய முகத்தாமரை

கோபத்தை விஞ்சிடும் கருணை

தற்கொலைக்கு தடை

முகம்மத் எத்தனை முகம்மதடி!

தாடி அவள் உரிமை

தொண்டு செய் தோழா!

குருடர் கண்ட இறைஒளி

பார்வையால் பாவையர் ஆசைதீர்த்த பரமன் திருத்தூதர்

இன்பம் தேடும் மனிதா அன்பை அடிக்காதே!

எங்கிருந்தோ கேட்கும் நபியின் குரல்

மைந்தனாய் பிறந்த மறுமைநாள் மகதி நபி

எகிப்தை மறந்த இளவரசி

நற்குணமே சன்மார்க்கம்

அரஃபாத் அருள் போதம்

பிரபஞ்ச பஞ்சா ஊர்வலம்

மீண்ட சொர்க்கம்

மதினாவில் மலர்ந்த மக்களாட்சி

அந்தி வைகரையில் உத்தம நபியின் இறுத ஊர்வலம்

ஆனந்த சங்கமம்

தயவுபுரிவீர் நபிமுகம் கான தாயே கதிஜா மாதரசே!

நன்றியறிதல்

# சமர்ப்பணம்

கண்குளிர்ந்த குருநாதர்
எஜமான் ஷாகுல் ஹமீது பாதுஷா
நாயகத்தின் பேரர்
ஷெய்குல் மஷாயிக் ஸையிதினா
மு. கு. முஹம்மத் ஹுஸைன் சாஹிபு (ரலி)
அவர்களின் உன்னதமான ஆன்மாவுக்கு
சமர்ப்பணம்.

# அறிமுகம்

ஆதி இறை அல்லாஹ்வின் தூதர் கதிஜாவின் காதலர் முகம்மத் நபி (ஸல்) காவியம் என்ற எனது இந்த கவிதை நூலை, பெருமானார் அவர்களின் வாழ்க்கையின் மறுபக்கமான ஹகீகத் என்னும் தத்துவ நிலையை இணைத்து, யதார்த்தமாக வழங்கியுள்ளேன். அதனை The Messenger of Allah Muhammed (..peace..) Beloved of Kathijah என்று ஆங்கில ஆக்க கவிதைகளாகவும் மொழிபெயர்த்து உலகின் முன் வைக்கிறேன்.

உலகின் பல பாகங்களிலும் மொழி இன சமுதாயங்களிலும் இறைவன் தன் தூதர்களை அனுப்பியிருக்கிறான் என்று திருக் குர்ஆன் சான்று பகர்கிறது. ஆனால் உலகில் உள்ள மதவாதிகள் ஒருவருக்கொருவர் விட்டுகொடுக்காமல், தங்கள் மதத்தை உயர்த்திப் பேசுவதும் மற்றவர்களை தங்களின் மதத்தின் பக்கம் வந்து விடும்படி இழுப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மதத்தின் நோக்கம் கட்டாய அழைப்பு அல்ல என்று மெய்ஞானிகள் கூறினாலும் யாரும் கேட்பதாக இல்லை.

ஆண்டவனை அடைய எவனும் தன் மதத்தை மாற்றிக் கொள்ள அவசியமில்லை. மதபேதம் ஓதி மதி கெட்டவர்க்கு எட்டாத வான் கருணை வெள்ளமாகி என்று இறைவனுடைய அருளைப் பற்றி தமிழகம் கண்ட தலைசிறந்த மெய்ஞானப் பாவலர் குணங்குடி மஸ்தான் சாஹிப் பாடுகிறார்கள்.

புழுத்துப்போன பழைய மூடகருத்துக்களை சமுதாயத்திலிருந்து கெள்ளி எறிவதென்பது உலகில் தொடர்ந்து நடந்துவரும் வரலாற்று புரட்சிகளாகும். இறை அமைதி பொழியும் முகம்மத் (ஸல்) அரபு பாலைநில சமுதாயத்தில் புரட்சி செய்தார்கள். அவர்கள் பிறந்த மண்ணில் நாகரீகம் என்ற பெயரில் நடந்த குமுகாய கூத்துக்களை கண்டித்தார்கள்.

குடி, குடித்துவிட்டு கூத்தாடுவது, சூதாட்டம், குறி கேட்டு கோமாளித்தனம் புரிவது, கவிஞனையும், உறி அடிப்பவனையும், மேலாடுபவனையும் தெய்வ சம்பந்தமானவர்கள் என்று கருதுவது. குழந்தைகளையும், மனிதர்களையும் உயிர்ப்பலி கொடுப்பதை இறைவணக்கமாக கருதுவது.

மனித இனத்தின் இரு கண்களின் ஒன்றான பெண்ணினத்தை இழிவு படுத்துவது, ஒரு பெண்ணை பலர் வைப்பு வைத்துக் கொள்வது, பெண்களை உயிரற்ற ஜடமாக கருதுவது, பெண்ணாய்ப் பிறக்கும் சிசுக்களை வன்கொலை செய்வது, தெய்வங்களின் பெயரால் இனச்சண்டையில் இறங்குவது.

வட்டி, வட்டியின் மேல் வட்டிப்போட்டு ஏழை எளியவர்களை சுரண்டுவது, மனிதனுக்கு மனிதன் அடிமை என்று வியாபாரம் நடத்துவது, அடிமைகளை விலங்குகளை அடிப்பதைப் போல அடித்து கொடுமை படுத்துவது, இத்தகைய இழிவான செயல்களை சமுதாய நாகரீகமாக கருதி கண்ணியப் படுத்துவது.

அண்ணல் முகம்மத் (ஸல்) அவர்கள், தான் சார்ந்த சமுதாயத்தில் நடந்த இந்த அனாச்சாரங்களை எதிர்த்து செய்தப் புரட்சி அகில உலகுக்கும் அவ்வப்போது அவசியமாக தேவைப்படுகிறது. அவர்கள் செய்த சீர்த்திருத்தங்கள் காலா காலத்துக்கும் நிலைத்து நிற்கும் சீர்திருத்தங்களாகும் .

அவர்கள் சாந்தி மார்க்கமான இஸ்லாத்தின் கொள்கைகளை தன்னை சார்ந்த மக்களிடையே நடைமுறை படுத்தினார்கள். ஆனால் தன்மீது பற்றோடிருந்தும் தன் மார்க்கத்தை ஏற்காத தன் பாட்டனாரான அப்துல் முத்தலிஃபின் மீதோ தன்னை வளர்த்த பெரிய தந்தையரான அபுதாலிப்பின் மீதோ அவர்கள் இஸ்லாத்தை வற்புறுத்தவில்லை.

தன்னை நேசித்த அபிஸீனிய கிறிஸ்துவ மன்னர் நஜ்ஜாசிக்கு இரண்டாவது கடிதமெழுதி நீ என்னுடைய

மார்க்கத்தை ஏற்றுக்கொண்டே தீரவேண்டும் என்று வலியுறுத்தி கட்டளையிடவில்லை. மாறாக, தான் மெய்நிலை அடைவதையே வாழ்க்கையின் தலையாய நோக்கமாக கொண்டிருந்தார்கள். தன்னை அறியவும் தன்னை படைத்த இறைவனை அறியவும் கடுந்தவம் புரிந்தார்கள்.

காதலியர் கதிஜா நாச்சியாரின் பரிவு நிழலில் பல ஆண்டு காலம் அந்நூர் மலையில் ஹீரா குகையில் அவர்கள் ஆற்றிய கடுந்தவம் உலக வரலாற்றில் ஒப்பற்ற தவ ஈடுபாடாகும். அவர்களின் மெய்த் தவ நோக்கம் தெய்வத்தை அறிவதாகவே இருந்தது. மார்க்கத்தின் தொடக்கம் இறைவனைப் பற்றி அறியும் முயற்சியில் இருந்து ஆரம்பம் - அவ்வலுத்தீனி மஹ்ரிபத்துல்லாஹ் என்ற அவர்களின் ஹதீஸ் பொன் மொழியே அதற்கான ஆதாரமாகும்.

சுகுல அன்து என்ற அந்த தவநிலை இருகண்களையும் மூடி அமர்ந்து உள்ளொளியை தரிசிப்பதுடன். இரு செவிகளின் உள்ளிருந்து புறப்படும் ஓம் என்கின்ற பிரணவ தொனியில் எண்ணங்களை ஆழ்த்தி மனதில் அமைதி ஊடுருவச் செய்வது. இந்த தவம் எல்லா மதத்துக்கும் பொதுவானது.

பல ஆண்டுகால தவத்தின் பேறாக ஜிபுரீல்(அலை) ஆகிய வானவர் அண்ணலர் முன் தோன்றி இறைவனின் வசனங்களை எடுத்தோதினார். இறைவனின் மறை வாசகங்களோடு நிலை தடுமாறி இல்லம் திரும்பிய கணவரை ஏற்று இறைதூதர் - நபி என்ற அவர்கள் மெய்ந்நிலையை ஒப்புக்கொண்ட முதல்வர் காதலியர் கதிஜா (ரலி) என்பதை வரலாறு சொல்லிகாட்டி கொண்டிருக்கிறது.

மெய் வெளிப்பாடு, தீர்க்க தரிசனம், வேத வசனம் என்றெல்லாம் வழங்கப்படும் வஹி என்னும் அரபு மொழி உச்சரிப்பின் உண்மையை, வஹ்தத்துல் உஜூத் - அதாவது ஏகத்துவம் (அத்வைதம்) என்கின்ற இஸ்லாமிய

ஞான மரபின் முன்னவரான சையிதினா முஹ்யித்தீன் இபுனுல் அரபி அவர்கள் பின்வருமாறு விளக்குகிறார்கள்.

வஹி மூலமாய் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வெளிப்போந்த குர்ஆன் ஆகிய வேதமென்பதின் யதார்த்த உண்மை, அது பெருமானார் (ஸல்) அவர்களின் பேரறிவில் எதிரொலித்த பிரபஞ்சத்தைப் பற்றிய புரிதல் ஆகும். எங்கேயோ இறைவன் என்கின்ற ஒரு நபர் இருந்து கொண்டு ஜிபுரீல் என்கின்ற தபால்காரரின் மூலமாக முகம்மத் (ஸல்) அவர்களுக்கு அனுப்பிய கடிதங்களின் தொகுப்பு தான் குர்ஆன் என்கின்ற கருத்து பாமரத்தனமானது என்று கூறுகிறார்கள்.

மெய்ஞ்ஞானி இபுனுல் அரபியின் அத்வைத சித்தாந்தம் இறைவனின் ஒருமைப்பாட்டை மிகத் தெளிவாக விளக்குகிறது.

மனிதனில் இறைவன் தன்னை தெரியாதவனைப் போல நடித்து கொண்டிருக்கின்றான், என்பதே அவர்களது உன்னத விளக்கமாகும். தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்தான் – மன்அரப நப்ஸஹு⁶ பகத்அரப ரப்பஹு⁶ என்பது யாவரும் அறிந்த நபிகளாரின் ஹதீஸ் மொழியாகும்.

பிரபஞ்சத்தில் இரு உள்ளமைப் பொருள்கள் இல்லை. இருக்கின்ற ஒரே உள்ளமைப்பொருளே தன்னை இறைவனாகவும் படைப்பினமாகவும் அனுமானித்து பிரபஞ்சத்தை நடத்தி வருகிறது. இந்த உண்மையின் உண்மையை உலகில் ஒவ்வொரு மதத்திலுமுள்ள ஞான மார்க்கத்தினர் வலியுறுத்தி கூறுகின்றனர்.ழி

மதவாதிகளின் சட்டரீதியான கொள்கைகளுக்கு இடையில் உலகில் போரும் பூசலும் சச்சரவும் புகைச்சலும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் ஞானாந்திகள் சொர்க்க வாசிகளைப் போல அமைதி கொண்டிருக்கின்றனர். புத்தமதத்திலுள்ள ஜென்கள், யூதமதத்திலுள்ள ஹஸ்ஸிதிகள், இஸ்லாத்தைச் சார்ந்த ஸுஃபிகள், கிருஸ்துவ மதத்திலுள்ள செயின்டுகள், இந்து

மதத்தின் யோகிகள் ஆகியோரின் கண்ணோட்டம் ஒரே மாதிரியாக உள்ளது.

ஸுஃபிகள் செயின்டுகள் யோகிகள் போன்ற ஞான மார்க்கத்தினரை இத்தனை பேர்கள் என்று கணக்கெடுத்துவிடலாம். ஆனால் மதவாதிகளான முஸ்லிம்கள் கிருஸ்துவர்கள் இந்துக்கள் பௌத்தர்கள் ஆகியோரை எண்ணி கணக்கெடுக்க முடியாது. ஏனெனில் மதவாதிகள் கோடி கணக்கில் குவிந்துகிடக்கின்றார்கள். மதவாதிகளின் கொள்கைப் பூசல்களையும் தர்க்க வாதங்களையும் பொருளற்ற பக்தியையும் தடுக்க முடியாது.

இறைவனை அறிவது அறிந்து அவன் மீது நேசம் கொள்வது என்பதே ஒவ்வொரு மத ஸ்தாபகரின் நோக்கமாகயிருந்தது, அந்த நோக்கத்திலிருந்து பக்த கோடிகள் விலகி நிற்கிறீர்களே என்றால் அதை விளங்கி கொள்பவர் யாருமில்லை.

இஸ்லாமியர்களும் கிருஸ்துவர்களும் யூதர்களும் பல நபிமார்களையும் தீர்க்கதரிசிகளையும் வரிசைப்படுத்தி கூறி விளக்கமாகப் பேசுகின்றனர். ஜைனர்களோ இருபத்தைந்து தீர்த்தங்கரர்களைப் புகழ்கின்றனர். பௌத்தர்கள் சித்தார்த்த கௌதமர், புத்தர்களின் வரிசையில் கடைசியானவர் என்கின்றனர். இந்துக்களோ இறைவனின் கலியுக அவதாரம் என்று சிலரை குறிப்பிடுகின்றனர். அவர்களில் வேறுசிலரோ அந்த கலியுக அவதாரம் எதிர்பார்க்கப்படுகிறது என்கின்றனர்.

ஆனால் எல்லா மதவாதிகளும் ஒருவர் மற்றொருவரின் மதஸ்தாபகரை வழிதவறியவர் என்றே கருதுகின்றனர். அரசியல் வாதிகளில் ஒருசாரார் தங்களுக்கு மக்களின் ஆதரவு வேண்டுமென்பதற்காக மதவெறியை தூண்டி விடுகிறார்கள். மற்றொரு சாரார் மதச்சார்பற்ற நிலை என்று ஒரு போலித் தனத்தை ஆவேசமாகப் பேசுகிறார்கள்.

ஆனால் எல்லா மதங்களும் இறைமை ஒருமைப்பாடு, அந்த இறைமையின் மீது விசுவாசம் என்பதையே அடிப்படையாக கொண்டுள்ளது என்பதை யாரும் எடுத்துரைக்க முடிவதில்லை. எடுத்துரைத்தாலும் அதை விளங்கி கொள்ளுமளவுக்கு துணிந்து விளக்கமாக பேசத்தெரிவதில்லை.

அரபகத்தில் பிறந்த முகம்மத் நபி(ஸல்)யின் வாழ்க்கை வரலாற்றை துருவித் துருவி ஆராய்ந்து அதன் ஆன்மீக மறுபக்கத்தை மக்கள்முன் வைத்துள்ளோம். இதில் பல்வேறு விஷயங்கள் மத அடிப்படைவாதிகளுக்கு பிடிக்காமல் இருக்கலாம், ஆனால் மறைந்துகிடக்கும் உண்மையை இப்போதாவது வெளிப்படுத்து என்று இறைவன் என்னை ஏவுகின்றான்.

என்னாலும் என்னுடைய கவிதைகளாலும் உலக மக்களுக்கு நன்மை உன்டாகுமானால் என்னை ஏவியவனுக்கு நான் நன்றி உடையவனாக இருப்பேன்.

**முகம்மதே உம்மை படைக்காவிடில் அகில உலகத்தையும் நாம் படைத்திருக்க மாட்டோம் என்பது ஹதீஸ்குத்ஸீ ஆகிய இறைவாக்கியம்.**

அகிலம் அனைத்திலும் அண்ணல் முகம்மதையே என் கண்கள் தரிசிக்கின்றன. இந்திரப் பிரஸ்த போர்களத்தில் தேரோட்டும் கிருஷ்ண பரமாத்மன் எனக்கு எம்பெருமான் முஹம்மத் (ஸல்) அவர்களாகவே தோன்றுகிறார். பத்ரு போர்களத்தில் வீராவேசம் கொண்ட ஹஜ்ரத் அலீ, அர்ஜுனனின் கோலத்தில் எனக்கு காட்சியளிக்கிறார்.

கண்மூடி மோன தவத்தில் அமர்ந்திருக்கும் புத்தபெருமானின் தோற்றம் எனக்கு ஹீரா மலைப்பொதும்பில் கடுந்தவம் புரிந்த முகம்மதெங்கோனின் உயிரோவியமாகவே தெரிகிறது.
விண்ணுயர்ந்து செல்லும் ஏசு பிரானின் தோற்றம் மிஃராஜின் நள்ளிரவில் பெருமானார் (ஸல்) ஜெருசலத்தின் முகத்தஸ் பள்ளியிலிருந்து புராக் வாகனத்தோடு வானகம் ஊர்ந்த காட்சியாகவே எனக்கு தெரிகிறது. நான் பொய்கூறவில்லை.

என்னுடைய கவிதைகள் கற்பனையும் அல்ல. என்னுடைய இக்கவிதை நூல் மத ஒருமைப்பாட்டுக்கு வித்திடுமானால், நான், எழுத்தை கொண்டு மனிதனுக்கு அறிவைத் தந்த இறைவனுக்கு நன்றி உடையவனாக இருப்பேன்.

மதவன்முறையும் தேச இறையாண்மையின் பெயரால் நடக்கும் மதவெறியர்களின் படையெடுப்புகளும் தீவிரவாதிகளின் குண்டு வீச்சும் தொலைந்து, நாடும் உலகமும் அமைதி அடையுமானால் படைத்த இறைவனை நான் மேலும் மேலும் புகழ்வேன்.

ஆன்மீகப் பாதையில் நான் முன்னேறிச் செல்ல எனது பாட்டனார் அ. சா. முகம்மத் அலீ சாஹிப், மாமா அப்துல் ரஹீம், அண்ணன் முகம்மத் மெய்தீன் காதிரி, சிங்கையில் சமாதி கொண்டிலங்கும் மகான் காஜா ஹபீபுல்லாஷா க்ஷிஸ்தி, என் கலீஃபத்துக்குரியவர்களான குருபிரான் கல்வத்துக்கடல் மெஞ்ஞான சுடர் காதிர் ஒலியின் திருப்பேரர் முகம்மது ஹுசைன் சாஹிபு ஆகிய இவர்கள் காரணம் ஆவார்கள்.

என் ஆன்மா பகலவன் போல் வெளிச்சமடைய யார் காரணம்? நான் நாகூரிலுள்ள காருண்ய ஜோதி காதிர் ஒலி ஆண்டவர்களின் தர்பாரை சுட்டி காட்டுவேன். அவர்கள் என் உடலுக்கும் உயிருக்கும் மட்டுமல்ல ஆன்மாவுக்கும் சொந்த காரரான எனது முப்பாட்டன் ஆவார்கள். 1969-ம் ஆண்டில் தர்கா வளாகத்தில் பத்துமாத காலம் தங்கியிருந்த எனக்கு சூக்கும நிஜ காட்சி அளித்து என்னை ஆசீர்வதித்தார்கள்.

தாயின் மடியில் நான் பாலுண்ட காலம் முதல் என்னுள் ஆன்ம ஒளி பாய்ச்சியவர்கள் பலர் ஆவர். நாகப்பட்டினத்தில், நான் பிறந்த நாற்பதாம் நாளில் என் தாயிடமிருந்து என்னை கேட்டு வாங்கி தன் மடியில் கிடத்தி ஆசிர்வதித்த சென்னை எழும்பூரில் சமாதிநிலை கொண்ட இறைநேச செல்வர் மோத்தி பாபா!

நான் பிறந்த கூத்தூரில் மகான்களான, கையிலெடுத்த மண்ணை சர்க்கரையாக்கி தரும் ஆழியூர் தலம் கொண்ட மூட்டைபாபா! தீப்பெட்டி இல்லாமல்

அடுப்பில் நெருப்புமூட்டி சிறுவர்களை சிரிக்கவைக்கும் கிருஸ்துவ ஞானக் கிருக்கன் ஏசடியான்! அரைக்கோவணத்துடன் திரிந்து அருள் ஞானம் விளைவித்த மெய்யடியார் இந்துவா, முஸ்லிமா என புரிந்துகொள்ள முடியாத பாடுவான் துரை! அதிராம் பட்டினம் தந்த ஞான முத்து முத்துவாப்பா!

என் கண்கண்ட முப்பெரும் ஜோதிகள் நாகூர் ஷரீப் சாஹிப், சோழபுரம் மஸ்தான் பாபா, மஞ்சகொல்லை ஷிப்லி காகா! இம்மகான்களைத் தவிர கூத்தூர் ஜக்கரியா நானா, இறைநிலையில் வெட்டுண்ட என் நண்பன் சேட்டு, என் தம்பி லியாகத் அலி இப்படியாகப் பலர்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் காஞ்சி கண்ட ஞான மகான் சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பண்ருட்டி நகரில் நான் தங்கியிருந்த குவார்ட்டர்ஸில் ஒரு மாலை கருக்கிருட்டில் என் கண்முன் தோன்றி இல்லற நெருக்கடியில் அழுந்தி கிடந்த என்னை, வெளியில் வா என்று ஒளி வடிவமாய் நின்று ஆசிர்வதித்து அருள் புரிந்தார்.

பத்தாண்டுகளுக்கு முன், மறைந்த மெய்ஞ்ஞானி வையம் புகழும் புட்டபர்த்தி சத்யசாயி பாபா தொடர்ந்து இரண்டு நள்ளிரவுகளில் பண்ருட்டியில் நான் தனிமையில் தங்கியிருந்த வீட்டில் என் கண்முன் வந்தார். எனக்கு ஏற்பட்ட ஒரு பிரச்னையிலிருந்து என்னை விடுவித்தார்.

சத்தியமாக சொல்கிறேன்! சிவபெருமான் என் சிந்தையில் தோன்றி பராசக்தியே முகம்மத்(ஸல்)ஆக அவதாரம் கொண்டதாக அறிவித்தார்.

ஜனவரி முதல் நாள் 2009 அன்று முற்கபலில் ஏசு பிரானும் மோசேயும் என் திறந்த கண்முன் தோன்றினார்கள். ஈசா (அலை) ஆகிய ஏசுநாதர் தன் புனித வலது கரத்தை என்முன் நீட்டி

முகம்மத் என் மகள்வழி பேரர், மரியா மகதலேனாவுக்கும் எனக்கும் பிறந்த மகள் சாராவின் சந்ததியில் அவரது தாயார் ஆமினா பிறந்தார் என்பதை உலகுக்கு உணர்த்து என்று குரல் கொடுத்தார்.

எல்லா புகழும் இறைவனுக்கு உரியதென்பது திருகுர்ஆனின் முதல்வாக்கியம் ஆகும். பார்க்கப் பலவிதமாய் பல்வகண்டம் தன்னை அடை காக்கும் திருக்கருணை என் கண்ணே ரகுமானே என்பது மஸ்தான் சாகிபு அப்பா அவர்களுடைய பாடல்.

*இறைவன் பல்வேறு அவதாரங்களாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டு அருப ரூப தோற்றங்களில் பல்வேறு மதங்களில் தன் உள்ளமையை ஸ்தாபித்து பள்ளிவாயில்களிலும், கோயில்களிலும், தர்காக்களிலும், மாதா கோயில்களிலும், ஜைன புத்த மடாலயங்களிலும், குருத்வாராக்களிலும் வேறுவேறு இராகங்களில் தன் புகழ் பாடப்பட வேண்டுமென்று விரும்புகிறான் என்று எனக்கு தோன்றுகிறது.*

மதங்களின் ஒற்றுமைக்காகவும் உலகின் அமைதிக்காகவும் பாணிக்க ஒன்னா பதம்பெறுதற்கு என் சிரசை காணிக்கை வைத்தேனென் கண்ணே பராபரமே! என்ற மஸ்தான் சாகிபு அப்பாவின் மற்றொரு பாடலுக்கு அர்த்தமாக அந்த பரமார்த்தப் பராபரனின் பாதபீடங்களில் என் சிரசை காணிக்கையாக வைக்கிறேன்.

புகழ் அனைத்தும் இறைவா உனக்குறியது!

உனது ஸலாமும் ஸலவாத்தும் எம்பெருமானாகிய முகம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் கிளையார் கோத்திரத்தார் தோழமார் கூட்டத்தார் அனைவர் பேரிலும் என்றென்றும் உண்டாவதாக!

அனைத்துலகையும் படைத்து அடைய வளைந்து பராமரிக்கும் இரட்சகா! மனித கோடிகள் அனைவரின் மீதும் அகிலத்தில் தோன்றும் அனைத்து உயிர்களின் மீதும் உனது கருணை கடாட்சத்தை அருள் புரிவாயாக!

மு.அ. ஹைதர்அலீ யகீனுல்லாஷா

*கலிஃபத்துல் காதிரி ஷத்தாரி சுஷிஸ்தி சர்கலிஃபா ரிஃபாயி*

01/06/2013

# ஏகப்பிரம்மத்தில் மோகப் புதையல்
# முகம்மத் (ஸல்)

ஆதிக்கும் முன் அநாதி – எங்கும் இருள் வெளியாய் ஏகப்பிரம்மமாகிய தாத்தென்னும் பரம்பொருள் மட்டுமே தனித்திருந்தது. அதனுள் ஆசை என்னும் மோக உணர்வு பொங்கியது. பொங்கிய உணர்வு தன்னை முகம்மத் என்னும் பேரின்ப புதையலாய் அறிந்து கொண்டது. முகம்மதென்பது இந்து மக்களுக்கு கிருஷ்ண பரமாத்மன், கிறிஸ்துவ சகோதரர்களுக்கு ஏசுபிரான், பௌத்தர்களுக்கு புத்த பெருமானாக வெளிப் போந்தது.

*ஏகப் பேரிருள் கடலிலே – ஏக*
*ஏகாந்த வெட்ட வெளியிலே*
*மோகப் புதையல் பிறந்தது – அது*
*முந்திக்கு முந்தி நடந்தது*

*யூகத்தில் வாரா பரம்பொருள் – அது*
*யோசனைக் கெட்டா பழம்பொருள்*
*மோகப் பொருளதில் பிறந்தது – இது*
*முகம்மதாய் அவதாரம் கொண்டது*

*தோழியர் தோழர்கள் வாருங்கள் – பாரின்*
*தூய புதுவேதம் பாடுங்கள்*
*வாழிய முகம்மது முஸ்தபா – அந்த*
*வள்ளலைப் பாடிப் பரவுங்கள்*

*மோனப் பராபரக் கடலிலே – மோகம்*
*மூச்சாய்ப் பிறந்து வளர்ந்தது*
*நானென்று எழுந்து நின்றது – எங்கும்*
*தானாய் இருப்பதை கண்டது*

தன்னில் தானாக வந்தது - அது
தரணியை முதலில் படைத்தது
பின்னர் வான்கதிர் மதியையும் - மின்னும்
விண்மீன் கோள்களும் விளைத்தது

முன்னிலை ஆக்கிட தன்னையே - ஆதம்
முகத்தையும் அகத்தையும் படைத்தது
தின்னமதன் முகம்அது அகம்அது - ஆம்
திவ்ய முகம்மது அகமது

மேற்கில் ஏசு முகம்மது - ஞானக்
கிழக்கில் புத்தன் முகம்மது
பார்க்கு மிடமெல்லாம் முகம்மது - பரத
மண்ணில் கிருஷ்ணன் முகம்மது

முகம்ம தென்பது மூலமாம் - ஞாலம்
மூலத்தின் ஓங்கார நாதமாம்
தூலம் சூக்கும ஆன்மமாம் - மூன்று
லோகமும் முகம்மதின் கோலமாம்

பரம்பொருள் முகம்மதின் மெய்நிலை - இந்த
பாரில் பாமரர் அறியவே
வரம்பில்லா காதலில் மூழ்கியே - ஸூஃபி
வார்த்தைகளால் பாடிப் பரவினேன்

ஆண்டவா ஏகப் பராபரா - மக்கள்
அறிவைத் தெளிய வைத்தருள்
வேண்டா மதபேத வாதனை - புவியை
விட்டும் வெளியேற செய்தருள்

காத்தமுன் நபியார்தம் காதலி – அந்த
கதீஜாமலர் பாதம் தண்மதீ
தோத்திரமாகியத் தீன் நெறி – பாட
தூய மாதுளம் தான்கதீ

ஏகப் பேரிருள் கடலிலே – ஏக
ஏகாந்த வெட்ட வெளியிலே
மோகப் புதையல் பிறந்தது – அது
முந்திக்கு முந்தீ நடந்தது

யூகத்தில் வாரா பரம்பொருள் – அது
யோசனைக் கெட்டா பழம்பொருள்
மோகப் பொருளதில் பிறந்தது – இது
முகம்மதாய் அவதாரம் கொண்டது



# பராசக்தி அவதாரம்
# பாராளும் முகம்மத் (ஸல்)

அனஸ வந்த ஸக்பகிர் மா மஹே மோகவா ... மாமஹே (மஹ்மூத் முகம்மத்) தெய்வ தூதராக பிறப்பார் – ரிக்வேதம் 6.28

கிராமாஹீர் தேவீம் த்ருஹிண்க்ருஹிணீ – மகாமவிதோ
ஹரே–பத்நீம் மத்மாம் ஹரஸஹஸரீ – மத்ரீதநயாம்
துரீயா காபித்வம் துரதிகம நிஸ்ஸீம் மஹிமா
மஹாமாயா விச்வம் ப்ரமஸி பரப்ரஹ் (ம–மஹி) ஷி

பரப்ரஹ்(ம மஹி)ஷி – பரபிரம்மத்துடன் இணைந்த பராசக்தியே! வேதத்தை அறிந்தவர்கள் உன்னையே பிரம்மா ஹரிஹரன் ஆகியோரின் துணையாக கூறுகிறார்கள். நீயே இம்மூவருக்கும் மேலானவளாக அடைவதற்கு அரியதும் எல்லை இல்லாததுமான மகிமை உடையவளாக மகாமாயா எனப்பட்டவளாக உலகனைத்தையும் ஆட்டிவைக்கிறாய்!

– ஆதிசங்கர பகவத்பாதர்
– சௌந்தர்யலஹரி – 97

*ஆயிரம் ஆயிரம் ஆண்டின்முன்*
*ஆரிய வர்த்தமாம் பூமியில்*
*மாயப் பிரபஞ்ச பாரதம்*
*மடியில் புகழ்மிகு காசியில்*

*பாயும் கங்கையின் கரையிலே*
*படியில் நின்றனன் அகத்தியன்*
*தாயினும் பரிவுடை பார்வதி*
*தாளைப் பணிந்து கேட்கிறான் :-*

*ஏகப் பெரு வெளியாகவே*
*எங்கும் நிறைந்திடும் சக்தியே!*
*மோகப் பட்டேனம்மா ஆதியே*
*முக்தி வழிசொல்ல வேண்டுமே*

இருகையும் கூப்பி நிற்கிறான்
இருகண்கள் மூடி முக்கண்ணாம்
குருவின் தலத்தையே நோக்கினான்
குளிர்ந்திரு விழிநீர் பெருக்கினான்

உச்சியின் மீது கருமுகில்
உயிரை துளைத்திடும் குளிரினில்
அச்சம்வளர் தனிமை இருளிலே
அந்த சித்தனும் தொழுகிறான்

ஒற்றை காலிலே நிற்கிறான்
உமையாளை கெஞ்சிப் பணிகிறான்!
சற்றை கெல்லாம் கங்கையாம்
சாகர கடலின் அலைகளில்

ஓம்ஓம்ஓம் என்னும் பேரொலி
ஓச்சம் பெருகவே திகைக்கிறான்!
ஹூம் முகம்மது அல்லாஹூ
ஓம்ஹூம் மகா மந்திரம்!

ஓம்ஓம்ஹூம் என்னும் சக்திநான்
உதிக்கப் போகிறேன் முகம்மதாய்
இம்மை மறுமைக்கும் அருள்மழை
பொழியப் பிறக்கிறேன் முகம்மதாய்!

இகமும் பரமும் புகழ்ந்திடும்
எழிலார் அரபு பாலையில்
அகமும் புறமுமாய் அணங்குகள்
அணைந்து நிற்கநான் தோன்றுவேன்!

அனஸா வந்த ஸக்பகிர்
ஆதிரிக் வேதம் சொல்லுமாம்
மாமஹே மோகவா சேதிஸ்ஸா
உ(மா மஹே)ஸ்வரி ஆகும்நான்!

அஸீரோ பகோன திறைவிசனே
அக்னே தசாப்பி ஸஹஸ்னரா
வைச்ச வாரை திரையம்கு
றைரிஷிகதே     பொருள் ஆகுமே

உண்மை அறிவு வல்லாண்மை
உடைய மாமஹே தோற்றமாய்
மண்ணில் மஹ்மூது முகம்மதாய்
பத்தாயிரம் தோழர் சூழவே

அகமும் புறமுமாய் மெய்வழி
ஆற்றும் அகுமதாய் தோன்றுவேன்
ஜெகமே புகழவும் அசுரரை
ஜெயித்து ஜெயக்கொடி நாட்டுவேன்!

முகம்ம தென்னும் மகா முனிவராய்
முக்திவழி சட்ட தத்துவம்
புகலுவேன் மைந்தா அகத்தியா!
புகழ் நீ!முகம்மதை முக்தியாம்!

புகழ் நீ முகம்மதை நிச்சயம்
முக்தி வந்துனை கூடுமே!
மகிழ்வாய் பார்வதி அகத்திய
மாமுனி தனக்கும் உணர்த்தினாள்!

உலகம் அறியுமோ உண்மையை?
ஒன்றுக்குள் ஒன்றாக தெய்வீகம்
நிலவும் ரகசியத் தன்மையை
தெரிந்தால் பேதங்கள் வளருமோ?

# வேத விநாயகரின்
# நாத வரிகளில் நபிகள் நாயகம்(ஸல்)

ஆதியில் வானவர்களின் குருவாகிய விநாயகப் பெருமான் ஏக பராபரனாகிய இறைவனை வணங்கி நெற்றியை மண்ணில் வைத்து சுஜூது செய்தார். வேத வசனங்களை சுகுபுகளாக இறைவன் அவருக்கு வெளிப்படுத்தினான்.

இமயமலை உச்சியில் ஒரு உன்னதமான அதிகாலை பொழுதில் அலோபநிஷத் என்ற அதர்வண வேதபாடத்தை தன் எழுதுகோலால் வரைந்த விநாயகர், இறைவனின் இறுதி தூதர் முகம்மத் (ஸல்) அவர்களின் அவதார நிகழ்வையும் அன்று முதன்முதலாக உலகுக்கு எடுத்துரைத்தார்.

*ஓம் ஓம் ஓம் என்னும் சப்தமே - அங்கு*
*ஒவ்வொரு திசையிலும் கேட்குமே*
*சாம அதர்வன ரிக் வேதமும் - யஜூர்*
*சார்ந்த மந்த்ர சுலோகமும்*
*நாம ரூபமாய் - மானச - ஆழி*
*தவழும் நீரலை மீதிலே*
*ஓம் ஓம்என்று முழங்குதே - அந்த*
*உச்சி இமாலய மலையிலே*

*ஒருமை ஏகாந்த தனிமையில் - வானம்*
*ஓடும் மேகங்கள் நிழலிலே*
*குருவாம் விநாயகன் நிற்கிறான் - அவன்*
*தூய மந்திரம் சொல்கிறான்*
*ஹரியும் ஹரனும் இருவரும் - படைக்கும்*
*பிரம்மன் அவனுடன் பொருந்தியே*
*நரனின் இருதயம் நடுவிலே - ரூப*
*நாம மற்றபர ப்ரஹ்மமாம்*

சிவோஹம் என்ற சொல்லிலே - எந்த
சீவன் தன்னை மறப்பனோ
தவமாம் தன்னிலே இறையுடன்- தானும்
தானுமாய் ஒய்வனோ
அவனே ஏக சுருபமாய் - இறை
அறிந்த தெய்வ ஞானியாம்!
கவிழ்ந்து ஞான விநாயகன் - அந்த
காலையில் சுஜூது செய்தனன்!

கோடி கோடி ஆண்டுகள் - இந்த
குவலயம் வான்வெளி ஏகமாய்
நாடி தவழ்ந்திடும் மௌனமே! - எந்தன்
நாதனே நல்ல சொல்லொன்றை
தேடி வந்துனை கேட்டனன் - இன்று
தெரிவிப்பாய்! என்று வினவினன்!
மூடும் பனிஇருள் விலகல்போல் - வேத
மொழியை விண்ணிடை கேட்டனன் :-

அல்லோஜி ஏஷ்டம் ப்ரமம்ஓம் - பூரண
பிரஹ்மான அல்லோம் அல்லோஓம்
ரசூலா மஹாமத் சுபஸ்யஓம் - அல்லோ
அலையாம் ஆதெல்ல பஞ்ஞன் - ஹீம்
ஹிருந்த வாஅல்லா ஓம் ஓம் ஓம் - அல்லா
எங்கும் நிறைந்த இறைவனாம்
ரசூலாம் முஹம்மதும் தூதராம் - முடிவில்
அசுரரை வெல்லும் கல்கியாம்!

அதர்வண வேதத்தில் இடம்பெறும் - இந்த
அரிய சுலோகத்தை உணருமின்
முதலும் முடிவுமாய் உள்ளவன் - வேதம்
முன்னாள் முதல்சொல்லி வருகிறான்
புதுமை வேத நாதங்கள் - தொடர்ந்து
புவன மீதில் பொழிகிறான்
மதம் எதுவாயினும் தெய்வீகம் - அதனை
மதித்து நுகர்வது இறைநேயம்

# ஆதம்பெற்ற பிள்ளைகள் :
# ஆண்கள் முகம்மத்! பெண்கள் மஹ்மூதா!

வானத்திலிருந்து பூமிக்கு எறியப்பட்ட முதல் மனிதராகிய ஆதம் (அலை) தன் துணைவி ஹவ்வாவை தேடித்திரிந்து முகம்மத் (ஸல்) அவர்களின் ஜோதியை தன் முதுகில் சுமந்திருப்பதற்காக மன்னிக்கப்பட்டார் ஹவ்வாவையும் சந்தித்தார்.

அவர்களின் சந்ததிகளில் தோன்றிய மனித இனப் பிள்ளைகளெல்லாம் ஆணும் பெண்ணும் முகம்மதின் தோற்றமே ஆகும். தன்னை அறிந்தவன் அந்தரங்கத்தில் முகம்மதே ஆவான், பெண்ணாகப் பிறந்து தன்னை அறிந்தவள் மஹ்மூதா ஆவாள்.

*காட்டில் அலைந்து திரிகின்றார் - ஆதம்*
*கடலோர கரைகளில் தேடுகின்றார்*
*மேட்டில் குன்றில் மலைகளிலே - அந்த*
*மெல்லிடை ஹவ்வாவைத் தேடுகின்றார்*

*சுவனத்தில் வாழ்ந்த நாட்களையும் - காதல்*
*சுந்தரி உறவையும் எண்ணுகின்றார்*
*கவனத்தில் தவறு வந்ததனால் - இறைவன்*
*தண்டித்து விட்டானே வருந்துகின்றார்*

*தென்றல் காற்றின் தண்சுகமோ - கன்னி*
*தேனின் இனிய சுவைதானோ*
*குன்றத்தில் குறிஞ்சி மலர்தானோ - காலை*
*குயிலின் சங்கீத இசைதானோ*

*சொர்க்கத்து மாதுளங் கனிதானோ - ஒரு*
*சொல்லில் அடங்காத எழில்தானோ*
*கொத்து திராட்சை கொடிதானோ - மா*
*கொய்யா பலா வாழை கனிதானோ*

கண்டுகேட்டுண்டு உணர்ந்தறியும் - இயற்கை
களிப்பனைத்தும் தன்னில் கொண்டவளாம்
பெண்டெனும் பெருமையை ஹவ்வாவை - ஆதம்
பிரிந்துவிட்(டு) அலைந்து தேடுகின்றார்

தேடி தேடித்தன் மனம்உடைந்து - ஒரு
தித்திக்கும் அத்தி மரத்தடியில்
வாடி இருந்த தருணத்திலே - சொர்க்க
வாசலில் ஒருசொல் கண்ணில்கண்டார்

முகம்மத் என்ற சொல் அதனை - வாயால்
முனுமுனுத்(து) ஆதம் சுவாசிக்கின்றார்
அகமதில் அதனை உசாவுகின்றார் - அந்த
ஆண்டவன் ஒளிதோன்ற மனம்பதைத்தார்!

ரப்பனா லலம்னா அன்ஃபுசினா - படைத்த
இறைவனே என்னை மன்னித்திடு
தப்பென உணர்ந்துன் கட்டளையை - நாங்கள்
தட்டியதால் பாவி ஆகிவிட்டோம்

என்னையும் அவளையும் மன்னித்திடு - எங்கள்
இருவரையும் ஒன்று சேர்த்துவிடு
உன்னை வணங்கினேன் என்றுசொன்னார் - இறைவன்
உணர்ந்துகொள் ஆதமே எனதொடர்ந் தான் :-

சொர்க்கத்தின் வாசலில் வாசித்தீரே - அந்த
சொல்லுக்காக உம்மை மன்னித்தேன்
மக்கத்தில் தோன்றிடும் ஞானமதி - உன்னில்
மறைந் திருக்கும்மைந்தன் முகம்மதுவாம்

அன்றும்மை களிமண்ணால் படைத்துமக்குள் – எந்தன்
ஆன்மாவை புகுத்தினேன் நினைவில்உண்டா
இன்றென்னை உமக்குள் முகம்மதென – நீர்
எண்ணிப்பார்த்தால் உண்மை கண்டுகொள்வீர்

தன்னுள் முகம்மதை ஆன்மாவாய் – ஆதம்
தழுவிட பேரின்பம் பொங்ககண்டார்!
மின்னல் போலவே ஹவ்வாவும் – எதிரே
மீண்டு வரக்கண்டு தாவுகின்றார்!

முகம்மத் முகம்மத் முகம்மதென்று – அவள்
முகத்தில் முத்தங்கள் பொழிகின்றார்
சுகத்தில் ஹவ்வாவின் கருவறையில் – உயிர்
கொடி துளிர்த்திட நெளிகின்றாள்

பிறந்த பிள்ளைகள் ஆணும்பெண்ணும்– அவை
பேரின்ப முகம்மது மஹ்மூதா
படர்ந்தது பாரினில் மனிதக்கொடி – மக்க
மண்ணில் மலர்ந்தது அகுமதுவாம்

காலத்தின் அந்தி நாள்வரையில் – மனித
கருவில் வளர்வது முகம்மதடா
கோலத்தில் முகம்மது உள்ளிருக்கும் – அல்லா
குவலயம் முழுதுக்கும் அரசனடா

மதங்கொண்ட பேரெல்லாம் மறதிகொண்டார் –
எங்கும்
மானுடம் கண்டவர் உண்மைகண்டார்
இதங்கொண்டு இதயத்தில் தெய்வம் கண்டு – தன்னில்
இறைகுணம் கொண்டவர் சொர்க்கம்கண்டார்

# இராமனின் சிந்தையில் முகம்மத் (ஸல்)

சிவோஹம் – சிவபெருமான் இராம பிரானுக்கு உபதேசித்த மந்திரம். இதன் பொருள் இதயத்தில் இறைவனை உறுதியாக நிலைநிறுத்து என்பதாகும்.

– சிவகீதை

*கடல்கடந்து கொண்டு சென்றானே – காதகன்*
*கற்பரசி சீதை பொன்மானை*
*நடை நடந்து வெதும்புகின்றானே – இராமன்*
*நலிவடைந்து மனம் தளர்ந்தானே*

*ஆதிசித்தன் தாள்பணிந்தானே – இராமன்*
*ஆதிதந்தை ஆதத்தின் பேரன்*
*ஓதி நமசிவயம் என்றானே – அயோத்தி*
*ஓங்கும் புகழ் ஜனகன் மருமகன்*

*சிதம்பரத்தை வந்தடைந்தானே – இராமன்*
*சிவபெருமான் பதம் தொழுதானே*
*பதம் தொழுது அழுதுநின்றானே – துன்பம்*
*பட்டதேனோ கேட்டழுதானே!*

*மனிதனாக பிறந்துவிட்டாலே – இராமா*
*வாழ்வில் இன்ப துன்பம்உண்டாமே!*
*தனித் தலைவன் சிவன் அவன் – ஆதம்*
*தன்னைதான் உணர சாந்திஎன்றானே!*

*இழந்தவளை திருப்பிப் பெற்றாலும் – உந்தன்*
*இதயத்தில் நீ எனைமறந்தாயோ*
*உழன்றுன்று வதைபடுவாயே – இராமா*
*உலகியல்பு! என்றுரைத்தானே!*

சிவன்ஆதம் பேச்சின் உண்மையை  – இராமன்
சிந்தைகொண்டு யோசிக்கின்றானே
சிவோஹம்     என்ற மந்திரத்தையும்  – இராமன்
திரும்ப திரும்ப உச்சரித்தானே!

ஓதிமகன்     முகம்மதீன்     பெயரை – ஆதம்
உற்றவளை பெற்றதைப்போல
நீதிராமன் மு     ஹம்     மதை ஓதி – காதல்
சீதையையும் திரும்பப் பெற்றானே!

சிவோஹம் என்றால் பரனைநெஞ்சிலே  – சிறிதும்
கிலேசம் இன்றி இருத்தல் அர்த்தமே
அவனை சிவன்     ஹம்     என்றதால்  – இராமன்
அன்று மு     ஹம்     மதை அறிந்துகொண்டானே!



# போதிமரத்தடி புத்தன் ஓதிய முகம்மத் (ஸல்)

போதி மரத்தடியில் ஞானம் பெற்ற முனிவராகிய கௌதம புத்தர் கி.மு. 483–ம் ஆண்டு காசிக்கு வடக்கே குசிநகரில் காலமானார். ஆனந்தர் முதலான தமது சீடர்களுக்கு வழங்கிய இறுதி உபதேசத்தில் அரபுப் பாலையில் தமக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின் மத் முகம்மத் – புகழுக்குரியவர் என்ற நாமமுடைய தீர்க்கதரிசி பிறந்து உலகமக்களுக்கு ஞானோபதேசம் புரிவாரென அம்மாமுனிவர் உரைத்ததாக புத்தமத நூல்களில் தகவல்கள் கிடைக்கின்றன.

பார்க்க – கவிசுவ மண்டல கோசம்

*சாக்கிய முனிவனாம் புத்தன் - அந்த*
*சாந்த சொரூபியின் ஞான*
*வாழ்க்கை முடிவினில் நடந்த - நல்ல*
*வழக்கை எடுத்தோது வோமே*

*வைசாலி நகரத்தை நீங்கி - அந்த*
*வனிதை அம்பாலியை பிரிந்து*
*வைசாக பூர்ணிமை நாளில் - நிறைமதி*
*வானத்தில் பூத்திடும் இரவில்*

*ஹிரண்ய நதிகரைக் கடந்து - குசிநகர்*
*எல்லையில் சாந்திகொண்டாரே*
*மரணம் அண்மித்த செய்தி - சீடர்கள்*
*மத்தியில் எடுத்து ரைத்தாரே*

*சால மரங்களுக்கிடையில் - கோமான்*
*சாய்ந்து படுத்துக் கொண்டாரே*
*ஞால முழுதும் வணங்கும் - பகவான்*
*நல்லுரை உபதேசி த்தாரே*

பிட்சுக்களே செவி மடுப்பீர் - எந்தன்
பிரிவில் கலங்கிட வேண்டாம்
நிச்சயம் மரணம் எல்லார்க்கும் - அதை
நீக்கிட இல்லைஓர் மார்க்கம்

உடல் சாய்ந்து படுத்தபின் - உடலில்
உண்டான பூதங்கள் மடியும்
பிடிமண்ணாய் தசைஎலும்பாகும் - உடலில்
பீரிடும் இரத்தம் நீராகும்

மூச்சோட்டம் காற்றோடு சேரும் - உடலில்
உணர்வாம் கனல் வெளியேறும்
போச்சென்று உலகினர் புலம்பும் - அந்த
புரியாத ஆன்மா அது அழியாது

கோவென்று கதரி யழுகின்றார் - எமக்கினி
கோமானே யாருண்டு கேட்டார்
சாவென்று நடுங்கா தீரெ ன்றார் - நமக்குள்
நானென்ற அதுசாகா தென்றார்

பாலை வன மணல்பரப்பில் - ஒரு
பார்த்திபன் வர இருக்கின்றான்
காலத்தின் கடைசி முனிவன் - அவன்
கடையுக ஏசு முகம் மத் இறைதூதன்

ஞானத்தின் தலைவன் அக்கோமான் - அவன்
நாடுவோர்க் கெல்லாம் பரந்தாமன்
சீலத்தில் சிறந்தப் அப்பெருமான் - முத்திக்கும்
சித்திக்கும் எஜமானாம் என்றார்

**முகம்மதை இயேசுவின் வரவை - அன்றே**
**முன்னறிவித்தவன் புத்தன்**
**மகிழ்ந்தவன் திருநாமம் போற்றி - பௌத்த**
**மாந்தரையும் போற்றிடுவோமே!**
**(மெத் - மெஸ்ஸையா - இயேசு! மத் - முகம்மத்!)**

# ஏசுமைந்தன் நேசமுகம்மத் (ஸல்)

இறைதூதர் ஈசா (அலை) ஏசுபிரானுக்கும் அவரது பக்தை மகதலேன் மரிக்கும் பிறந்த புனிதவதி சாராவின் குலவழியினர், கி.பி. 2–ஆம் நூற்றாண்டில் ஜெருசலத்தில் ஏற்பட்ட கலகத்தை அடுத்து அந்நகரத்தை விட்டு வெளியேறிய யூதர்களோடும் கிருஸ்துவர்களோடும் உலகின் பலபகுதிகளுக்கும் சிதறிச்சென்றனர்.

அரபகத்தில் புகுந்த பல குடும்பத்தினர் மாமதினா நகரத்தை ஒரு பாலைவனப் பசுஞ்சோலையின் கரையில் உருவாக்கினார்கள். அவர்களில் நெஸ்தூரியன், ஈரியன், ஸபல்லியன் கோத்திரத்தார் கலந்திருந்தனர். அவர்கள் தங்களை சாந்திமிகும் மூசா (மோசே) ஹாருன் நபிமார்களின் சந்ததிகள் என கூறிவந்தனர் .

அரபுகளில் அவுஸ் கஸ்ரஜ் கோத்திரத்தினர் அங்கு வாழ்ந்து வந்தனர். அந்நாட்களில் அரபுகளுக்கும் யூதர் கிருஸ்துவர்களுக்கும் நெருக்கமான உறவு இருந்துவந்ததாக வரலாறு கூறுகிறது.

கலந்து வாழ்ந்த யூத கிருஸ்துவ அரபின மக்களிடையே ஜுஹரா என்ற கோத்திரத்தில் மரியா மகதலேனின் மகள் சாராவின் சந்ததியில் அண்ணல் முகம்மத் (ஸல்) அவர்களின் அன்னை ஆமினா பிறந்தார்கள்.

*கல்வாரி மலைமேல் கருமுகில் கூட்டம் படர்கிறது*
*காருண்ய ஏசு அருள்முகம் கண்டு குளிர்கிறது*
*மெல்லிடை கொடியாள் மகதலேன் மரியின் பசும்பார்வை*
*மீண்டும் தோன்றிய ஏசுவைப் பார்த்ததும் பனிக்கிறது*

*கல்லறை யிட்டு கதவடைத்தார்கள் கடுமனத்தார்*
*கார்முகில் போலும் கண்முன் தோன்றினார் ஏசுபிரான்*
*சொல்லுரை பகர்ந்தார் மரியா! நானும் மரிக்கவில்லை*
*சுகமேபரமன் வானில் உயர்த்தினன் உணர்ந்து கொள்வாய்*

பந்தலில் படர்ந்த திராட்சை கொடிபோல் அழகுடையாள்
பைத்துல் முகத்தஸ் ஆலயப் படிபோல் பணிவுடையாள்
அந்தமில் வான தொடுகரை போலும் விழியுடையாள்
அன்பெனும் மடியில் ஏசுவை அறிந்த கார்குழலாள்

காதலர் ஏசு பாதம் பணிந்தாள் நேசமரி!
கருணையங் கடலே! கற்பத்தில் உமதுயிர் கலங்குகிறாள்!
மாதுளங் கனியே! அமைதி! உன்கருவில் நமதுமகள்
மறுமை நாளின் தருமகுமாரன் அவள் கொடியில்!

பேரின்ப மோசே ஆப்ரஹும் பேரத் திருக்குமரன்
பிறவாப் பிறையின்று பின்னாளில் பவுர்ணமிப்  போல்வருவான்
பேரின்ப ஜோதீ நின்மகள் குலவழி மகள்மகனாம்
இறைதூதின் முடிவு அவனோடு என்பது  இறைமுடிவாம்!

காரணமாகிய அவன்பெயர் புகழ் அகமத் முஹம்மது
கர்த்தரின் ஆதி ஆலய பரிசுத்தப் பரிகாரன்
நேரான சட்டத்தை உலகுக்கு உணர்த்தும் அவதாரன்
நின்மகள் சாரா குலவழி ஆமினா சிசுபாலன்

ஆமென்     று ரைத்து அண்ணலர் ஈசா விண்புகுந்தார்
அருள்நிறை மகத லேன்மரியாளின் மகள் சாரா
தூய்மையாம் கருவில் தோன்றிய கோத்திரமாம்  ஜூஹ்ரா
தோன்றல் முகம்மது தாய்வழி கண்டீர் புவியோரே!



தீர்க்கதரிசிகளின் தந்தையார் என்று உலகம் புகழும் நபி இபுறாகிம் (அலை) அவர்களின் வரலாறு உலகம் அறிந்த ஒன்றாகும். அவர்களின் மைந்தர்களில் ஹாஜிரா அம்மையார் பெற்ற நபி இசுமாயில் (அலை) அவர்களின் அறுபதாவது தலைமுறையில் அப்துல் முத்தலிபின் மைந்தர் அப்துல்லாவின் மைந்தராக பெருமானார் முகம்மத் நபி (ஸல்) பிறந்தார்கள்.

இந்த வம்சாவழி இஸ்மாயில் நபியின் பன்னிரண்டு மைந்தர்களில் கேதார் என்ற ஹைதரில் தொடங்கி, ஜமால், பபெய்ல், பின்தா சல்மான், ஹம்யாஸா, ஆது, ஆதி, அதினான் என தொடர்ந்து இரண்டாயிரம் வருஷத்துக்குப்பின் குஷை, அப்துல் முனாஃப், ஹாசிம், அப்துல் முத்தலிப், அப்துல்லா என்று நீள்கிறது.

பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த தந்தை வழி முன்னோர்களில் யாரும் தீர்க்கதிரிசிகளாய் இருந்ததில்லை. பெரும்பாலானோர் வியாபாரிகள். இவர்களின் கருவழியில் இறைவன் பெருமானார் (ஸல்) அவர்களின் நுபுவத் என்னும் தீர்க்கதரிசன பண்பை மாற்றி மாற்றி கொண்டு வந்தான் என்று இஸ்லாமிய கிரந்தங்கள் புகழ்ந்து வருகின்றன.

நுபுவத் என்கின்ற தீர்க்கதரிசன பண்பு, முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களுக்கு அனைத்து பெயர்களையும் (அறிவையும்) கற்று கொடுத்தோம் – என்று குர்ஆனில் இறை கூறும் பலவகையான அறிவுகளில் ஒன்று தான் என்ற கருத்தில் யாருக்கும் மாற்று கருத்து இருக்கமுடியாது.

இது கவித்துவமல்ல ஆனால் அதைப் போன்ற வேறொரு அறிவைசார்ந்த புனிதப் பண்பு தான். அதனால்தான் பெருமானார்(ஸல்) நான் உங்களைப் போன்ற மனிதன் தான் இறைவனிடமிருந்து வஹி என்னும் உள்ளொளியறிவு என் இதயத்தில் இறங்குவதை தவிர என்றார்கள். இது விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி அறிவியல் பண்பல்ல. இது கலைஞர்களின் இலக்கிய ஓவிய பண்பல்ல ஆனால் அது போன்ற வேறொரு மனிததெய்வீகப் பண்பு என்று கூறலாம்.

எனவேதான் வஹ்தத்துல் உஜூத் என்ற ஏக உள்ளமை தத்துவ சித்தாந்தத்தின் முன்னவர் ஷெய்குல் அக்பர் முகியித்தீன் இபுனுல் அரபி அவர்கள் வஹி என்ற தீர்க்கதரிசனத்தை பற்றி ஃபுத்துஹாத்துல் மக்கியா என்ற தன்னுடைய நூலில் பின் வருமாறு கூறுகிறார்கள்.

திருக்குர்ஆன் என்பது வானத்தில் உள்ள அல்லாஹ் என்ற நபர் எழுதி போட்ட கடிதம், இதனை முகம்மத் என்னும் அரேபியருக்கு ஜிப்ரீல் என்ற தபால்காரர் கொடுத்து பட்டுவாடா செய்தார் என்பது பாமரத்தனமான கருத்தே தவிர உண்மையல்ல என்று கூறுகிறார்கள்.

நுபுவத் என்ற தீர்க்கதரிசனம் இறைதூதுத்துவ வேத வெளிப்பாடு அல்லது வேத வசன கிரகிப்பு என்பதெல்லாம் பரம்பொருளுடன் நெருக்கம் (குருபே இலாஹி) என்கின்ற மனித பண்பினால் ஏற்படும் விளைவுகள் என்று இபுனுல் அரபி விளக்குகிறார்கள்.

நபி இபுறாஹிம் (அலை) அவர்களுக்கும் அவர்களின் மனைவி சாராவுக்கும் பிறந்த நபி ஈசாக்கு (அலை) அவர்களின் சந்ததியில், நபிமார்கள் யாகூபு(அலை) யூசுப்(அலை) யூனுஸ்(அலை) ஐயூப்(அலை) மூசா(அலை) தாவூத்(அலை) சுலைமான்(அலை) ஈசா(அலை) முதலிய பதினைந்து தீர்க்கதரிசிகள் தோன்றியுள்ளனர். இவர்களிடம் நுபுவத் என்னும் தீர்க்கதரிசன பண்பு சந்ததி சந்ததியாக தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது.

நபிமார்களின் முத்திரை இறுதி தீர்க்கதரிசி என்ற பெருமைக்குரிய எம்பெருமான் முகம்மது நபி (ஸல்) அவர்களின் தந்தை வழி, நபிமார்களின் தந்தை நபி இபுறாகிம்(அலை) அவர்களை சென்றடைகிற பெருமையை பேசிக் கொண்டிருக்கும் ஆணாதிக்க சமுதாயம், அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் தாயார் ஆமினா அவர்களின் முன்னோர்கள் யார் என்று ஆராயாமல் விட்டுவிட்டது வேதனைக்குரியது.

அன்னை ஆமினா அவர்கள் யத்ரிப் என்னும் மதினா நகரில் ஜொஹ்ரா என்னும் குலத்தினரின்

தலைவரான வஹ்ப் பின் அப்துல் முனாஃப் என்பாரின் மகள், தன் சிறிய தந்தையரான உஹைறுடன் இவர்கள் மக்கா வந்திருந்தபோது அப்துல் முத்தலிப் அவர்கள், இம்மங்கையரை தம் மைந்தர் அப்துல்லாவுக்கு மணம்பேசி முடித்தார்கள்.

அன்னை ஆமினா அவர்களைப் பற்றி கிடைக்கும் அதிகபட்சமான தகவல்கள் இவ்வளவுதான். ஆனால் அன்னையின் அன்னை யார்? அவர்களின் தாயாரும் பாட்டி யாரும் பூட்டியாரும் யார்? இந்த கேள்விகளுக்கு பதில் கிடையாது.

ஏனெனில் உலகமுழுவதிலும் ஆணாதிக்கம் நிலவுகிறது. உலகில் எல்லா திசைகளிலும் இதுதான் உண்மை. உலகம் போற்றும் உத்தமன் இராமபிரானின் தந்தை வழியைக் கூட பல அடுக்காக சொல்கிறார்கள். அவனது உத்தம மனைவி கற்புக்கரசி சீதையை ஜனகனின் மகள் என்பார்கள். சீதையின் தந்தை வழியை சொல்வார்களே தவிர தாய்வழியை சொல்ல மாட்டார்கள்.

ஆனால் அறிவியலின் ஒரு உண்மையை நினைத்து பார்க்க மனித சமுதாயம் கடமைப் பட்டிருக்கிறது. ஒரு மனித கரு உருவாவதற்கு ஒரு ஆணின் கருவிலிருந்து இருபத்து மூன்று மரபணுக்களும் பெண்ணின் கருவிலிருந்து இருபத்து மூன்று மரபணுக்களும் கட்டாயமாகத் தேவைப்படுகின்றது.

உயிரின் இரகசியம் என்று அறிவியல் கருதும் ஆண் பெண்ணின் மரபணுக்களின் இணைவுதான் கரு உருவாவதற்கும், கரு வளர்ந்து மனிதனாகும்போது அவன் உடல் அமைவுகளுக்கும் உள்ள குணப்பண்புகளுக்கும் அடிப்படை காரணமாயிருக்கிறது. மனித சமுதாயம் பெண்ணின் மரபணுவுக்கு முக்கியம் தராமல் மிகப் பெரிய துரோகம் செய்கிறது.

பெருமானார் (ஸல்) அவர்களின் தந்தையார் அப்துல்லா அவர்களின் தந்தைவழி முன்னோர்கள், நபி

இபுறாஹிம் (அலை) அவர்களின் மகனார் இசுமாயில் (அலை) அவர்களின் சந்ததி என்று உறுதிப்படுத்தி பெருமைப் படுகின்றோம்.

அதே நேரத்தில் எம்பெருமானின் தாயார் புனிதவதி அன்னை ஆமினாவின் தாய்வழி முன்னோர்கள், நபி ஈசா (அலை) அவர்களுக்கும் அவர்களின் சிஷ்யையான காதலியர் புனிதவதி மரியா மகதலேனாவுக்கும் பிறந்த மகள் சாராவின் சந்ததியினர் என்பதை காலம் மறைத்திருப்பது வரலாற்றின் வஞ்சனையாகும் என்று உணர்ந்துகொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

நபி பெருமான் ஈசா (அலை) அவர்களின் கால கதிக்குப் பிறகு நூற்றைம்பது ஆண்டுகளில் ஜெருசலத்தில் ஏற்பட்ட பெரும் கலகத்தை அடுத்து அங்கிருந்து வெளியேறிய யூத கிருஸ்துவ அப்பாவி மக்கள் உலகில் பல பகுதிகளுக்கும் சிதறிச் சென்று குடியேறினர்.

அவர்களில் நெஸ்தூரியன், செபலியன், ஈரியன் என்ற குலவழியினரோடு, புனிதவதி மகதலேன் மரியாவின் மகள் சாராவின் சந்ததிகள் குடிபெயர்ந்து, அரபு பாலை நிலத்தில் புகுந்து ஒரு பாலைவன பசுஞ்சோலையின் கரையில் மதினமாநகரத்தை உருவாக்கினவர்களோடு சேர்ந்து வாழ்ந்தார்கள்.

அந்த யூத கிருஸ்துவ சமுதாயங்களிடையே அரபுகளின் இனகலப்பில் தோன்றிய ஒரு பெண்மணியின் வழியில், ஈசா(அலை) அவர்களின் தீர்க்கதிரிசன மரபணுவை ஏந்தியவர்களாக அன்னை ஆமினா மதினாவில் உதித்தார்கள். காலம் கடந்து புரிந்துகொண்டாலும் உண்மை உண்மையே.

பெருமானார் (ஸல்) அவர்கள் படிப்பறியாத பாமரர் எனினும் அவர்களை பாராளும் இறைவன், அறிவார்ந்த மேதை நபி இபுறாஹிம் (அலை) அவர்களின் சந்ததிகளில் வஹி என்னும் நுபுவத்துவ அறிவைகொடுத்து குர்ஆன் வேதத்தை அளித்து மதப்பேரறிஞர் ஆக்கினான் என்று வரலாறு கூறி வருகிறது.

அது உண்மை என்றாலும் மேலை நாட்டு அறிஞர்கள், விவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளில் உள்ள அதாவது தவுராத், ஐபுர், இன்ஜில் என்று கொண்டாடப்பட்டு வரும் வேதபோதங்களில் உள்ள வசனங்கள் திருக்குரானில் எதிரொலிப்பதால்,

முகம்மத் சிறுவயதில் சிரியா சென்ற போதும் பின்னர் கதிஜாவின் சகோதரரான வரகா இபுனு நௌபல் என்ற பாதிரியாரிடமிருந்தும் பைபிளை ஓதி உணர்ந்து பின்னர் திருக்குர்ஆன் வெளிப்படுவதற்கு பயன்படுத்தினார் என்று பேசுகின்றனர்.

ஆனால் அண்மையில் கிடைக்கும் ஆய்வுகள் ஈசா(அலை) அவர்களின் மகளான சாராவின் சந்ததிகளை முன்னோராக கொண்ட அன்னை ஆமினாவின் மரபணுக்கள் தான் முகம்மத் நபி (ஸல்) அவர்களின் தீர்க்கதரிசன மகத்துவத்துக்கு காரணமென்று தெளிவுபடுத்துகின்றன.

இந்த ஆய்வுகளின் அடிப்படையில் பார்க்கும் போது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த நபித்துவ ஜோதி நபிமார்களின் தந்தையான நபி இபுராஹிம் (அலை) அவர்களிலிருந்து இரண்டு வழிகளில் பிரிந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பிறகு இணைந்து வந்தடைந்திருப்பது புலனாகிறது.

தந்தையர் வழியாக கிடைத்த அதன் பாதி, நபி இஸ்மாயில் (அலை) அவர்களில் தொடங்கி அறுபது தலைமுறைகளில் குரைஷிகளின் வம்சத்தில் அப்துல் முனாப், அப்துல் முத்தலிப், அப்துல்லா என்று தொடர்ந்து வந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவ ஜோதியின் மறுபாதி, நபி இபுறாஹிம் (அலை) அவர்களின் மற்றொரு மைந்தர் நபி ஈசாக்கு(அலை) அவர்களில் தோன்றி, பதினைந்து நபிமார்களின் வழியாகவும், மேலும் குறிப்பாக தௌராத் என்னும் வேதம் கொண்ட நபி மூசா (அலை) அவர்களின் சகோதரர் வழியிலும், ஐபுர் வேதம்

கொண்ட நபி தாவூத்(அலை) அவர்களின் வழியிலும் தொடர்ந்து,

நபி தாவூத் அவர்களின் சந்ததியில் தோன்றிய மரியம்மையின் மகனாரான இன்ஜில் வேதம் கொண்ட நபி ஈசா (அலை) அவர்களின் கருவை சுமந்த காதலியர் மகதலேன் மரியாளின் மகள் சாராவின் வழியாக புனிதமிகு அன்னை ஆமினாவின் மரபணுக்களாக வளர்ந்து தந்தையர் அப்துல்லாவின் மரபணுக்களோடு சங்கமித்து,

இருகண் குளிர்ந்த இதயஜோதி இறைஅரசின் (அர்ஷின்) தலைவர் முகம்மத்(ஸல்) என்னும் புனித மனித கருவாக, இன்சானே காமில் –சம்பூரணம்பெற்ற சாந்தி மனிதராக, இறுதி இறைதூதராக நபிமார்களின் முத்திரையாக, மறைபுகழ இறைபுகழ உலகில் வெளிப்போந்தது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் பெருமானார் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் என்னும் மதினா வருகையை மக்காவில் குர்ஆன் வசனங்களாக முன்னறிவித்த இறைவன் பின்வருமாறு கூறியுள்ளான்,

**(மதினாவில்) வேதம் கொடுக்கப்பட்ட (யூதர், கிருஸ்துவர்களிடையே) முகம்மதாகிய இவர் வரும்போது, இவரை, தங்கள் குழந்தையை பெற்றோர்கள் அடையாளம் காண்பதுபோல கண்டுகொள்வார்கள்**

– (திருக்குர்ஆன் 6:20)

அதாவது முகம்மத் தமது முன்னோர்களும் நபிமார்களுமான நபி மூசா, நபி தாவூத், நபி ஈசா ஆகியோரின் சந்ததியில் பிறந்தவர் என்று மதினாவில் வசித்துவரும் வேதம் கொடுக்கப்பட்டவர்களான யூதர்களும், கிருஸ்துவர்களும் கண்டுகொள்வார்கள். இவ்வாறு திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.

மாதாவின் காலடியில் மணிசுவர்க்கம் என்பது அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களின் பொன்மொழி. அது பொதுவான பொன்மொழி என்று கூறி விடலாம். ஆனால் எந்த மனிதரின் வாயிலிருந்தும் சொந்த அனுபவம்தான் பொன்மொழியாக வரமுடியும்.

பெருமானார் முகம்மத் (ஸல்) அவர்களின் தன் பெற்ற தாயுடனான வாழ்க்கை அனுபவமென்பதென்ன? அவர்கள் பிறக்கும் முன் தந்தையை இழந்தார்கள். பிறந்த ஏழாம் நாளிலேயே தாயின் மார்பில் பால் வரண்டு போனதால் தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு வளர்ப்புத்தாய் அன்னை ஹலிமாவிடம் வளர்ந்தார்கள்.

மூன்று வயதில் ஹலிமாவோடு மதினா திரும்பிய அவர்களை வரவேற்க திருமக்க நகர் தயாராக இல்லை. பின்னர் ஆறு வயதில் ஹலிமாவால் தாயிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள், தாயின் சொந்த பூமியான மதினாவுக்கு சென்று தந்தையரின் புனித கபர் ஷரீப்பை ஜியாரத் செய்துவிட்டு தாயின் உறவினர்களோடு தங்குகிறார்கள்.

இரண்டு மாதத்திற்கு பிறகு மக்கநகர் திரும்பும் வழியில் அபவா என்னும் இடத்தில் தாய் ஆமினாவும் மரணத்தின் கரங்களால் பிடுங்கப்பட்டு பாலகர் முகம்மத் பரிதாப அனாதை ஆகிவிடுகிறார்கள்.

வரலாற்றை வடிகட்டிப் பார்த்தாலும் தன் ஆறு வயது பருவத்தில் மூன்று அல்லது ஆறு மாத காலம் எம்பெருமான் முகம்மத் (ஸல்) அவர்கள் தன் தாயாரோடு வாழ்ந்திருக்கிறார்கள், அல்லது தாயுடன் வாழ்ந்த அனுபவத்தை பெற்றிருக்கிறார்கள்.

அந்த குறைந்த அனுபவத்தோடு அவர்கள் பேசும் மாதாவின் காலடியில் மணிசுவர்க்கம் என்ற பொன்மொழி ஆராயப்பட வேண்டாமா? ஆராயப் புகுந்தால் நம்முன் முனைந்து நிற்பது சுவர்க்கத்தின் திறவுகோல் தொழுகை என்ற அவர்களின் மற்றொரு பொன்மொழியாகும்.

ஆம் சந்தேகமில்லாமல் முகம்மத் நபி (ஸல்) அவர்கள், (ருக்குவு, சுஜூது) குனிந்தும் சிரம்பணிந்தும் இருப்பில் அமர்ந்தும், பிரார்த்திப்பதுடன் கூடிய தொழுகை முறையை தன் தாயிடமிருந்து ஆறு வயதில் கற்று தெரிந்துகொண்டார்கள் என்பதுதான் உண்மையாக இருக்கமுடியும்.

பெருமானார் அவர்களின் அன்னை ஆமினா அவர்கள் ஈசா (அலை) அவர்களின் தாயைப்போல மகத்துவமுடைய மாதரசியாவார்கள். மேலும் இயேசு – மகதலேனின் மகள் சாராவின் வழியில் தோன்றி, அருள்மறை குர்ஆன் வலியுறுத்தி கூறும் சாந்திக்குரிய மூசா, தாவூத், சுலைமான், ஜக்கரியா, யஹியா, ஈசா ஆகிய நபிமார்களிடமும் அன்னை மரியமிடமும் இருந்த (ருக்குவு சுஜூதுடைய) தொழுகை முறையை, தாய் வழி வழியாக அறிந்து உணர்ந்திருந்தார்கள்.

மேலும் இபுறாஹிம் (அலை) அவர்களிலிருந்து தொடர்ந்து வரும் ஹனிஃபுகள் என்னும் ஏகத்துவவாதிகளின் தவ முறையான, சுஜூது செய்யும் இடத்தில் பார்வையால் உற்று நோக்கும் பரஞ்ஜோதி தவயோகத்தை அன்னையிடமிருந்தே பெருமானார் (ஸல்) அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

இது வரலாற்றால் புறக்கணிக்கபட்டிருக்கும் உண்மை. எம்பெருமான் முகம்மத் (ஸல்) அவர்கள், இபுறாஹிம் (அலை) அவர்களுக்கும், நபி இஸ்மாயில் (அலை) அவர்களுக்கும் மட்டுமே பேரனார் அல்ல. நபி மூசா, நபி தாவூத், நபி சுலைமான், நபி ஈசா (அலை) ஆகியோருக்கும் குலவழி பேரனார் ஆவார்கள்.



# அன்பெனும் அவதாரம்

மக்கமாநகரில் கி.பி. 571–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் நாள் ரபியுல் அவ்வல் மாதம் 12ம் பிறை நாள், அப்துல்லாவாகிய தன் தந்தை மறைந்து சில மாதங்களில் ஆமினாவின் மணி வயிற்றில் பிறந்தார்கள் அண்ணலர். ஆப்ரஹம் என்று விவிலியம் புகழும் இப்ராஹிம் நபி(அலை) மைந்தர்கள் இஸ்மாயில் நபி, இஷ்ஹாக் நபி ஆகியோரின் சந்ததியினரின் சந்திப்பில் முழுமதியாக பிறந்தனர்.

*அன்பின் தெளிவே முஸ்தபா*
*அன்பே முகம்மது முஸ்தபா*

*மக்கமா நகர் பதியிலே*
*மாதர் ஆமினா கருவிலே*
*துக்க மாகிய அப்துல்லா*
*சுத்த மாதவ ஜோதியாய்*
*புக்குப் பிறந்தது ஆதியே*
*புவன ரட்சக நீதியே*
*திக்கும் திசைகளும் புகழவே*
*தெய்வ மானது பிறந்தது*

*ஈனமில்லாப் பொருள் முஸ்தபா*
*ஏந்தல் முகம்மது முஸ்தபா*
*ஊனும் உயிரும் முஸ்தபா*
*உள்ளுள் உலாவும் முஸ்தபா*
*நானும் நீயும்தான் முஸ்தபா*
*நமக்குள் முகம்மது முஸ்தபா*
*ஆனவம் கடந்தது முஸ்தபா*
*அன்பின் தெளிவே முஸ்தபா*

*அன்பின் தெளிவே முஸ்தபா*
*அன்பே அகுமது முஜ்தபா*
*அன்பின் தெளிவே முஸ்தபா*
*அன்பே மஹ்முது முர்தளா*

# வான தலைவன் வடித்த கண்ணீர்

முகம்மதெம்மான் பிறந்த மூன்றாம் நாளில், கணவரிழந்த தாய் ஆமினா தன் குழந்தையின் முகம் பார்த்து கனிந்து அழுகின்றார்.

தாயின் அழுகையை கண்டு பச்சிளம் குழந்தை முகம்மத் தன் சொல்லறியா மழலை மொழியால் பேசுகிறது.

*தாயே ஏனம்மா அழுகிறாய் - நான்*
*தங்க குவியல் தரட்டுமா?*
*நீஏன் அம்மா அழுகிறாய் - நான்*
*நிலவை பிடித்து தரட்டுமா?*

*விழியால் மைந்தன் பேசுவதை - தாய்*
*வினோத மாக கேட்கிறார்*
*மொழியால் பேச முடியவில்லை - மைந்தன்*
*முகத்தில் முத்தம் பொழிகிறார்*

*மூன்றாம் நாளின் முகம்மதாம் - பிள்ளை*
*முகத்தின் ஒளியும் முழுநிலவாம்*
*ஈன்றெடுத்த தாய் ஆமினா - அந்த*
*இன்பத்தை பார்த்து அழுகிறார்*

*பதில் பேசாத தாய் முகத்தை - அந்த*
*பாலனும் பார்த்து சிரிக்கின்றார்*
*புதிராய் ஏனம்மா பார்க்கின்றாய் - உன்*
*புத்திரன் யாரென்று புரியாமல்?*

*பறக்கும் குதிரை இரண்டுனக்கும் - நான்*
*பரிசாய் கொண்டு வரட்டுமா?*
*துறக்கம் சென்ற என் தந்தையரை - ஒரு*
*நொடியில் சென்று நீ கண்டுவர!*

சொல்லறியாத மழலையாய் – தன்
சொந்த குழந்தை பேசிடவே
மெல்லியலார் அந்த தாய்முகத்தில்
மின்னலென ஒளி வீசியதாம்

அழுத கண்ணீரும் மாறியதாம் – அன்னை
ஆமினா முகமும் சிரித்ததாம்
தொழுது மைந்தன் பாதத்தை – அந்த
தூய மாதுளம் நிறைந்ததாம்

அகிலம் முழுதும் ஆளவந்த எந்தன்
அருமை மகனே நன்றி நன்றி
முகம்மதே எந்தன் ஆசை முத்தே – உந்தன்
முகத்தில் உன் தந்தை சிரிக்கின்றார்

அழுதும் சிரித்தும் பேசுகின்ற – அந்த
அன்னையை பார்த்து பாலகனும்
தழுதழுத்த இசை கேட்டு – வான
தலைவனும் கண்ணீர் வடிக்கின்றான்!



# தாயை மறைத்த மாயப் பிரபஞ்சம்

விதவையாகிய ஆமினா மாமனார் அப்துல் முத்தலிபின் ஆதரவில் மைந்தர் முகம்மதை வளர்த்துவந்தார். பாலகர் நான்கு வயதுவரை ஹலீமா என்னும் செவிலித் தாயிடம் பால் குடித்து வளர்ந்தார்கள். ஆறாம் வயதில் அன்னையுடன் தந்தை அப்துல்லாவின் மண்ணறையை தரிசனம் (ஜியாரத்) செய்துவர மதினம் சென்று திரும்பும் போது அபவா என்ற இடத்தில் அன்னையும் மரணமடைந்தார். உம்மு ஐமன் என்ற பணிப்பெண்ணுடன் துயரே உருவாய் மக்கநகர் நோக்கி பாலை மணலில் நடந்த பாலகர் முகம்மதின் இதயத்தில் பரமன் வந்து புகுந்தான்.

*ஓடி விளையாடும் பருவம் - அன்னை*
*உருவமே மனம்கொண்ட பருவம்*
*பாடிக் களிக்கின்ற பருவம் - அன்னை*
*மடியே சுகமென்ற பருவம்*

*பாலர் முகம்மதின் பருவம் - அந்த*
*பருவத்தில் வந்தது துயரம்*
*காலில்லா இஸ்ராயீல் உருவம் - தாயை*
*கடத்திய தேன்விதி அறியும்!*

*தந்தையின் முகம் பார்த்ததில்லை - பாசத்*
*தாயின் முகமின்று இல்லை*
*அந்த அனாதையாம் பிள்ளை - அதன்*
*அறிவில் தெய்வத்தின் எல்லை :*

*நீயே எனக்கிங்கு யாவும் - அல்லா*
*நீயே தந்தையும் தாயும்*
*மாயப் பிரபஞ்சம் மாயும் - அல்லா*
*மறவாதே என்னை நீயும்!*

*காலை கதிரவன் உதயம் – கடவுள்*
*கருத்தினை தனக்குள்ளே பதியும்*
*பாலர் முகம்மதின் இதயம் – அங்கு*
*பரம்பொருள் கண்டது உதயம்!*



# தாய் வேண்டும் இறைவா!

பத்து வயது அனாதை பாலகரான முகம்மத் சிதைந்து கிடந்த கஅபா என்னும் ஆலயத்தில் ஏறிநின்று விண்ணில் வாழும் தன் அன்னையையும் தந்தையையும் எண்ணிப் பார்க்கின்றார். பாலர் முகம்மதின் சிந்தையிலே ஒரு ஒளிஒலி காட்சி விரிகிறது.

*பத்து வயது அனாதையம்மா – அந்த*
*பாலர் முகம்மதின் சிந்தையிலே*
*சித்திரம் ஒன்று எழுந்ததம்மா – அதை*
*சிந்தித்தால் நமக்கும் துக்கமம்மா!*

*வான நாட்டிலோர் வீதியிலே – அந்தி*
*மாலை மயங்கும் பொழுதினிலே*
*மானும் வெட்கிடும் எழிலுடையாள் – எந்தன்*
*மாதா பயணம் போகின்றாள்*

*விரையும் பல்லக்கில் ராணியைப்போல் – அன்னை*
*வீற்றிருக்க அதன் பக்கத்திலே*
*தரைமேல் பறக்கும் குதிரையிலே – என்*
*தந்தையும் தொடர்ந்து போகின்றார்*

*யாருமில்லா வெற்று கானகமாம் – என்*
*தந்தையும் தாயும் பயணிகளாம்*
*நேரமில்லா அந்த நேரத்திலே – என்தாய்*
*நெற்றி சுருங்கிடப் பார்க்கின்றார்!*

*ஆருயிரே எந்தன் ஆமினம்மா – முகத்தில்*
*அச்சம் ஏன்? தந்தை கேட்கின்றார்*
*ஒருயிரே என் உள்ளுணர்வே – என்னை*
*ஓவியமாக்கிய தாயாரே*

தாங்கள் கூறிடும் பதில்மின்னல் – என்னை
தாக்கிடுதே நான் என்ன செய்வேன்?
போங்கள் எனக்கொன்றும் அச்சமில்லை – எந்தன்
புத்திரன் நினைவே என் துன்பம்! என்றீர்

தந்தையும் மௌனம் ஆகின்றார் – என்
தாயே மீண்டும் புவிவருவீரா?
சுந்தர தாய்முகம் நான்பார்த்து – மடியில்
சுகமாய் படுத்து புரள்வேனா?

பத்து வயது அனாதையம்மா – அந்த
பாலர் முகம்மதின் சிந்தையிலே
சித்திரம் அன்று எழுந்ததம்மா – அதை
சிந்தித்தால் நமக்கும் துக்கமம்மா

இருண்ட நள்ளிரா வேளையிலே – சொர்க்க
ஏகாந்த மாளிகை பள்ளியிலே
மருண்டு தூக்கத்தில் எழுகின்றீர் – என்
மாதா உமைதந்தை தேற்றுகின்றார்!

ஏனோ உமக்கும் பயம்நங்காய் – அந்த
இறைவன் நமக்கும் துணை என்றார்
ஆனால் நீரோ என்தாயே – பயமா
அல்ல என்மகன் நினை வென்றீர்!

தந்தையும் தன்தலை குனிகின்றார் – உமக்கும்
சாந்தியை எப்படி அவர்தருவார்?
எந்தையுடன் அம்மா சென்றுவிட்டீர் – நான்
இருக்கின்றேன் புவியில் என்செய்வேன்?

**பத்து வயது அனாதையம்மா – அந்த**
**பாலர் முகம்மதின் சிந்தையிலே**
**சித்திரம் அன்று எழுந்ததம்மா – அதை**
**சிந்தித்தால் நமக்கும் துக்கமம்மா**

மறுநாள் காலை பொழுதினிலே – அந்த
மல்லிகை தோட்ட வீட்டினிலே
நிறைஎழில் ஹூர்லின் பெண்களுடன் – அம்மா
நீங்களும் அமர்ந்து இருக்கின்றீர்!

கையில் மந்திர கோல்கொண்டு – என்
தந்தை தோன்றி கூறுகின்றார்
பொய்யில்லை ஆமினா அறிவாயோ – அந்த
புவிஒருபொய் இந்த சொர்க்கம்மெய்

நீரோ வானத்தைப் பார்த்தபடி – ஒரு
நீண்ட பெருமுச் செறிகின்றீர்
பார் வேண்டேன் சுவனப்பதிவேண்டேன் – என்
பாலகன் தான்என் வேட்கை யென்றீர்

அன்னையே தந்தை உமைபார்த்து – உமது
ஆருயிர் பாலகன் உமக்கல்ல
தன்னை புவியினர் அறிந்துகொள்ள – அந்த
தலைவன் வந்து பிறந்துள்ளான்!

உண்மை உணர்ந்து அமைதிகொள்வீர் – என்று
உரைப்பதை யானும் கேட்கின்றேன்
நன்மையும் தீமையும் அவனறிவான் – அந்த
நாயனே எந்தன் நிலைஅறிவான்!

அன்னையே உம்மை நான்மறவேன் – உங்கள்
அன்பை மட்டுமே தான்அறிவேன்
விண்ணில் இறைவனைக் கண்டாலும் – எனக்கு
வேண்டும் என்தாயென்று தான் கேட்பேன்

**பத்து வயது அனாதையம்மா – அந்த**
**பாலர் முகம்மதின் வார்த்தைகளை**
**சித்திரமாய் எழுந்த காட்சிகளை – இன்று**
**சிந்தித்தால் நமக்கும் துக்கமம்மா**

# இறையில்லம் கஅபாவில் ஏகாந்த கனவு

வளர்ந்து வந்த இளவல் முகம்மதை மக்கள் அவருடைய நன்னடத்தை கண்டு புகழ்ந்து பாராட்டினார்கள். சாதிக் உண்மையாளரென்றும் அல்அமீன் நம்பிக்கைக்கு உரியவரென்றும் பெயரிட்டு மகிழ்ந்தனர். முகம்மதின் தாயகமாம் மக்காவில் ஓர் நாள் ..

*கலனாகி கிடக்கின்ற கஅபாதன்னை*
*கட்டிநல்ல ஆலயமாய் ஆக்கிகொள்ள*
*பலமாக முடிவெடுத்தார் மக்கத்தார்கள்*
*பலபேரும் கூடிநின்று பணிமுடித்தார்*

*முடிக்கின்ற தருவாயில் ஒருபதட்டம்*
*மூலைக்கல் அதன்பெயரோ ஹஜ்ருல்அஸ்வத்*
*எடுத்து வைப்பதா ரென்று பிரதிவாதம்*
*எமக்கந்த வாய்ப்புஎன்று வர்க்கபேதம்!*

*அந்தியிலே மக்கத்தார் முடிவெடுத்தார் :*
*அதிகாலை வரையிங்கு காத்திருப்போம்*
*வந்தஇரா விடிகையிலே கருக்கிருட்டில்*
*முந்திவரும் நபர்முடிவை ஏற்று கொள்வோம்*

*இரவெல்லாம் காத்திருந்தார் கோத்திரத்தார்*
*இருவிழிகள் திறந்துவழி பார்த்திருந்தார்*
*கருக்கிருட்டில் காலைகதிர் உதிக்கும்முன்னே*
*கஅபாவை நோக்கிஒரு இளைஞர் வந்தார்*

*உற்று உற்றுப் பார்க்கின்றார் உருவம்தன்னை*
*ஒருவாராய் அவர்நெருங்கி வந்தபோதோ*
*சற்றேனும் தயக்கமின்றி மகிழ்ச்சி கூச்சல்*

வந்தஅந்த இளைஞர்தான் முகம்மதாமே
வாடிநின்ற கோத்திரத்தார் பிணக்கறிந்தார்
இந்தப்படி செய்யுங்கள் என்று தோளில்
இருந்திட்ட போர்வைதன்னை தரையிலிட்டார்

மூலைக்கல் அதனைத்தன் கரத்தில் ஏந்தி
போர்வையிலே எடுத்துவைத்து கோத்திரத்தார்
ஆளுக்கொரு பேர்அதனை பிடித்து தூக்க
அவரதனை எடுத்து வைத்தார் பொருத்தமாக

எங்கெங்கும் எழுந்ததடா வாழ்த்துகோஷம்
எமதுஇளைஞர் முகம்மத் புகழ் ஓங்க! என்று
பொங்கும் கரகோஷத்தில் இளைஞர் அங்கு
புகுந்தனராம் கஅபாவில்! எங்கும் இருளாம்!

உயர்ந்தசிலை உருவங்கள் பலதோற்றங்கள்
ஒவ்வொன்றும் ஒருகுலத்தார் வணங்குகின்றார்
பயந்திடாமல் முகம்மதங்கே கூட்டத்தாரை
பார்த்து அந்த அல்லாஎங்கே? என்று கேட்டார்!

அல்லா அதற்கு உருவமில்லை என்று சொல்ல
அதற்கு ஏன் உருவமில்லை? என்று கேட்டார்
இல்லாதது இருப்பது எல்லாம் அல்லா!
இப்ராஹிம் நபி காலப்பழம் கொள்கை

சொல்லி மாந்தர் முடிக்குமுன்னே மயங்கிவீழ்ந்தார்
சுந்தரமாய் முகம்மத்ஒரு கனவு கண்டார்
அல்லாஹு அக்பர் என்ற கோஷம் கேட்டார்
அகில மெல்லாம் ஏகஇறைஒளியை கண்டார்

# முத்தெடுத்த தங்க மங்கை

மக்கா நகரில் பெயரும் புகழும் பெற்ற புரட்சி இளைஞராக வளர்ந்த வாலிபர் முகம்மத் அந்நகரின் கண்ணியம் மிகு சீமாட்டி கதிஜாவின் கவனத்துக்கு வருகிறார்கள். அம்மாதரசியின் கண்ணில் படுகிறார்கள்.

*அவர்தான் அவர்தான் முகம்ம தென்று*
*அன்புத் தோழியர் கூறக்கண்டு*
*இவர்தான் முகம்மதா? எனகதிஜா*
*எட்டிப் பார்த்தனர் சாளரத்தில்!*

*பெண்ணாய்ப் பிறந்திடும் பிள்ளைகளைப்*
*பேணி வளர்த்திட வேண்டுமென்றும்*
*மண்ணில் புதைப்பது பாவமென்றும்*
*வாதம் செய்கிறார் ஒருவாலிபர்!*

*சங்கம் அமைத்து தான் சாடுகிறார்*
*தடுத்து தெருச்சண்டை போடுகிறார்*
*எங்கும் ஊரிலே அவரைப்பற்றி*
*ஏற்றிப் பெண்டிர்கள் பேசுகின்றார்!*

*தோழியர் கூறும் அதிசயத்தை*
*தோகை மயிலாரும் செவிமடுத்து*
*வாழிய வாலிபர்! பெண்சிசுக்கள்*
*வதையைத் தடுப்பவர்! எனநினைத்தார்*

*யாரடி அந்த நல்லபையன்?*
*யானும் காணவே வகைசெய்குவீர்*
*கூறிகதிஜாவும் வாய்மூடும்முன்*
*குறித்த வாலிபர் தெருவில் வந்தார்*

*அவர்தான் வாலிபர் முகம்ம தென்று*
*அன்புத் தோழியர் கூறக்கண்டு*
*இவர்தான் முகம்மதா? எனக்கதிஜா*
*எட்டிப் பார்த்தனர் சாளரத்தில்*

பண்டு பழகியப்பேர் போலவே
மனதில் தோன்றுதே யாரேஇவர்?
கண்ட போதிலே எனக்குள் ஒரு
காதல் உயிர்க்கொடி துளிர்கின்றதே!

விழிகள் விழிகளைத் தொடுகின்றதே
விலக முடியாமல் தவிக்கின்றதே
உறவு கூட்டிலே உயிர்ப்பறவை
ஒன்றோ டொன்றுபோய் அணைகின்றதே!

கைம்பெண் கதிஜாவும் நொடிப்பொழுதில்
கன்னி மலராகிப் பூத்து நின்றார்
இன்ப ஓடையின் நீர்ப்பரப்பில்
இளைஞர் முகம்மதும் நடைஅளந்தார்!

எத்தனை எத்தனை காலங்களாய்
இங்கு உமக்குநான் காத்திருந்தேன்!
இத்தனை நாட்களாய் எங்கிருந்தீர்?
என்முன் வாராமல் மறைந்திருந்தீர்?

உம்மைத் தானே நான்தேடுகின்றேன்
உம்பர் சொர்க்கத்தின் ஆதம்ஹவ்வா
நம்மை அல்லாமல் யாருமல்ல!
நயந்து கதிஜா மனம்பதறும்!

தங்க மங்கையே குரைஷிகுல
தாரகையே! மலர் தாமரையே!
இங்கு நானொரு அனாதைஉமை
எப்படி . . . ?      முகம்மதின் மனம்தவிக்கும்

எட்டி நடைபோட்ட முகம்மதரின்
இதயம் கதிஜாவின் சாளரத்தில்
ஒட்டி அமர்ந்ததே அன்றிலைப்போல்
உடலெங்கும் சிலிர்த்து படபடக்கும்!

பொங்கி வழிந்ததே பூம்புனலாய்
பொய்கை ஆனதே மங்கைமனம்
அங்கம் முழுதுமே கலகலத்து
ஆடி அடங்குமே இன்பசுகம்!

மாடிப் படிகளில் இறங்கி வந்த
மாதுரார் கதீஜா இருவிழிகள்!
கோடி தெருமுனை சென்றவரின்
குளிர்ந்த பார்வையை சந்தித்ததாம்!

நாளை மறுபடி சந்திப்போமா?
நான்கு விழிகளும் பேசிக்கொள்ளும்!
காலையில் மீண்டும் வரலாகுமோ
கருக்கலில் வந்தால் தவறாகுமோ?

வேளைகள் குறித்து வரவேண்டுமோ
மீண்டும் மீண்டும் நீர்வரவேண்டுமே!
சோலை கதவுகள் திறந்துவைப்பேன்
சுகமாய் வந்துநீர் புகவேண்டுமே!

சங்கம் அமைத்துப்பெண் பிறவிகளை
காக்கப் பிறந்த என்யுவராசனே
சங்கையுடன் உம்மை சார்ந்திருப்பேன்
காலமெல்லாம் உம்மை காத்துநிற்பேன்!

அவர்தான் அவர்தான் முகம்ம தென்று
அன்புத் தோழியர் கூறக்கண்டு
இவர்தான் முகம்மதா? எனக்கதீஜா
எட்டிப் பார்த்தனர் சாளரத்தில்

தத்தெடுத்தாரம்மா தங்க மங்கை
தாஹா முகம்மதை கண்டெடுத்தார்
முத்தெடுத்தாரம்மா தங்க மங்கை
முகம்மதை முத்தாரம் ஆக்கிகொள்ள

# மடிதான் வேண்டும் மாதரசே

வாலிபர் முகம்மத் இணைந்து செயல்படும் ஹில்ஃபுல்ஃபுலூல் என்ற சமுதாய நற்பணி மன்றம் செயல்பட பொருள்தேவைப்படுகின்றது. மன்ற உறுப்பினர்கள் சீமாட்டி கதிஜாவை அணுகி உதவி கேட்க முனைகிறார்கள். முகம்மதையும் தம்மோடு அழைக்கிறார்கள். அவரோ கதிஜாவின் முன்வர தயங்குகிறார்.

*உடல் உயிர் பொருள் உங்களுக்கே சொந்தம்*
*ஏற்றுக் கொள்ளுங்கள் - முகம்மதே*
*எடுத்து கொள்ளுங்கள்!*
*மடி தந்தால் போதும் தலைசாய்க்க வேண்டும்*
*மாதரசே கதிஜா - ஆருயிரே!*
*ஆதரவே கதிஜா!*

*பாவப்பட்ட மக்கள் தேவைகளைக் கண்டு*
*பரிகாரம் செய்கின்றோம்*
*ஏழை எளியவர் வேதனையைத் தீர்க்க*
*இயன்றதை செய்கின்றோம்*
*காவல் படையாக கஅபாவை சுற்றி*
*காத்து வருகின்றோம்!*
*தேவை கொஞ்சம்பொருள் சேவை தொடர்ந்திட*
*பெண்டிர் குலமதியே - கதிஜா*
*பெருந்தன நாயகியே!*

*சீரும் சிறப்புமாய் மன்றம்தனை கண்ட*
*தோழர்கள் வேண்டினராம்*
*பாரும் முகம்மதே மேலும் செயல்பட*
*பணம் தேவைபடுகின்றதே*
*நீரும் வாரும் அந்தமாதர் கதிஜாவை*
*நேரில் கண்டுவருவோம்*
*பேரும் புகழும் படைத்த புரவலர்*
*வேண்டியதை தருவார் - அவர்நம்*
*சேவைகளை அறிவார்!*

நானங்கு வரவில்லை      எனஅவர் முரண்பட
நாணம்எதற்கு நண்பா?
மானம் நிறைந்த அம்மாதர் உம்மிடம்
மரியாதை வைத்துஉள்ளார்
தானத்தில் ஹாதிம் ஹிஸ்ஃபுல் ஃபுளூலின்
நற்பணி நன்கறிவார்
ஈனப்பெண் மழலைகள் இறப்பைநாம் தடுப்பதை
ஏற்று மகிழ்பவராம் - நம்பணி
போற்றும் புரவலராம்

தோழர் முகம்மது தயங்கும் நிலைகண்டு
தூதேந்தி சென்றனராம்!
ஆழ்ந்த யோசனை அரசி கதிஜாஓர்
தந்திரம் செய்தனராம்!
தாழ்வில்லை மைந்தர்காள் தருகிறேன் பெருந்தனம்
தம்முடன் முகம்மதெனும்
தோழருடன் வந்து விருந்துண்டு பொருள்கொண்டு
சென்று செயல்படுவீர் - உங்கள்
மன்றம் புகழ் வளர்ப்பீர்!

பைந்தொடி கதிஜா மாளிகை மன்றத்தில்
பகலில் நல்விருந்து
ஐந்து வகைகறி அருசுவை உணவு
அமுதென பால்பழமாம்
மைந்தர்களே உண்பீர்!      உபசாரம் செய்துபின்
கதிஜா இடம்பெயர்ந்தார்!
வந்து முகம்மதின் முகம்பார்த்து கதிஜா
புன் முறுவல் பூத்தார் - காதல்
பொங்கிடவும் பார்த்தார்!

குனிந்த முகம்மதின் செவியில் படும்படி
கொஞ்சலுடன் கேட்டார்
மணந்து கொள்ளஎன்னை சம்மதமோ சொல்லும்
வாலிபர் தளபதியே
உணர்ந்து கொள்வீரஎன்னை உங்கள் பணிகளில்
என்னையும் ஒப்படைத்தேன்!
துணிந்த மொழிகேட்டு கனிந்த முகம்மது
சொல்வதென்ன திகைத்தார் - கதீஜா
சொல்லும் முகம்ம தென்றார்

படைத்த நாயனின் பாசத்திலே நானும்
மனதைப் பறிகொடுத்தேன்
தடுத்து எனையிங்கு உலகியல் வாழ்க்கையில்
தள்ளுதல் முறையாமோ?
விடுத்த முகம்மதின் விடையை எதிர்கொண்டு
வெட்கம் உமக்கில்லையா?
அடிக்கடி எந்தன் வாசல் வழியாக
அலைவது முறையாகுமா? - கதீஜா
ஆவேசம் கொண்டுவிட்டார்!

வெட்டொன்று துண்டிரண்டு! என்னை உமக்கு
பிடித்தம் இல்லையா? பேசும் முகம்மதே!
விருப்பம் உண்டா கூறும் உண்மை உரைத்துவிடும்!
வெட்கத்தை விட்டுவிட்டார் - கதீஜா
வெளிப்படையாய் கேட்டார்!

உண்ணும் அறுசுவை உணவின்முன் முகம்மதும்
உன்மத்தர் போலிருந்தார்
கண்ணும் கருத்தும் காதலர் மீதான
கதீஜாஉடன் மொழிந்தார்
விண்ணின் ஹூரிகள் காதலரே! உண்ணும்
உண்ணீர் தாமதித்தால்
மண்ணில் மாந்தர்கள் எப்பழி கூறினும்
என்கையல் ஊட்டிடுவேன் - அமுதைஉம்
அதரத்தில் தீற்றிடுவேன்!

இன்னவிதம் அங்கு சரசம் நடப்பதை
எம்பிரான் கண்டுகொண்டான்
பொன்னை பொருந்தும் உத்தாரம் இட்டான்!
சம்மதம் தலைகவிழ்ந்தார்!
கன்னி மணவாளர் கருத்தை உணர்ந்ததும்
கதீஜா கண்குளிர்ந்தார்
அன்னியமாய் அங்கு யாரும் அறியாமல்
ஆதுரவுப் பட்டார் - காதலரிருவர்
ஆதுரவுப்பட்டார்!

உடல் உயிர் பொருள் உங்களுக்கே சொந்தம்
ஏற்றுக் கொள்ளுங்கள் - முகம்மதே
எடுத்து கொள்ளுங்கள்
மடி தந்தால் போதும் தலைசாய்க்க வேண்டும்
ஆதுரவே கதீஜா - ஆருயிரே மாதரசே கதீஜா

*  *  *  *  *  *

ஹூரி – சுவனப் பெண்கள்
எம்பிரான் – இறைவன்
உத்தாரம் – இறைஉத்தரவு



# மனித உரிமை கண்ட மணநாள்

மங்கையர்க்கரசி கதிஜா இளைஞர் முகம்மதை மணந்து கொள்கிறார். மணநாளின் மறுநாள் அதிகாலையில் அடிமை சிறுவர் ஒருவரை விடுவித்து அடிமை விடுதலை புரட்சிக்கு வித்திடுகிறார் இளைஞர் முகம்மத்.

*வடக்குதெற்கு கிழக்குமேற்கு திசைகளுக்கு விடுதலை*
*வானம்பூமி கோள்கள்சுழல வரைகடந்த விடுதலை*
*கடலில்உயர்ந்து தாழ்வதற்கு அலைகளுக்கு விடுதலை*
*காற்றுப்பாய்ந்து ஊர்ந்துசெல்ல கடவுள்தந்த விடுதலை!*

*சிறகைவிரித்துப் பறப்பதற்கு பறவைக்குண்டு விடுதலை*
*சின்னமீனும் பெரியமீனும் கடலில்உலவ விடுதலை*
*திறந்தவானில் ஊர்ந்துசெல்ல மேகம்பெற்ற விடுதலை*
*திபுதிபுவென எரிவதற்கு தீக்கும்உண்டு விடுதலை!*

*உடன்பிறந்த மனிதனை அடிமைகொள்வ தெவனடா*
*உலகினிலே முதன்முதலாய் முகம்மதின் குரலடா!*
*மடமைமடமை மனிதனுக்கு மனிதனடிமை மடமையே*
*மண்ணிலடிமை விலங்கொடித்தல் மானிடாஉன் கடமையே*

*கதிஜாவின் மாளிகையில் மணம்களித்த வைகறை*
*காலைகணவர் முகம்மத்செய்த புரட்சிஅடிமை விடுதலை*
*உதவிக்கிந்த சிறுவ னென்று மனைவிதந்த அடிமையை*
*உடனழைத்து இன்றுமுதல் தந்தேன் என்றார் விடுதலை*

*எட்டுவயது சிறுவன்ஸைது பெற்றஅடிமை விடுதலை*
*எட்டுதிக்கும் கொடுமைநீங்க விதைத்தடா புரட்சியை*
*பட்டப்பகல் வெயிலில்சூடு பட்டபிலால் அடிமையை*
*பள்ளிவாசல் பாங்கொலிக்க கொடுத்ததடா உரிமையை!*

# கன்னியின் காதலா! கடவுளை தேடிவா!

காதல் களிப்பில் கழிந்த நாற்பதாம் நாளில் முகம்மதெம்மான் கதிஜா நாயகியின் சரசத்தில் கண்மூடி கிடக்கின்றனர். இறைவனின் அழைப்புக்குரல் கேட்டு திடுக்கிடுகின்றார் எம்பிரான். ஹிரா மலைப் பொதும்பை நோக்கி ஓடுகின்றார். காதல் மாதரசியோ கணவரின் செயலை புரிந்துகொள்ள முடியாமல் தவிக்கின்றார்.

*காலை கருங்குயில் பாட்டிசைக்கும்*
*கனகப் பொன்மயில் நடனமிடும்*
*நீல வானத்தின் நெடுங்கரையில்*
*நீர்கொண்ட மேகங்கள் மின்னல்வெட்டும்!*

*என்னை கதீஜாவே முழுமையாக*
*ஏற்று கொண்டீரோ யானறியேன்*
*என்னில் எதும்குறை இருக்கின்றதோ!*
*என்று முகம்மதும் கசிந்தழுதார்!*

*அன்னை ஆமினா கோலம் கொண்டு*
*ஆரத் தழுவினீர் கனவில்கண்டேன்!*
*கன்னல் பால்முலை தந்துஎன்னை*
*கட்டித் தழுவினீர் கனவில் கண்டேன்!*

*சின்ன மழலைபோல் அழுதுஉந்தன்*
*தேகம் முழுதும் நான் நக்ககண்டேன்*
*இன்ன கனவுக்கும் என்னபொருள்*
*இனிய கதீஜாவே எனக்குரைப்பீர்!*

*என்னை கதீஜாவே முழுமையாக*
*ஏற்று கொண்டீரோ யானறியேன்*
*என்னில் எதும்குறை இருக்கின்றதோ!*
*என்று முகம்மதும் கசிந்தழுதார்!*

ஆசை கதீஜாவும் முகம்மதெனும்
அன்பு கனியைத்தன் அதரங்களால்
ஆசை ஆசையாய்க் கவ்வுகின்றார்
அமுதம் தந்துபின் பேசுகின்றார் :-

கொழுநர் இருவரும் தொட்டதுண்டு
குழந்தை மூன்றையும் ஈன்றதுண்டு
முழுமை சுகத்தைநான் உம்மிடந்தான்
முகம்மதே மெய்யாய் கண்டறிந்தேன்!

வெட்கம் என்னையும் தடுக்கின்றதே
விளக்கம் வேறுநான் என்னசொல்வேன்?
சொர்க்கம் எனக்குநீர் என்வாழ்க்கையின்
சுவாசம் நீரேயாம்! கதீஜா சொல்வார்!

உமக்கு முன்னர்நான் போவதென்றால்
உமது மடியிலென் உயிர் போகட்டும்
தவிக்கும் என்மனம் சாந்திபெறும்
தாஹா முகம்மதும் தழுதழுத்தார்!

எனக்குள் இருக்கும் உம் இன்னுயிரை
எப்படி இஸ்ராயீல் கொண்டுசெல்வார்?
மனக்குறை வேண்டாம் முகம்மதேஎன்
மடி மறுமையில் உமக்கே! என்றார்!

காதல் இருவரும் கடிமணத்தில்
கட்டுண்டிருந்திட்ட நாற்பதாம்நாள்
மாதின் மடியிலே கிடந்திளவல்
மகிழ்ந்து அமுதிரு கண்மூடினார்!

கட்டித் தழுவியே உறங்கையிலே
கர்த்தன் குரல் அவர்செவிமடுத்தார் :-
விட்டகுறை முன்னர் தொட்டகுறை
விலகிப்போனது விழித்துக் கொள்ளும்!

போதும் முகம்மதே எழுந்துகொள்ளும்!
முழுதும் கதீஜாவின் மனம்உமக்கு!
போதை அடைவது முறையல்லவே!
புகழ் இறைக்குத்தான் புரிந்துகொள்ளும்!

பிறக்கும் முன்னரே பிதா இழந்தீர்
பிள்ளைப் பருவத்தில் தாய் இழந்தீர்
இருக்கும் எம்மைநீர் அறிந்துகொள்ள
ஏங்கி தவிப்பதை நாமறிவோம்!

வாரும் ஹிராமலைப் பொதும்புக்குள்ளே
வந்தால் உண்மையைக் கண்டுகொள்வீர்
பாரில் உமக்கும்நாம் கதீஜாவையே
பரிசாய் தந்தோம் போதும்அன்றோ!

வாரும் நூர்மலை மேலேறியே
வந்து அங்குற்ற குகையமர்ந்து
பார்க்கும் பார்வைக்குள் பார்த்துபார்த்து
பழகும் தவத்தில்நான் காட்சியாவேன்!

மணல் குன்றுகள் இசைஎழுப்பும்
மணிப் புறாக்களும் ஆடிப்பாடும்
தணிந்த காதலால் முகம்மதரின்
சாந்தமனம் இறைமீதுதாவும்!

பதறி எழுந்திட்ட கதீஜாஅதோ
வாசல் கதவினை திறந்துகொண்டு
மதன முகம்மதும் நூர்மலையின்
உச்சி நோக்கியே ஓடக்கண்டார்

எங்குசெல்கிறீர் முகம்மதே! ஆ!
எங்கு செல்கிறீர்? எனகதீஜா
பொங்கி பொங்கியே கண்ணீர்சிந்தி
புரிந்து கொள்ளாமல் தத்தளித்தார்

அங்கு செல்கிறேன்! அதோஅங்கு
ஆண்டவன் என்னை அழைக்கின்றனன்!
தொங்கு தொங்கென ஓடிக்கொண்டே
தோழர்முகம்மது கூவிச் சென்றார்

தூர்சினா மலைஅதன் உச்சியிலே
மூசாவை அவனும் அழைத்ததைப்போல்
பாரில் அதோ என்னை ஹிராகுகைக்கு
பரமனும் அழைக்கிறான் நான் போகிறேன்!

எங்குசெல்கிறீர் முகம்மதே! ஆ!
எங்கு செல்கிறீர்? எனகதிஜா
பொங்கி பொங்கியே கண்ணீர்சிந்தி
புரிந்து கொள்ளாமல் தத்தளித்தார்

அங்கு செல்கிறேன்! அதோஅங்கு
ஆண்டவன் என்னை அழைக்கின்றனன்!
தொங்கு தொங்கென ஓடிக்கொண்டே
தோழர்முகம்மது கூவிச் சென்றார்!

காலை கருங்குயில் பாட்டிசைக்கும்
கனகப் பொன்மயில் நடனமிடும்
நீல வானத்தின் நெடுங்கரையில்
நீர்கொண்ட மேகங்கள் மின்னல்வெட்டும்!



# காரிருள் குகையில் கடுந்தவ சூஃபி

இறைவனின் அழைப்பை ஏற்று ஹிராமலைப் பொதும்பில் தவம்மேற்கொண்ட முகம்மதெம்மானின் போக்கை காதலி கதிஜா பொருந்தி கொண்டார். குளிரும் வெய்யிலும் பாராமல் குகைவரை சென்று கோமானுக்கு சேவைசெய்தார்.

நாட்கள் மாதங்களாக காலம் கடந்து செல்கிறது. பலநாள் தொடர் மழையால் பாலைவனம் பனிக்கடலான ஒரு விடியாவிடியலில் ஓடிச்சென்று காதலரைத் தேடிய கதிஜாவையும் நேசமுகம்மதையும் கண்டு நகைக்கின்றார் அபுஹப்ஸா. ஆம் அவர் திருகுர்ஆன் வர்ணிக்கும் அத்துவித சித்தாந்தி. ஏக இறைகாதலர்களான ஹனிஃப்களில் ஒருவர்.

அவர் அண்ணல் முகம்மதை முதன் முதலாக சூஃபி என அழைத்தார். கம்பளியால் போர்த்தப் பட்டவர் மெய்ப்பொருளை தேடும் ஞானி என்பது அதன் பொருளாகும்.

*ஜபலே நூர் எனும் குன்றின்மீது*
*தவம் புரிந்தார் நபிஹிரா குகையில்*
*அபலை கதிஜாவும் அண்ணல்நபி*
*உவந்த வாழ்க்கையை உவந்துகொண்டார்!*

*அன்னை தந்தையை விட்டுத்தன்னை*
*அனாதை ஆக்கிய மெய்ப்பொருளை*
*சின்ன வயதிலும் தன்மனதை*
*சிந்திக்க வைத்த உட்பொருளை*

*இன்னல் நிறைந்ததோர் வாலிபத்தில்*
*மின்னல்போல் வந்த கதிஜாவை*
*தன்னை நேசித்து எல்லைஇலா*
*இன்பம் தரவைத்த பரம்பொருளை*

*உண்மை அதனையே கண்டறிய*
*உந்தும் உணர்வினால் முகம்மதெம்மான்*
*கண்மை இருட்டில் ஒளிதுலங்க*
*கடுந்தவத்தினில் ஆழ்ந்து வந்தார்!*

ஒவ்வொரு நாளில் உணவுன்பார்
ஒவ்வொரு நாளில் உபவாசம்
கவ்வும் இருளிலும் பகல்போதிலும்
கஅபாவை நோக்கி தவம்தாபம்!

பூக்கள் மலர்ந்து உதிர்வதுபோல்
பொழுதுகள் மலர்ந்து உலர்ந்ததம்மா
நாட்கள் வாரங்கள் மாதங்களாய்
நகரும் காலத்தேர் உருண்டதம்மா

ஓயாப் பெருமழை பிடித்ததுபார்
ஒன்பது நாட்கள் பேய்மழையாம்
நேயர் நிலைஎன்ன தெரியலையே
நெஞ்சம் தவித்தது கதீஜாவுக்கு

கொட்டுங் குளிரிலே குருட்டிருட்டில்
குகையை நோக்கியே அவர்விரைந்தார்
கட்டுச் சோற்றுடன் கையில் ஒரு
கம்பளிப் போர்வையும் கொண்டுசென்றார்

பொழுது விடிந்தும் விடியவில்லை
புள்ளினம் எதுவும் பறக்கவில்லை
அழுத கண்ணுடன் குகைவாசலில்
ஆருயிர் கதீஜா! ஆ! அன்பின் முல்லை!

பதறி எழுந்து வெளியில்வந்து
பற்றினார் முகம்மத் கதீஜாவின்கை!
கதறிய கதீஜா கம்பளியால்
காதலர் மேனியைப் போர்த்துகின்றார்!

ஆங்கே அருகாமை குகைஒன்றிலே
அருந்தவம் செய்த அபுஹுப்ஸா
ஓங்கி சிரித்து ஓ ஸூ·பி
உம்மை போர்த்திய திறைவன் செயல் என்றார்!

## ஜிபுரீலின் அணைப்பில் எழுத்தறிந்தார் இறைதூதர்!

பல ஆண்டுகால தவஈடுபாட்டுக்குப் பின் ஹிராகுகையில் வானவர் ஜிபுரீல் முகம்மதெம்மான் முன் தோன்றுகிறார். எழுத்தறியா ஏந்தல் இளைஞர் முகம்மத் வானவரின் தழுவலால் எல்லா மொழிகளும் அறிந்த மேதை ஆகின்றார். வீடுதிரும்பிய ஏந்தலின் முகத்தில் இஸ்லாத்தின் முதல்பிறையைக் கண்ட கதிஜாவும் பாதிரியார் வரகாஇபுனு நவ்ஃபலும் குதூகளிக்கின்றனர்.

*ஜோதி மலையை விட்டிறங்கி - முகம்மத்*
*சோகத்துடன் ஓடி வருகின்றார்*
*காதல் கதிஜாவின் கதவைத்தட்டி - காலை*
*கருக்கல் இருட்டில் பதைக்கின்றார்!*

*கதவைத் திறந்தும் திறக்கும்முன்னே - அந்த*
*காரிகை அன்பரை அணைத்துக்கொண்டார்*
*அங்கே பாரும் முகம்மத் சுட்டுகின்றார் - அங்கு*
*யாருமில்லை கதிஜா அச்சம்கொண்டார்!*

*என்ன முகம்மதே சொல்லுகின்றீர்? - கண்முன்*
*ஏதும் தெரியவே இல்லை யென்றார்*
*முன்னர் யானுமே கண்டதில்லை - கதிஜா*
*முரடர் ஒருவர் துரத்துகின்றார்!*

*எப்போதும் கண்டிரா பேருருவாய் - அந்த*
*ஹீரா குகைக்குள்ளே தோன்றிநின்றார்*
*அப்போதவர் என்னை ஓது மென்றார் - நான்*
*அறியேன் ஓதிட என்றுரைத்தேன்*

*தங்கத் தாலானதோர் தாம்பாளம் - அதில்*
*தகதகக்கும் வைர சொல்வரிகள்*
*இங்குநீர் பார்த்திதை ஓது மென்றார் - நான்*
*எழுத்தை அறியேன் என்றுரைத்தேன்*

என்னை நெஞ்சோ டணைத்துக்கொண்டார் - பின்
இப்போது மீண்டும் ஓது மென்றார்
என்னுள் கோடி மின்னொளிகள் - ஓடி
எண்ணும் எழுத்துமாய் பொங்ககண்டேன்

கண்ணில் தெரிகின்ற எழுத்தெல்லாம் - நல்ல
கருத்தாய் என்னுள் படியக்கண்டேன்
எண்ணும் எழுத்தும் கண்ணென்பார் - என்னுள்
இரண்டும் புதிராய் புரிதல்கண்டேன்

இறைவன் பெயரால் ஓது மென்றார் - அவன்
இரத்தத்தால் மனிதனை வடிவமைத்தான்
அறிவை வளர்த்தான் எழுத்தாலே - அந்த
ஆண்டவன் அருளாளன் என்றுரைத்தார்!

ஓதினேன் உணர்வு மாறிவிட்டேன் - நெஞ்சில்
உந்தும் பயத்தோடு ஓடிவந்தேன்!
ஓடிவந் தும்மை கண்டவுடன் - சற்று
உள்ளச்சம் மாறி தெளிவுபெற்றேன்

ஆரத் தழுவி கதீஜாவை - அந்த
அன்பு முகம்மது முகந்து கொண்டார்
நேரே கதீஜா நெஞ்சகத்தை - முகம்
நெற்றி விழிதொட முத்திக்கொண்டார்!

பேயோ பிசாசோ யானறியேன் - கதீஜா
பித்தம் மிகைத்ததோ தெரியவில்லை
தாயான தாரமே என்னைகொஞ்சம் - நீங்கள்
தயவோ டிறுக்கி அணைத்துக்கொள்ளும்!

பூதமோ ஜின்னோ நானறியேன் - என்னுள்
புகுந்தது என்ன புரியவில்லை
ஆதி இறைவனின் அருள்தானோ - இது
ஆகாத சாத்தானின் செயல்தானோ?

இறையை அறிந்திட ஆவல்கொண்டேன் - வேறு
என்ன தவறைநான் செய்துவிட்டேன்
முறையற்ற தவமோ புரிந்துவிட்டேன் - ஒரு
முரடர் வந்தென்னை மிரட்டுவதேன்?

துயிலும்வரை பூமான் தேம்புகின்றார் - அந்த
தோகை மயிலாரும் உடன்கிடந்தார்
கலைந்தும் கலையாத கருக்கலிலே - கதீஜா
கடுக விரைந்து ஓடுகின்றார்

வரகா இபுனு நவ்∴பலின்பால் - அந்த
வேதம் படித்த வித்தகர்பால்
விரைவாய் அணுகி சோதரரே - இதற்கு
விளக்கம் என்ன? வினவுகின்றார்!

ஆழ்ந்த யோசித்து அவ்வறிஞர் - தன்
அன்பு தங்கையின் முகம்பார்த்து
தீர்ந்தது ஐயம் இவரேதான் - ஏக
தெய்வத்தின் இறுதி தூதர்! என்றார்

வந்தவர் ஜிபுரீல் வானவர்தான் - அவர்
வார்த்தைகள் தெய்வ வாக்கியம்தான்
சிந்தைகொள் சிப்பிக்குள் முத்தேபோல் - உன்னை
சேர்ந்த முகம்மதை காப்பாற்று!

முன்னுள்ள வேதங்கள் போற்றுகின்ற - அந்த
முத்திரை நபியைநீ பெற்றுக்கொண்டாய்
இன்னம் மண்ணில் பகைமேவும் - கதீஜா
ஏந்தலை உயிராய் காத்துக்கொள்!

* * * * * *

**இல்லத்தை நோக்கி ஓடுகின்றார் - கதீஜா**
**இஸ்லாத்தின் பிறையை முதலில்கண்டார்!**
**துள்ளித் துள்ளி கதீஜாதாவுகின்றார் - முத்தம்**
**தூதர் முகத்தில் பொழிகின்றார்!**

*மாதர் கதிஜா மகிழ்கின்றார் – தன்*
*மடியில் விழுந்தது தெய்வநிலா*
*காதல் கதிஜா மகிழ்கின்றார் – தன்னை*
*கனவு கொண்டவர் தெய்வகள்ளர்!*



# ஒப்பற்ற ஒப்புதல்

ஆறுமாத இடைவெளிக்குப் பின் மீண்டும் ஒலித்த வேத ஒலி கேட்டு திகைத்தனர் முகம்மதெம்மான். அப்போது நீர் எமது தூதரென்பதை உலகுக்கு அறிவித்திடும் என்ற இறைவாக்கை கேட்டு தடுமாறுகிறார்கள்.

*ஏங்குகின்றேன் நான் என்செய்வேன்*
*எப்படி இறைவனின் பணிசெய்வேன்?*
*ஆங்குமக் குணர்த்தும் வார்த்தைகளை*
*அடுத்தவர்க் குரையும் என்கின்றான்!*

*என்னை நம்புவோர் யாருமுண்டோ?*
*இறைவனின் தூதன் நானென்றுநான்*
*சொன்னால் மாந்தர்கள் ஏற்பார்களோ*
*சொல்லும் கதீஜாவே சொல்லும் என்றார் - நபி*
*சொல்லும் கதீஜாவே சொல்லுமென்றார்*

*ஹீரா குகையினில் இறைமொழியை*
*ஏற்று சிலகாலம் மறைந்திருந்து*
*ஆறாம் மாதத்தில் அசரீரி*
*அதனைநபி கேட்டு உருகுகின்றார்!*

*யாரை அழைப்பது தெரியவில்லை?*
*யாரிடம் மனதை திறந்திடுவேன்!*
*ஊரார் கேட்டாலும் நகைப்பாரே*
*உமக்குப் பைத்தியம் என்பார்களே!*

*ஏங்குகின்றேன் நான் என்செய்வேன்*
*எப்படி இறைவன் பணிசெய்வேன்*
*ஆங்குமக் குணர்த்தும் வார்த்தைகளை*
*அடுத்தவர்க் குரையும் என்கின்றான்!*

பாங்குடன் நீரெந்தன் தூதரன்று
பாருக்குரைத்திட கூறுகிறான்
தாங்குமா இச்சொல்லை மக்கநகர்
தாரமே சொல்லும் சொல்லுமென்றார்!

கேட்டதும் கதீஜா கூறுகின்றார்
கேட்கும் காதுகள் எனக்குமுண்டு
தேட்டமும் தெய்வத்தில் எனக்குண்டு
தீர்க்கமாய் உம்மை ஏற்றுகொண்டேன்!

அருமை முகம்மதே ஆருயிரே
ஆண்டவன் தூதர்நீர் ஒப்புக்கொண்டேன்!
பெருமையுடன் உம்மை பின்பற்றுவேன்
பிறரிடம் உமதுண்மை பகிர்ந்திடுவேன்!

ஹூ லாயிலாஹ இல்லல்லாஹ்
ஹூம் முஹம்மது ரசூலுல்லா!
ஹூ லாயிலாஹ இல்லல்லாஹ்
ஹூம் முஹம்மது ரசூலுல்லா!

ஹூ லாயிலாஹ இல்லல்லாஹ்
ஹூம் முஹம்மது ரசூலுல்லா!
மூலக் கலிமாவை முதன்முதலாய்
மும்முறை கதீஜா முழங்குகின்றார்!

காலை கதிரவன் ஒளிர்வதுபோல்
காதலர் முகம்மது முகம்மலர்ந்தார்!
ஞாலமும் எனை இனி ஒப்புக்கொள்ளும்
நம்பிக்கை மனதில் உதித்தது என்றார் - நபி
நம்பிக்கை மனதில் உதித்த தென்றார்!

# ஆன்மாவின் முழக்கம் - அதான்!

ஆன்மாவின் முழக்கம் கேட்குது - ஐவேளை
அடிமை பிலால் குரல் ஒலிக்குது
வான்ஓங்கும் பள்ளி மினாரா - முஅத்தீன்
பாங்கோசை எங்கும் கேட்குது!

கருப்பு சிவப்பு வெள்ளை வண்ண
மனித ரெல்லாம் புரிந்து கொள்ளுங்கள்
அரபு சீனம் ரூம் ஃபார்சி
இந்தியரும் அறிந்து கொள்ளுங்கள்!

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்
ஆண்டவன் ஒருவன் அல்லாஹ் பெரியவன்!

அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லா
அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லா
ஆண்டவன் ஒருவனென்று உறுதிகொள்ளுங்கள்
ஆண்டவன் ஒருவனவனை சார்ந்து நில்லுங்கள்!

அஷ்ஹது அன்ன முகம்மது ரசூலுல்லாஹ்
அஷ்ஹது அன்ன முகம்மது ரசூலுல்லாஹ்!

பிரபு ஏழை ஆண்டான் அடிமை
அனைவருமே புரிந்து கொள்ளுங்கள்
ஒருமையான இறையின் தூதர்
முகம்மதென்று உணர்ந்து கொள்ளுங்கள்!

காலைக்கருக்கல் உச்சிப்பகல்
சாயங் காலமும்
மாலைஇரவு பொழுதில் அவனை
தொழுது கொள்ளுங்கள்!

ஹைய்ய அலஸ்ஸலாத் ஹைய்ய அலஸ்ஸலாத்
தொழுது பணிந்து சிரந்தாழ்த்தி சுஜூது செய்யுங்கள்!

புவியின் வாழ்க்கை புழுதிப்படலம் போல்பறக்கும்
புரிந்துக் கொள்ளுங்கள்
கவிழும் வானம்தாண்டி உண்டு சொர்க்கம் நரகம்
கருத்தில் கொள்ளுங்கள்!

ஹைய்ய அலல் ஃபலாஹ் ஹைய்ய அலல் ஃபலாஹ்
அவதி நீங்க அமைதிகொள்ள ஆன்மவெற்றி
தேட வாருங்கள்!
அல்லாஹூ அக்பர் அல்லாஹூ அக்பர்!
லாயிலாஹ இல்லல்லாஹூ
அல்லாஹூ அக்பர்!

ஆன்மாவின் முழக்கம் கேட்குது – ஐவேளை
அடிமை பிலால் குரல் ஒலிக்குது
வான்ஓங்கும் பள்ளி மினாரா – முஅத்தீன்
பாங்கோசை எங்கும் கேட்குது!



# சுவர்ண குன்றம்

பாட்டனார் அப்துல் முத்தலீப் பெரிய தகப்பனார் அபுதாலிப் ஆகியோரின் தார்மீக ஆதரவோடும் காதலியர் கதிஜாவின் பொருளுதவியோடும் இஸ்லாமிய சன்மார்க்கத்தை வளர்த்தார்கள் அண்ணலர். கதிஜாவின் சொத்து சுகமெல்லாம் இஸ்லாமியப் பிரச்சார பாதையில் தண்ணீராய் ஓடி கரைந்தது. அந்நாளில் ஒரு சோதனை வந்தது.

*ஆசை கதிஜாவின் அரவணைப்பில்*
*அண்ணல் முகம்மதும் வாழ்ந்திருந்தார்*
*நேச பாசத்தை யாரறிவார்*
*நிறைந்த சுகத்தை தான்யாரறிவார்*

*பணத்தை பணமென நினைத்ததில்லை*
*பாரில் சொர்ணத்தை மதித்ததில்லை*
*குணத்தின் குன்றந்த கோமான்நபி*
*கொள்கைக்கே தன்னை ஒப்புவித்தார்*

*இணை யொன்றில்லாத ஏகத்துவம்*
*எங்கும் மலர்ந்திடும் மனிதநேயம்*
*அணையா விளக்கென ஒளிர்வதற்கு*
*அனைத்தையும் கதிஜா தத்தம்செய்தார்!*

*வசந்த மலர்களின் வாசமென்றும்*
*வற்றா நதிகளின் தீர்த்தமென்றும்*
*இசைந்த வாழ்க்கையில் ஓர்தினத்தில்*
*எழுந்த கலக்கத்தை அறிவீர்களோ*

*கனத்த யானைக்கும் கால்சறுக்கும்*
*கரும்பின் சுவையதும் திகட்டிவிடும்*
*நினைத்தனர் கதிஜா கணநேரம்*
*நீர்த்துப் போனத்தன் ஆஸ்திகளை*

அடுத்த நிமிடமே அங்குவந்தார்
அண்ணல் நபிகளார் மனம்பதறி
எடுத்துக் கொள்வீர்கள் பொன்மலையை
எம்மை விடும் கதீஜா எனநகர்ந்தார்!

அண்ணல் காட்டிய திசையிலங்கே
அதிர்ந்து இலங்குதே சொர்ணகுன்றம்
மின்னல் வேகத்தில் நபிவிரைந்து
மேலாம் மாடத்தில் போய்படுத்தார்!

அந்தோ காதலி கதீஜா நெஞ்சம்
ஆசை கொண்டதே புவிமீதிலே
நந்தாவிளக்கென நம்பிவந்த
நங்கை நேசமும் பொய்யானதே

இறைவன் மட்டுமே நிலைத்திருப்பான்
இவ்வைய சுகமெலாம் மறைந்துவிடும்
மறையின் போதத்தை நினைத்து நபி
மனதில் சலிப்புற்று கண்மூடும் முன்

ஓடி ஒருகன்னி மாடத்தின்மேல்
உங்கள் காதலி நானே என்று
பாடிவரக் கண்டு பார்த்தார் நபி! ஆ!
பாவை உருவில்தன் ஆன்மகோலம்!

உனக்குள் ஆன்மாவை நீஉணர்ந்தால்
உள்ளத்தில் தெய்வத்தை காதல்கொண்டால்
மனக்குறை உனக்கில்லை மயக்கமில்லை
மாநிலம் உனக்கு சுவனஎல்லை - மனிதா
மாநிலம் உனக்கு சுவனஎல்லை.

# கடவுள் உருவம்

இறைவனுக்கு உருவம் இல்லையென்பது இஸ்லாமிய சன்மார்க்க சட்டம் என்னும் ஷரியத். கடவுளுக்கு உருவம் உண்டா இல்லையா என்பதற்கு அபுல்ஹிகம் என்ற அறிஞருக்கும் அவர் தோழர்களுக்கும் நபிகள் பெருமான் தந்த விளக்கம் நயந்து வியக்கத்தக்கது.

*வாரார் வாரார் அபுல்ஹிகம் குரைஷியரோடு*
*வந்து நின்று பேசுகின்றார் சீடர்களோடு*
*வாரீர் வாரீர் முகம்மதரே அறிவுக்கொழுந்தே*
*வந்தெ மக்கோர் விளக்கம் தாரும் அன்பு மச்சானே!*

*ஊரார் மெச்சும் அறிவுத் தந்தை உற்சாகத்தோடு*
*ஒரு விளக்கம் கேட்கவந்தார் முகம்மதரோடு*
*பாரின் இறைவன் ஒருவனென்று பகுத்தறிவோடு*
*பரபரப்பாய் பேசுகின்றீர் பதைபதைப்போடு!*

*இருவர் இறைவர் என்று நாங்கள் கூறுகின்றோமா?*
*மூவர் இறைவர் என்று நாங்கள் முழங்குகின்றோமா?*
*புரிந்துகொள்ளும் இறைஒருவன் பொதுமை கருத்து!*
*புத்துகான் சிலை ஒவ்வொன்றும் கொண்டாடுவோர்க்கு*

*விரிந்து நிற்கும் பரம்பொருளே விளங்கி கொள்ளுமே!*
*வேண்டி நாங்கள் பொம்மைகளை தொழுவது கூட*
*பொருந்தி அதில் மனதைவைத்து ஒருமை கொள்ளவே*
*புரிந்து கொள்ளும் முகம்மதே! வேண்டாம் பிணக்கு!*

*அபுல்ஹிகம் பேசப் பேச புளகாங்கித்து*
*அவர் தோழர் சீடரெல்லாம் குதூகலித்து*
*கபகபவென நகைக்கின்றார் ஆரவாரித்து :*
*கதிஜாவின் காதலரே என்ன மதர்ப்பு?*

அபிமான லாத்து உஜ்ஜா மனோஎல்லாம்
அவரவர்க்கும் ஏகதெய்வம் அறிந்து கொள்ளுமே!
நபி நபியே நாயகரே என்னதிகைப்பு?
நாங்கள் சொன்னால் புரிகிறதா? ஏன்பதைப்பு?

முகம்மதரும் முன் வந்தார் கொள்கைவிளக்க :-
முறையுள்ள அபுல்ஹிகமே அறிவின் தந்தையே!
இகம்மீதில் நீர் கூறும் அந்த இறைவன்
இந்த மண்ணில் அந்த காற்றில் இருக்கின்றானா?

ஆம்! முகம்மத் எங்கும் அவன் உறைந்திருக்கிறான்
அந்த தீயில் நீரில் கூட உள்ளிருக்கிறான்!
தாம்தந்த விடையை எண்ணி அறிவின் தந்தையார்
தலை உயர்த்தி பெருமையுடன் நிமிர்ந்து நோக்கினார்!

வானில் மண்ணில் காற்றில் நீரில் வாழும் இறைவன்
ஊனில் உயிரில் உமக்கும் உள்ளே இருக்கவில்லையா?
ஊனமின்றி ஒருகேள்வி முகம்மது கேட்டார்
ஊமையாகி நின்றுவிட்டார் அறிவின் தந்தையார்!

கருவான நமக்கும் உள்ளே கடவுள் இருக்க
கற்பனையை தொழலாமோ நேசமச்சானே?
இருக்கும் பொருள் நமக்குள்அதை எண்ணிப்பாராமல்
இல்லாததை தொழுவது ஏன் ஆசை மச்சானே?

அறிஞர் தந்தை அபுல்ஹிகம் சிந்தித்துப் பார்த்தார்
ஆகா இது அறிவார்ந்த விளக்கம் உணர்ந்தார்!
இறைவன் நமக்குள் இருக்கின்றான் இனியகருத்து
எமக்குளிருக்கும் இறைவனுக்கு உருவம் எதற்கு?

கையில்வெண்ணை உண்டுநெய்யை கடையில்கொள்வதா
கதிரவனைப் பார்ப்பதற்கு விளக்குத் தேவையா?
தெய்வம் நமக்குள் ஒளிந்திருக்கு நபியின் கருத்து
தெரிந்து கொண்ட அபுல்ஹிகம் அருமை இதென்றார்

அருமையுள்ள முகம்மத் இது அறிவின் விளக்கம்
ஆனால் எமது மக்களுக்கு புரிவது கஷ்டம்!
உரிமையோடு நீர் உமது வழியில் செல்லலாம்
ஒதுங்கிவிட்டேன் என்னைவிடும் கூட்டத்தாரோடு!

அபுல்ஹிகம் வார்த்தை கேட்டு அண்ணல் அதிர்ந்தார்
அறிந்துணர்ந்தும் மாறுபடும் ஆசைமச்சானே
அவர்களோடு போவதென்றால் அபூஜஹில் நீர்
அறிவுத் தந்தை அல்ல நீவிர் அறியார் தந்தையே!

அகம்பிரம் மாஸ்மி – அகத்தில் தெய்வம் ஆரிய வேதம்!
அயம் தட் அயம் – நான் – அது மெய் கிருத்துவகீதம்!
உள்ளத்திலே உள்ளான் இறைஉயர்ந்த சங்கீதம்!
உண்மை சொல்லும் முகம்மதிடம் ஏனோ விரோதம்?



# முகம்மதின் உத்திரவால் மரித்து உயிர்த்த மைந்தன்

அண்ணல் நபியின் சன்மார்க்கப் பிரச்சாரத்திற்கு மக்கவாசிகளான குறைஷியர் எழுப்பிய எதிர்ப்பு கடுமையானது. முகம்மதையும் அவர் மார்க்கத்தையும் ஏற்று கொண்ட பலர் அடித்து கொல்லப்பட்டனர்.

ஊரைவிட்டு விரட்டியடித்து கொல்லப்பட்டவர்கள் பட்டியலில் கதிஜா நாயகி தமது முதல் கணவர் ஹாலா என்பவருக்கு பெற்ற மகன் ஹிந்தென்ற வாலிபன் குறிப்பிடத்தக்கவன். சிற்றப்பர் முகம்மதை போற்றியதற்காக இஸ்லாத்தின் எதிரிகளால் அவன் அடித்து கொல்லப்பட்டான்.

*கதிஜா ஈன்ற பிள்ளைகளில்*
*ஹாலா மைந்தன் ஹிந்தென்பான்*
*இதமாய் முகம்மத் சிற்றப்பர்*
*இடத்தில் பாசம் கொண்டிருந்தான்*
*பணிவாய் அவரை அனுதினமும்*
*அணுகி உதவி செய்திடுவான்*
*புதிதாம் இஸ்லாம் பூமலர*
*புதுமை கொண்டான் முகம்மதிடம்!*

*ஒருநாள் மக்க கடைத்தெருவில்*
*உட்கார்ந் திருந்தான் அச்சிறுவன்*
*வருவோர் போவோர் சிலரங்கு*
*வன்முறை யாக முகம்மதரை*
*திருடர் என்றும் கதிஜாவின்*
*திரண்ட செல்வம் அதைவைத்து*
*புரட்டு செய்கிறார் எனக்கூற*
*பொங்கி எழுந்தான் அச்சிறுவன்!*

யாரடா நீங்கள் பேதையரே!
என்தாய் கணவர் முகம்மதரே
பாரிடை சிறந்த மனிதரடா!
பண்பிற் சிறந்த அவரைப்பழி
கூறிட விடநான் மாட்டேனே!
கூறிய சிறுவன் குரல்நெரித்து
காரியம் முடித்தனர் அய்யய்யோ
கதீஜா மைந்தன் உயிர்நீத்தான்!

மலையின் இறங்கி வந்துமகன்
மரணச் செய்தி கேட்டனரால்
அலைபோல் விரைந்து இல்லத்தை
அடைந்து கதீஜா அருகினிலே
சிலைபோல் அமர்ந்து முகம்மதரும்
தேருதல் சொன்னார் உம்மகனை
விலையாய் தந்தீர் இறைநெறிக்கு!
எனினும் அங்கே பாரும் என்றார்!

விரலை உயர்த்தி முகம்மதரும்
எழு! என்றார் மகன் உயிர்த்தெழுந்தான்!
சிரியா நாட்டுக்கு செல்கின்றேன்
சிற்றப்பரே உம் கிருபையினால்
பிரிய மைந்தன் மறுபிறவி
பெறவும் கதீஜா முகம்மதரின்
அரிய தெய்வீக ஆற்றல்தனை
அறிந்து வியந்து திகைக்கின்றார்!

# மிஃராஜில் சந்தித்த ஏகாந்த லைலா

ஆண்டவனின் சன்மார்க்கத்தை அகிலத்தில் நிலைநிறுத்த பத்தாண்டு காலம் படாதபாடு பட்டார்கள் பயகம்பர் நபிபெருமான். எனினும் அவர்கள் இறைவனை நேருக்குநேர் சந்திக்க வேண்டுமென்ற ஏக்கம் தணியாமல் தவித்தார்கள். வானத்தை நோக்கி ஆண்டவனை அழைத்து கதறி அழுதார்கள்.

*வான வெளியிடை யாஅல்லாஹ் – உந்தன்*
*வார்த்தை மறைமொழி கேட்டனன்*
*தேனமுதம் குர்ஆன் வாக்கியம் – தன்னை*
*தேசம் அறியப் பேசினன்*

*ஏகமாய் எங்கும் நிறைந்துள்ளாய் – என்ற*
*இனிய கருத்தினை ஏற்றனன்*
*ஆகம் இது இறை ஒருவன் – என்று*
*அகிலத்து மக்களுக் குணர்த்தினன்*

*நீதி மொழிகளை நீ தந்தாய் – ஊர்முன்*
*நேர் மொழியாகவே உரைத்தனன்*
*வீதியில் வருவோர் போவோர்க்கும் – உந்தன்*
*விதிகளை ஓதி காட்டினன்!*

*சொல்லடி பட்டதும் கொஞ்சமோ – வந்த*
*சோதனை ஏதிலும் சோர்ந்தேனோ*
*கல்லடி பட்டதும் கொஞ்சமோ – உந்தன்*
*கருணை மறந்து நான்நின்றேனோ?*

*ஹீராமலை குகை இருளிலே – அந்த*
*ஜிபுரீலை கண்டநாள் முதலாய்நான்*
*நேராய்நின் பாதையை உலகுக்கு – உணர்த்தும்*
*நிலையை அறிந்தும்நீ மௌனமோ?*

ஆதி இறைவனே ஆண்டவா - உன்னைநான்
அறிய கண்முன் தோன்றுவாய்
நீதி குர்ஆனை தந்தவா - நின்னை
யாரென் றறியவே காட்டுவாய்!

அண்ணல் முகம்மதின் வார்த்தைகள் - அன்று
அந்திப் பொழுதில் ஒலித்ததும்
விண்ணில் அவரை ஆண்டவன் - ஜிபுரீலே
விரைந்து அழைத்து வா வென்றனன்

ஏழு திரைகடல் கண்டங்கள் - தாண்டி
எட்டாத விண்வெளிக் கப்பாலே
பாழ்வெளி தன்னில் பாய்ந்துமே - புராக்
பறவை விலங்கின் மேல் பயணமாம்

இருள்பகல் அற்றதோர் மண்டபமாம் - அங்கு
எப்போதும் ஓங்கார சங்கீதம்
அருஷென்ற ஆண்டவன் மண்டபமாம் - அங்கு
அண்ணல் நபி சென்று நின்றனராம்!

தூதர் முகம்மதும் பாடுகின்றார் -தன்னில்
தோன்றும் ஆன்மாவாம் பெண்ணழகி
காதல் கொண்டு தன்முன் ஆடுவதை - கண்டு
கதகளி ஆட்டம் ஆடுகிறார்

நின்ற பொழுதினில் நடந்ததை - மிஃகுராஜ்
நிகழ்வென்று ஜெகம்புகழ் காட்சியை
ஒன்று விடாமல் நான் கூறுவேன் - என்னில்
உண்மைகண்டால் யார்க்கும் நன்மையாம்

கண்டுகொண்டேனம்மா கண்டுகொண்டேன் - அந்த
கர்த்தனை பெண்ணாக கண்டுகொண்டேன்
விண்டுரைக்க ஓர் மார்க்கமில்லை - அவள்
வித்தாரகள்ளிநான் கண்டுகொண்டேன்!

*என்னில்நீ உன்னில்நான் என்றுரைத்தாள் -விண்ணில்*
*எங்கெங்கும் உயிராய் நின்றிருந்தாள்*
*உன்னில்நான் உயிரென்று உணர்வில் வந்தாள் -என்னை*
*உலகுக்கும் விண்ணுக்கும் உயிராய்கண்டேன்!*

*பார்க்கும் பார்வையில் கொள்ளிவைத்தாள் - அந்த*
*பாவையும் எனக்குள் பின்னிகொண்டாள்*
*வாவா நெருக்கமாய் என்றழைத்தாள் - லைலா*
*லாயிலா கூத்தென்னை ஆடவைத்தாள்*

*உடலுக்குள் நானென்று ஊசாடும் - உன்னல்*
*உள்ளமாம் பூட்டை உடைத்துவிட்டாள்*
*நெஞ்சை இரண்டாகப் பிளந்துவிட்டாள் - என்னில்*
*நீநான் என்பதை கொன்றுவிட்டாள்!*

*கால வெளியிடை நான்கிடந்தேன் - இடமும்*
*காலமும் நானென்று கண்டறிந்தேன்*
*நீல வெளியிடை நீண்டிருந்தேன் - எனக்கு*
*நிகரினை இல்லையென் றாகிநின்றேன்*

*நானே அவளானேன் அகிலமெல்லாம் - நின்று*
*ஞானத் தாண்டவம் ஆடுகின்றேன்*
*ஆனபொழுதில் நான் அரபியடா - நான்*
*ஐனில்லா அரபி ரப்பனடா!* (1)

* * * * * *

**அல்ஹதீஸ் :–**

**அன அரபிய்யுன் பிலாஐன்**

**– நான் ஐன் இல்லாத அரபி ஆவேன்**

**– நான் ரப் ஆகிய இரட்சகன் ஆவேன்**

**மீ லாயிலாகூத்து – கலிமாவை முழங்கியபடி கையில் வாளேந்தி கூத்தாடுவது.**

# திரைகடந்த திருக்காட்சி

பெருமானார் (ஸல்) மிஃகுராஜ் நிகழ்வில் தெய்வ மெய்காட்சி கண்டதன் பின்னர், வானவர் ஜிபுரீலுக்கும் அந்த வாய்ப்பு அண்ணலரின் அனுமதியால் கிடைத்தது.

*எட்டி எட்டிப் பார்க்கின்றார் – ஜிபுரீல்*
*இறைவன் இருக்கும் மண்டபத்தை*
*பட்டுத் திரைகளை திறக்கின்றார் – அவர்*
*பார்வை சுழற்றி தேடுகின்றார்*

*சுட்டும் விழிகளை உற்றுஉற்று – அருஷின்*
*சூட்சும வாசலை நோக்குகின்றார்*
*கட்டழகனோ கன்னிப் பெண்ணோ – அல்லா*
*கண்ணில் படாத பேரொளியோ*

*எத்தனை எத்தனை காலங்களாய் – அந்த*
*இறைவனை காண ஏங்குகின்றார்*
*அத்தனை காலத்து தாகம்தீர – இன்று*
*அண்ணல் முகம்மது ஆதரித்தார்*

*எழுபதி னாயிரம் திரைகளடா – திரை*
*எழுபதும் திறந்தால் கூடமடா*
*தொழுகைக் குரியவன் ஓரிறைவன் – அந்த*
*தூயவன் அமரும் பீடமடா*

*வானவ ரெல்லாம் வாசலிலே – அங்கு*
*வரிசை யாகவே நின்றிருப்பார்*
*ஆன போதிலும் யாருமங்கே – அந்த*
*ஆண்டவனை கண்டது இல்லையடா*

கட்டளை சப்தத்தை கேட்டிடுவார் - அந்த
கணமே வானவர் பரபரப்பார்
சட்டென விண்ணில் புகுந்திடுவார் - தெய்வ
சக்தியை பூமியில் புகுத்திடுவார்

மக்கமா புரத்து பாட்டையிலே - அன்று
மாதர் கதிஜா கோட்டையிலே
புக்கு ஜிபுரீல் உள்நுழைந்து - அந்த
புனிதர் முகம்மதை நாடுகின்றார்

ஏந்தல் நபிக்கொரு தூதுகொண்டு - அங்கு
இறங்கி வந்திடும் ஜிபுரீல்முன்
நேர்ந்து வாங்கினை சீப்புகொண்டு - நபி
நிலை கண்ஆடி முன்நின்றிருந்தார்

ஏகன் வஹியேற்ற நபிகேட்டார் - தோழா
இறைவன் அருஷை நீர் கண்டதுண்டா?
சோகத் துடனே வானவர்கோன் - நபியே
சுரர்களில் யாருமே கண்டதில்லை

மோகமுண்டு நெஞ்சில் தாகமுண்டு - அந்த
முன்னவன் கொலுவை காண்பதற்கு
யூகமில்லை! என்று சொல்லநபி - இன்று
உத்தாரம் தந்தேன் செல்லும்! என்றார்

ஊர்ந்து ஜிபுரில் திரைகடந்து - அருஷின்
உள்ளுக்குள்ளே பார்க்க அங்கும்
நேர்ந்து வாங்கினை சீப்புகொண்டு - நபி
நிலை கண்ணாடிமுன் நின்றிருந்தார்!

அல்லா என்பதும் அரூபமடா - அந்த
அரூபத்தின் ரூபம் அண்ணலடா
சொல்லில் சிறந்தசொல் தீன் கலிமா - அந்த
சொல்லின் பொருள் நபி கோலமடா

# மாலையில் உதித்த கதிரவன்

யூத அரசன் ஒருவனின் வேண்டுகோளுக்கு இணங்க அண்ணல் நபி நிலவைப் பிளந்து நிலத்துக்கு வந்து திரும்பச் செய்த அற்புதத்தை அகிலம் அறியும்.

அலீ (ரலி) யின் வேண்டுதலை ஏற்று அஸ்தமித்த கதிரவனை திரும்ப எழச்செய்த நிகழ்வு ஷெய்குமார்களான ஞானிகள் தரும் செய்தி.

*மாலை கருக்கல் மாநிலத்தைப் போர்த்தும்*
*சோலை குயில்கள் சுதியடங்கி ஓயும்*
*வெங்கதிரோன் மேற்கு வான்கரையில் மறையும்*
*வெண்மேகம் சிவந்து செம்மேகம் ஆகும்!*

*மாமதீனா நகரில் மாநபியின் பள்ளிக்கு*
*தாமதமாய்வந்தார் தோழர் அலீ தொழுகைக்கு*
*ஏகன்நபி தூதே இன்னேரம்வரை என்னை*
*தூக்கம் பற்றியதால் தொழுகை தவறிவிட்டேன்!*

*தொழுகை சுவர்க்கத்தின் திறவுகோல் என்றீர்கள்*
*தொழுகை விட்டவன் கேடுற்றான் என்றீர்கள்!*
*அழுகை வருகிறதே நபியே அசர்மாலை தொழுகையைத்*
*தவறவிட்டேனே தப்புசெய்தேன் என்செய்வேன்?*

*வருந்தும் அலீயாரின் அலமலர்ந்த நிலைகண்டு*
*செம்மல் நபி இரங்கி சிவந்தவான் விழிநோக்கி*
*பொன்கதிரே எழு! என்றார் புதைந்தகதிர் மீண்டதம்மா*
*தொழுகைஅலீ முடிக்கும்வரை புவியில்வெய்யில் காய்ந்ததம்மா!*

வியப்போடு தொழுதஅலீ விரைந்துநபி முன்வந்து
மேதினி கண்டிராத விந்தையிது வேந்தே
தயவாக தங்கள் தத்துவத்தை மெய்நிலையைத்
தரணி அறிய விளம்புங்கள்! என்றனரால்

ஆதி அவன்தூதர் அறைந்த பதில் அறிவீரே :
அனமின் நூருல்லாஹி குல்லுஷையின் மினன்னூர்
- ஓதுமிறைவன் ஒளிநான்! விண்ணும் மண்ணுலகும்
ஒளிர்வதும் என்ஒளியால்! உண்மையிது! என்றனரே



# மிஃகுராஜில் நிச்சயார்த்தம்

இறைசந்திப்பு என்ற மிஃகுராஜின் போது திரைமறைவில் நடந்த மற்றொரு நிகழ்வு அலீ ஃபாத்திமாவின் திருமண நிச்சயதார்த்தமாகும்.

*மக்கப் பதியில் திருநாள் – அந்த*
*மன்னர் முகம்மதின் மி:.குராஜ் பெருநாள்*
*ஹக்கனை தரிசித்து அருஷில் – அவன்தன்*
*அருகில் அமர்ந்தவர் வசனித்தார் அதனால்*
*மக்கப் பதியில் திருநாள் – அந்த*
*மன்னர் முகம்மதின் மி:.குராஜ்ப் பெருநாள்!*

*திக்குகள் எட்டிலும் நிறைந்து – வான*
*திசை பூமிப் பரப்பதின் மீதும்*
*தக்கப் பெரியவன் நிறைந்தான் – எனினும்*
*தானான பெரியோனை தன்கண்ணால் காண*
*மக்கப் பதிநபி கொண்ட – ஞான*
*மயக்கத்தை தீர்த்திட மன்னோன் அழைத்தான்!*

*வானவர் ஜிபுரீலும் வந்தார் – நபியை*
*வான வெளிதனில் அழைத்தேகி சென்றார்*
*தீனவர் நம்பிடும் புராக்கு – அந்த*
*தெய்வீக வாகனம் ஏறிப் பறந்தார்*
*கோனவர் நபிமார்கள் ரூஹு – வந்து*
*கூடும் முகத்தசுப் பள்ளிக்குச் சென்றார்*

*வானத்தின் உச்சிக்குமேலே – வல்லோன்*
*வாழ்ந்திடும் அர்சு அரண்மனையாமே*
*தீனை வழங்கிய இறைவன் – அவன்*
*தெரிசனைப் பெறநபி அருஷினில் புகுந்தார்*
*ஞானத்தை மெத்தப் படித்த – நல்ல*
*ஞானியர் அருஷினை சிரசென்றும் சொல்வார்!*

பற்பல காட்சிகள் கண்டார் - நபிகள்
பகரும் சொர்க்க நரகங்கள் பார்த்தார்
கற்பனை கெட்டாத காட்சி - அந்த
கர்த்தனின் முகத்தோற்றம் கண்டு மகிழ்ந்தார்
உற்பவ மூலத்தை உணர்ந்தார் - நபிகள்
உம்பரும் உணரா ஜெயம்பெற்று மீண்டார்!

மறுநாள் அதிகாலை போதில் - தொழுகை
ஃபஜ்ருக்கு பின்னால் பள்ளியில் அமர்ந்து
திரையிட்ட அருஷதின் காட்சி - தான்
தெரிசித்த தெல்லாம் எடுத்தோதி ஆங்கே
நிறைபுகழ் சஹாபாக்கள் கூட்டம் - நடுவில்
நிகழ்த்தினார் தெளிவுரை நபிபெருமானார்!

பேசிக்கொண்டே அவர் எதிரில் - அமர்ந்து
பிரசங்கம் மடுக்கும் அலீயினை பார்த்தார்
நேசிக்கும் அலியாரின் கையில் - இரவில்
நிகழ்ந்த மிஃகுராஜில் புலியொன்று தோன்றி
ஆசித்த கணையாழி கண்டார் - இந்த
அலீயாரோ அந்தப் புலிதானோ!

எல்லோரும் கலைந்தபின் நபியார் - அவர்
இதய சிநேகிதர் அலீயாரைப் பார்த்து
நள்ளிரா நடந்ததை அறியோம் - அருஷில்
நமக்கும் தெரியாமல் புலியாய் நீர்புகுந்தீர்!
எல்லோரும் போலல்ல நீர்அலீயாரே - உமது
ரகசியம் இறைவனே அறிவான்! என்றாரே!

என்னைநான் அருஷினில் கண்டேன் - நீர்
என்னத்தை கண்டீரோ அலீயாரே! என்றார்
தன்னை யறிந்தவன் தலைவன் - என்ற
தத்துவத்தை நானங்கு தலைவரே கண்டேன்
இன்னம் விளங்கிட வில்லை - அலீயே
என்னிடம் கணையாழி ஏன்பறித்தீரென?
அலீயார்

இன்னுமா விளங்கிட வில்லை - நபியே
இலங்கும் மோதிரம் உமதான்ம ரூபம்
பொன்மான் ஃபாத்திமா அன்றோ - அந்த
பொக்கிஷம் நான்பெற்று கொண்டேனே! என்றார்
தன்மகள் ஃபாத்திமா தன்னை - இறைவன்
தந்தனன் அலீயார்க்கு நபிஉணர்ந்தாரே!

மக்கப் பதியிலே திருநாள் - அந்த
மன்னர் முகம்மதின் மிஃ்குராஜூப் பெருநாள்
தக்க மணமகன் தன்னை - இறைவன்
நபியின் மகளுக்கு மிஃ்குராஜில் தந்தான்
மக்கப் பதியிலே திருநாள் - அந்த
மன்னர் மனையிலும் மணக்கோலப் பெருநாள்!



# மறைந்தும் மறையா மாய விநோதினி கதிஜா

ஒருவர்பின் ஒருவராக அண்ணல் முகம்மதின் பாதுகாவலர்களான பாட்டனாரும் பெரிய தந்தையாரும் துணைவியார் மாதரசி கதிஜாவும் உலகைவிட்டு மறைந்தனர். எதிரிகள் அண்ணலரை கொன்றிட திட்டமிட்டார்கள்.

எம்பெருமான் (ஸல்) தோழர் அபுபக்கர் சித்தீக் (ரலி) துணையுடன் மதினாவுக்கு தப்பிச் சென்றார்கள். மதினத்து மக்களின் மகத்தான வரவேற்பை கண்டார்கள். மதினாவில் ஆயிஷாவுடன் ஒரு மாலை கருக்கிருட்டில் ...

*தெற்கே பார்த்து ஏங்குவதேன் - அந்த*
*திசைதான் நமக்கு பகையாச்சே*
*சொர்க்க பூமியாம் மதீனாவை - இறை*
*சொந்த மாக்கி தந்துள்ளான்*
*மக்கத் திசையை மறந்துவிட்டு - இந்த*
*மண்ணை நேசம் கொள்ளுங்கள்*
*ஹக்கனின் தூதரை ஆயிஷாவும் - அன்பாய்*
*ஆறுதல் சொன்னதும் அவர் சொல்வார்*

*மறைகள் புகழும் பக்காவாம் - அந்தப்*
*பள்ளத் தாக்கை மறந்துவிட்டேன்*
*பறவைகள் தவழும் நூர்மலையை - ஐபூர்*
*பாடும் சங்கீதம் மறந்துவிட்டேன்*
*உறவின் குறைஷியர் யாவரையும் - சொந்த*
*ஊரையும் மனதால் பிரிந்துவிட்டேன்*
*மறந்தேன் ஆயிஷா! அதோபாரும் - அந்த*
*மதியை எப்படி நான்மறப்பேன்?*

*வானில் ஒளிரும் முழுநிலவை - அந்த*
*மக்கத் திசையின் எழில்மதியை*
*தானும் பார்த்து ஆயிஷா - நபியே*
*தாங்கள் என்ன சொல்கின்றீர்?*
*பானுவின் ஒளியோ பார்முழுதும் - நாம்*
*பார்க்கு மிடத்தில் ஊர்ந்துவரும்!*
*ஏனிந்த நிலவை மக்காவின் - சொந்த*
*எழிலென எண்ணி வருந்துகின்றீர்?*

கன்னி மயிலார் பரிகசிக்க - அந்த
காத்தமுன் நபியும் சொல்கின்றார்
அன்னமே எழில் பைங்கிளியே! - அதோ
அந்த நிலவில் தெரிகிறதே
பொன்னின் வண்ண முக்காடு - அதில்
புதையும் கதீஜா முகத்தைதான்
என்னால் மறக்க முடியவில்லை! - நான்
எப்படி மறப்பேன்? கேட்கின்றார்

போங்கள் அந்த கிழவியிடம்! - நான்
போகிறேன் உறங்க! பாய்கின்றார்!
ஏங்கும் நபியின் பெருமூச்சும் - அவர்
இருகண்ணீரும் அழுகுரலும்
தாங்க முடியா ஆயிஷா - நின்று
தயங்குகிறார் வாதம் பேசுகின்றார்:
நாங்கள் பதின்மரும் இளங்கொடிகள் - நீங்கள்
நாடுவதேன் அந்த முதியவரை?

இல்லை இல்லையே ஆயிஷா - அந்த
ஏந்திழை வாழ்ந்த காலம்வரை
தொல்லைகளின்றி வாழ்ந்துவந்தேன்! - தவத்தில்
தோய்ந்து மெய்யொளி கண்டுவந்தேன்
நல்ல இறைநெறி மார்க்கத்தை - நான்
நயந்தேன் ஊருக்கும் சொல்லிவந்தேன்!
எல்லை மீறி நாத்திகர்கள் - என்
எதிரில் வரவும் பயந்தார்கள்!

கதீஜா மறைந்ததும் என்உயிரின் - காவல்
கவசம் மறைந்து போனதன்றோ?
பதியை நீங்கி மதீனாவில் - நான்
பதுங்க காரண மானதன்றோ?
இதயம் திறந்தென்னை அழைத்தவரை - கண்ணின்
இமைபோல் என்னை காத்தவரை
புதிய உலகைப் பார்த்துவிட்டு - மறந்து
போய்விட என்னால் ஆகிடுமோ?

தவத்தின் சிறந்த மக்காவை - அழகின்
தாரகை நிறைந்த வானத்தை
சுவனகஅபா வீதிகளை - அதனை
சூழ்ந்த ஜம்ஜம் நீரூற்றை
கவர்ந்ததை எல்லாம் மறந்துவிட்டேன் - முதல்
காதலை எப்படி நான்மறப்பேன்?
உவந்த கதீஜாவை மறப்பதற்கு - மனம்
ஒப்பவில்லையே என்ன செய்வேன்?

ஜிபுரீல் தோன்றிய ஹிராகுகையை - அங்கு
சில்லென்று வீசும் தென்றலதை
தௌர் குகையை மணல்குன்றை - அங்கு
தங்கிய நாட்களை மறந்துவிட்டேன்
அபு லஹபையும் அவன்மனைவி - மற்றும்
அபு ஜஹிலையும் மறந்துவிட்டேன்!
கபுரில் கதீஜா உடல்கிடத்தி - அழுது
கதறியதை நெஞ்சம் மறந்திடுமோ?

ஆண்டவனே நபி கேட்கின்றார் - கஅபா
ஆலயத்தை மீட்டு தருவாயோ?
மீண்டும் கதீஜா வருவாரோ? - அவர்
மேனியில் சாய்ந்து துயில்வேனோ?
வேண்டும் நபிகுரல் கேட்டதுமே - ஆயிஷா
விருட்டென கோபம் மேவுகின்றார்!
மாண்டும் மறையா வினோ - தினியாம் அந்த
மாய கதீஜாவை சாடுகின்றார்!

ஆண்டினோ டாண்டுகள் ஆனபின்னும் - வந்து
ஆவியாய் நபியை சுற்றுவதேன்?
மாண்டு மடிந்து போனபின்பும் - நபியை
மயக்கி நாடகம் ஆடுவதேன்?
கூண்டோடு நபியை கொண்டேக - உமக்கும்
கொள்கையோ? ஆயிஷா கொதிக்கின்றார்!
வேண்டாம் விபரீதம் ஓகதீஜா - உம்மிடம்
விடமாட்டேன் நபியை பதைக்கின்றார்!
நிழலுடன் யுத்தம் புரிகின்றார் - ஆயிஷா
நெஞ்சில் கதீஜாவை பகைக்கின்றார்!

# அலீகண்ட நபியின் அதிசய விசுவரூபம்

அண்ணல் நபிகள் தோழர் அபுபக்கர் சித்திக் மகளார் ஆயிஷாவுக்குப்பின் வேறு சில பெண்களையும் மதினநகரில் மணமுடித்தனர். தோழர்களுக்கு நபிகளின் நான்கு மகளாரும் மணமுடிக்கப்பட்டனர். நபிகளாரின் பெரிய தந்தை மைந்தரான தோழர் அலீயுடன் மகள் ஃபாத்திமா மனமகிழ் மணவாழ்வு கண்டார்.

ஒரு நாள் பகல் பொழுதில் நபியின் உன்னத நிலைகுறித்து அலீ ஃபாத்திமா தம்பதிகளுக்குள் வாதப்பிரதி வாதம் ஏற்படுகிறது.

*நபியை அறிந்தவள்நான்! - ஃபாத்திமா*
*அலீயிடம் சொல்கின்றார்*
*புதுமையிது ஃபாத்திமா - உமக்கும்முன்*
*பூமான்நபி சோதரன்நான்!*
*அருமை! அலீயேஆனால் - நபியைநான்*
*அறிந்ததுபோல் நீரறியீர்!*

*வாதப்பிரதிவாதம் வலுத்தது - அலீபோய்*
*வழக்கினை நபிக்குரைத்தார்*
*தங்களை என்னைவிட - பாத்திமா*
*தானறிவாராம் சொன்னார்*
*எவ்விதம்? என்றனரால் - நபிபதில்*
*என்மகள் சொல்வது மெய்!*

*ஒப்புதல் இன்றிஅலீ - நபியை*
*உற்றுற்றுக்கணை தொடுத்தார்!*
*தப்பு இல்லைஅலீயே - சொல்லும்நபி*
*சட்டையைத் திறக்கின்றார்*
*அண்டசராசரமும் - நபிநெஞ்சில்*
*ஆடிஅடங்க கண்டார்*

விசுவ ரூபமெடுத்து - நபிகள்
விண்ணிலும் மண்ணிலுமாய்
திசைகள் நான்கிலுமாய் - பார்வை
திரும்பம் திக்கெங்குமாய்
நிசமாய் விரிந்து பரவக்கண்டு - அலீயார்
திகைத்து தடுமாறி நின்றார்!

விண்டிட வார்த்தையின்றி - அலீதன்
வீட்டுக்கு திரும்பிவந்தார்
சித்திரப் புன்னகையார் - ஃபாத்திமா
சிரித்தபடி அலீயே!
முத்திரைநபி விசுவ - ரூபத்தை
வெகுநாள் முன்னரே நானறிவேன்!

தண்ணீரில்ஒழு எடுக்க - நபிகளார்
தலைப்பாகை தனைநீக்கி
சின்னஞ்சிறுமி எந்தன் - சிரசின்மேல்
சிரித்தபடி வைத்தார்
அந்நேரம் எனக்குள்ளாக - இந்த
அகிலமும் சுழலக்கண்டேன் - நபிகள்
அகமிய நிலை அன்றறிந்தேன்!



# அறிவின் எல்லையில் அகமும் புறமும்!

மதினம் புகுந்த நபிநாதர் மக்கள் தலைவராக உயர்ந்தார். ஷரீஅத் என்னும் சமுதாய சட்ட போதகராகவும் ஹகீகத் என்னும் தத்துவ ஞான தபோதனராகவும் இறை தொண்டாற்றி உயர்ந்தார்கள்.

*பிறையும் பதினான்கு - வானத்தில்*
*பேரொளி சந்திரனாம்*
*நிறைநிலா ஒளியில் - பள்ளியில்*
*நின்றிருந்தார் நபிகள்!*

*அறையின் கதவடைத்தார் - தோழமார்*
*ஆறுபேர் அங்கிருந்தார்*
*நிறையின் அறிவுடையீர் - நான்சொல்லும்*
*பொருள் நெஞ்சில்வைப்பீர்:*

*அனஅகமதுன் பிலாமீம் - அண்ணல் நான்*
*மீமில்லா அகம தென்றார்*
*தனதன தனதந்தின்னா - ஆம் ஏக*
*தலைவன் நான்தானே என்றார்!*

*அந்நேரம்*
*இரவின் தொழுகைக்கு - பாங்கொலி*
*எழுப்பும் குரல்கேட்டு*
*புரவிபோல் பறந்து - மாந்தர்கள்*
*முற்றத்திலே திரண்டார்*

*கதவைத் திறந்துகொண்டு - மக்கள்*
*கடலென புகுந்துவந்தார்*
*அனமின் னூரில்லாஹி - குல்லுஷையின்*
*மினன்னூரி நபி உரைத்தார்*

இதமாய் பொருள்திருத்தி -      தோழர்களே
இறைவன் அவன் ஒளிநான்
எனதொளி இவ்வகிலம்      - என்று
ஏந்தல் நபி பகர்ந்தார்!

அகமாயும் புறமாயும் - அண்ணல்நபி
அறிந்தோர்க்கு மெய்ப்பொருளாய்
மகிமைகண்ட அலியார் -      இறைவனை
கண்கண்டு தொழுதேன்     என்றார்

அவரவர் அறிவின் எல்லை - அறிந்து
அவரவருடன் பேசும்
உவந்து அலியாரிடம் - நபிகள்
உரைத்தது பொன்மொழியாம்!



# முன்னோடி மதுவிலக்கு

உலகில் முதன்முதலாய் மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்ட நகரம் மதினாமா நகரம். மது அருந்துவது ஹராம் ஆகுமானதல்ல தடை செய்யப்படுகிறது என்ற இறைவசனம் நபிகளாருக்கு இறங்கியது. இறை வழங்கிய மறை வசனங்களை ஏற்ற மதினா நகர் குடிமக்கள் சாராய மடாக்களை உடைத்து தெருக்களில் தண்ணீராய் ஓடவிட்டனர்.

*ஓடுது மதுவெள்ளம் தண்ணீராய் தெருவோரம்*
*மதினாவின் சாக்கடை வழியோரம்*

*ஆண்டுகள் பலவாக புதைத்து புளிக்கவைத்த*
*ஆனந்த பானத்தையே - மார்க்கம்*
*ஆகாது என்றவுடன் (ஓடுது)*

*வீடுகள்தோரும் முடைநாற்றம் வீசிய*
*பானைகள் உருண்டோடுதே - தெருவில்*
*உதைபட்டு உடைகின்றதே (ஓடுது)*

*பலபலக்கும் பாத்திரங்கள் கிளுகிளு கிண்ணங்கள்*
*வாசலுக்கு வருகின்றதே - குப்பை*
*தொட்டிக்குள் போய் விழுகின்றதே (ஓடுது)*

*குடிபோதையால் தினம் மதிகெட்ட மாந்தர்கள்*
*கும்மாளம் தடைகண்டதே - மார்க்கம்*
*கூடாது என்கின்றதே (ஓடுது)*

*புலர்ந்ததும் குடித்துவிட்டு படுத்துவிடும் மனிதர்க்கு*
*புதுவாழ்க்கை புலர்கின்றதே - ஃபுர்கான்*
*மறைவாழ்க்கை தருகின்றதே (ஓடுது)*

*மனைவியை மழலையை அடித்து துன்புறுத்தும்*
*மனிதர்மதி தெளிகின்றதே - நபிவாய்*
*மலர்போதம் புரிகின்றதே (ஒடுது)*

*விற்பது வாங்குவது மதுவுக்கு தடை என்ற வசனத்தால்*
*அற்புதம் விளைகின்றதே - புவியில்*
*அருள்மணம் கமழ்கின்றதே (ஒடுது)*

*மதுவேண்டாம் மதிகெட்ட நிலைவேண்டாம் உடன்பட்டு*
*மதீனத்து குடிமக்களே - தலையாக*
*மதுவிலக்கை கண்டார்களே - உலகில்*
*மதுவிலக்கை கண்டார்களே! (ஒடுது)*



# மரணமில்லா பெருவாழ்வு

அண்ணலெம் பெருமானார் (ஸல்) உன்னதம் உயரக்கண்ட மக்கத்து குறைஷிகள் மதினாவின் மீது பலமுறை படையெடுத்தார்கள். பதுருமுதல் உகதுவரை நடந்த போர்களில் எம்பெருமான் (ஸல்) உயர்த்திய ஏகத்துவ கொடி தலை நிமிர்ந்தது.

முகம்மத் நபியின் பின்புலத்தில் தான் இருப்பதை ஏகனாகிய இறைவன் உலகுக்கு புலப்படுத்தினான். ஆண்டவனின் பாதையில் வெட்டுண்டு வீழ்பவர்களுக்கு மரணம் கிடையாது என்று அறிவித்தான்.

*மரணம் என்னை எடுத்துக் கொள்ளட்டும் - இறைவா*
*மரணம் என்னை எடுத்துக் கொள்ளட்டும்!*

*உகதுப்போரின் உக்கிரத்தில் உளம்உடைந்து மனம்பதைத்தார்கள்*
*உதிரம்சிந்தி மாண்டுபோன தோழர்களை நினைத்தழுதார்கள்*
*பகைவர்களின் கைஓங்கி பலம்பெறுதல் கண்டழுதார்கள்*
*பரமன்நபி இறைவனிடம் மனமுருகி வேண்டிக்கொண்டார்கள்*
*மரணம் என்னை எடுத்துக் கொள்ளட்டும் - இறைவா*
*மரணம் என்னை எடுத்துக் கொள்ளட்டும்!*

*மதினாவில் உள்ளிருந்து போர்புரியும் என்றானிறைவன்*
*அதைமீறி தோழர்களின் அறிவுரைக்கு நபி பணிந்தாரே*
*ஐனைனைன் கணவாயின் படைவீரர் ஐம்பதுபேரும்*
*ஆசை வசப்பட்டதனால் அநியாயம் நிகழ்ந்துவிட்டதே*

*மரணம் என்னை எடுத்துக் கொள்ளட்டும் - இறைவா*
*மரணம் என்னை எடுத்துக் கொள்ளட்டும்!*

*சிறியதந்தை ஹம்ஸாவை சேர்த்துநான்கு மக்கத்தவர்கள்*

*சிரமிழந்து உயிரிழந்த மதீனத்தாரும் எழுபதுபேர்கள்*

*இறைவன்நம்மை கைவிட்டானா எண்ணிநபி மனம்உடைந்தார்கள்*

*இருபற்கள் உடைந்துகன்னம் இரண்டிலுமே காயம்பட்டார்கள்*

*போர்களத்தில் ஆயிஷாவும் ஃபாத்திமாவும் வந்துவிட்டார்கள்*

*பூமான்நபி பாசஅத்தை ஷபியாவும் வந்துநின்றார்கள்*

*மூர்க்ககுண குறைஷியர்முன் இறைமார்க்கம் தலைகுனிவதோ*

*முறைதவறி போகிறதே இறைவாஉன் சித்தமென்னவோ?*

*(மரணம்)*

*நள்ளிரவில் மதீனாவின் தெருவெல்லாம் மரணஒலம்*

*நால்வரோடு எழுபதுபேர் மரணித்ததால் துயரக்கோலம்*

*உள்ளத்தில் பெரும்துயரம் உடல்முழுதும் ரத்தக்காயமாய்*

*உத்தமநபி இரவெல்லாம் இறைவனோடு உருகுகின்றார்கள்*

*(மரணம்)*

*உகதுவரை ஓடிவந்த ஆயிஷாவின் கழுத்தில்இறுக்கம்*

*உடல்முழுதும் மரணவலி கால்பாதம் குத்தல்நடுக்கம்*

*மகிமைநபி அருகில்வந்த ஆயிஷாவின் காதில்உருக்கம்*

*மாநபியின் முறையீட்டை கேட்டுமங்கை மனதில்பதட்டம்*

*(மரணம்)*

ஆருயிரே உம்மைஅந்த ஆண்டவனும் கைவிடமாட்டான்
உங்கள் உத்தமிநான் பத்தினிநான் என்மீது ஆணையிடுகிறேன்
ஓரிறைவன் கொள்கைஇந்த மண்ணில்ஊன்றி உயர்ந்தெழுந்திடும்
ஒப்பற்ற மனிதநேய தீன்மார்க்கம் உலகில்ஓங்கிடும்!

இறைவன் உம்மை கைவிடமாட்டான் - மாநபியே
இறைவன் உம்மை கைவிடமாட்டான்

ஆயிஷாவின் வார்த்தைகேட்டு அண்ணலரும் அமைதிகொண்டார்கள்
ஆண்டவனின் வாக்கைஅந்த அன்புடையாள் சொல்லில்கண்டார்கள்
தன்முன் நிற்கும் ஆயிஷாவை தழுவிக்கொண்டார்கள்
(இறைவன்)

அடுத்தநொடியில் இறைவன்வஹி எதிரொலித்து ஆர்ப்பரித்ததே
ஆண்டவனின் பாதைதனில் வெட்டுண்டு வீழ்ந்தபேர்களை
தொடுத்தது மரணம் என்று எண்ணிடவேண்டாம்
தோழர்அவர்கள் மரணமில்லா பெருவாழ்வை பெற்றுக்கொண்டார்கள்
- ஷஹீதான
தோழர்அவர்கள் மரணமில்லா பெருவாழ்வை பெற்றுக்கொண்டார்கள்
(இறைவன்)



# மடியில் விழுந்த நிலா

மதினா நகரின் அருகிலுள்ள முஸ்தலிபாவை சேர்ந்த யூதர்களுடன் நடந்த போரின் முடிவில் யூத தலைவரின் மகள் ஜுவைரியா அண்ணல் நபி மீது அளவிலா காதல் கொண்டார். யுத்தகளத்திலேயே நபிகளாரின் மனைவியாக அங்கேயே மணமுடிக்கப்பட்டு முதலிரவு கண்டார்!

*உருவிய வாளுடன் உலவுகின்றார் - அலீ*
*உருமல் சப்தம் எழுப்புகிறார்*
*இரவு முழுதும் கண்விழித்தார்- அலீ*
*இங்கும் அங்கும் அலைகின்றார்*

*முகம்மதை காத்திடுவாய் - இறைவா*
*முகம்மதை காத்திடுவாய்*
*முகம்மதை காத்திடுவாய் - அலீ*
*முறையிட்டு வேண்டுகின்றார்*

*யத்ரிபின் அருகில் முஸ்தலிஆ - அந்த*
*இடத்தை சேர்ந்த யூதர்கள்*
*பத்ருக்குப் பின்னர் பகைத்தெழுந்தார் - அவர்*
*படைநடத்தி பெரும் தோல்விகண்டார்*
*- (முகம்மதை )*

*போர்களத்தில் அவள் தந்தையிழந்தாள் - தன்னை*
*பொருந்திய கணவன் தனையிழந்தாள்*
*காக்கும் சோதரன் தனையிழந்தாள் - கங்குல்*
*கவிழ்ந்ததும் நபியுடன் உறங்குகிறாள்*

*முகம்மதை காத்திடுவாய் - இறைவா*
*முகம்மதை காத்திடுவாய்*
*முகம்மதை காத்திடுவாய் - அலீ*
*முறையிட்டு வேண்டுகின்றார்*

போரின் முடிவில் கிடைக்கும்பொருள் – அதை
தோழர்கள் தமக்குள் பிரித்து கொண்டார்
சீருடன் அரசி ஜுவைரியா – நான்
செம்மல் நபியின் பங்கென்றார்
–(முகம்மதை)
காத்தமுன் நபியும் ஏற்றுகொண்டார் – அந்த
காரணத்தால் போர் கைதிகளாம்
கோத்திரத் தார்விடு தலை பெற்றார் – அந்த
கோமான் நபியின் தாள்பணிந்தார்

எதிரியின் மகளுடன் உறங்குகின்றார் – அரசி
இழந்தது கணவனை சோதரனை
முதியவனாம் தன் தந்தையினை – அலீ
எதிர்பார்த்தார் அவள் முரண்படுவாள்
–(முகம்மதை)
நபியை கொன்று பழிவாங்க – அவள்
நாடுகின்றாள் தன்னை தருகின்றாள்
அபிமானம் போல் நடிக்கின்றாள் – அலீ
அப்படித்தான் எண்ணி பதைக்கின்றார்

பொழுது விடியும்முன் கருக்கிருட்டில் – நபி
புன்னகையுடனே வருகின்றார்
பழுதில்லாமல் நபி வரவே – அலீ
பரபரப்போடு நெருங்குகிறார்
–(முகம்மதை)
என்ன அலீயே ஏன் பதட்டம் – நபி
இப்படி கேட்க விவரித்தார்
இன்னமும் புன்னகை புரிந்துநபி – அலீ
இறைவன் நமக்கு போதுமென்றார்

பேதை அரசி ஜீவைரிய்யா – இரவில்
பேசியதை நபி கூறுகிறார்
சூதில் மாது கனவுகண்டாள் – தன்
மடியில் முழுமதி தவழக்கண்டாள்
–(முகம்மதை)

கண்ட கனவை கணவனிடம் – அவள்
கருத்துடன் எடுத்து கூறுகையில்
கொண்ட கணவன் கொதித்தெழுந்தான் – நீ
கொண்டாய் முகம்மதின் பால்காதல்

என்றான் அவள் அந்நாள் முதலாய் – என்னை
எண்ணி எண்ணியே ஏங்கிவந்தாள்
இன்றோ தெய்வீக முதலிரவு – அவள்
ஏற்றுகொண்டாள் என்னை போற்றுகின்றாள்
–(முகம்மதை)

சொர்க்கத்தில் உங்களை சந்தித்தேன் – என்னை
சொந்தம் கொள்ளுங்கள் என்றுரைத்தாள்
துக்கத்தை மீறி பேசிவிட்டாள் – இறை
தூதினை ஏற்று சாந்தி பெற்றாள்

உருவிய வாளினை உரையிலிட்டார் – அலீ
உத்தம நபியின் முகம்பார்த்தார்
கருணையின் கடலே நபிமணியே – எந்த
கன்னியர் உம்மை மறுப்பதென்றார்

# வாடிய முகத்தாமரை

யுத்தகளத்தில் இருந்து திரும்பும் ஒரு காலை பொழுது, காலை கடன் கழிக்க இறங்கிய நிலையில் அன்னை ஆயிஷாவின் வாழ்க்கையில் மிகப்பெரும் சோதனை நேரிட்டது. பணியாளர்களுடன் விபச்சாரம் செய்ததாக தூற்றப்பட்டதால் கணவரான நபிபெருமானின் இல்லம் நீங்கி தாய்வீடு திரும்பி ஆயிஷா(ரலி) துக்கப்பட்டார்.

*போராடும் நெஞ்சத்தோடும்*
*நீராடும் கண்களோடும்*
*போகின்றார் ஆயிஷாதன்*
*தாய்வீட்டுக்கு தன்தாய்வீட்டுக்கு*

*விதிசெய்த சதியோ அம்மா*
*சதிசெய்தார் சண்டாளர்கள்*

*பார்போற்றும் தூதருக்கும்*
*சோதனை புவிமீதுண்டு*
***ஊர்தூற்றி பேசுகின்றார் :-***
*உத்தமி கெட்டுப் போனாள்* *(விதி)*

*போராடும் நெஞ்சத்தோடும்*
*நீராடும் கண்களோடும்*
*போகின்றார் ஆயிஷாதன்*
*தாய்வீட்டுக்கு தன்தாய்வீட்டுக்கு!*

*யுத்தத்தின் மீண்டுமதினா*
*நகருக்கு திரும்பும் வேளை*
*நித்திரை தெளிந்த காலை*
*நிறுத்தியப் பயணப் பாதை* *(விதி)*

*காலைதன் கடன் முடித்து*
*மங்கையர் திரும்பும்போது*
*சோலையில் கழுத்தின் ஆரம்*
*தொலைந்ததை கண்டுகொண்டார்* *(விதி)*

*விரைந்தோடிச் சென்று அதனை*
*எடுத்தெல்லை மீண்டபோது*
*இருந்திட்ட கூடாரங்கள்*
*இல்லையே பதைத்து நின்றார்* (விதி)

*புர்க்காவைப் போர்த்திக் கொண்டு*
*போய்விட்டார் நபியின் மங்கை*
*பரிதாபம் ஒட்டகை ஓட்டி*
*பார்க்காது படைபின் நகர்ந்தான்!* (விதி)

*அடுத்தொரு மணிநேரத்தில்*
*ஆங்கொரு இளைஞர் வந்தார்*
*படைவிட்டுச் செல்லும்மீதி*
*பண்டங்கள் தேடும் பணிஆள்!* (விதி)

*தவித்தங்கு இருளில் மங்கை*
*தடுமாற கண்டு தேற்றி*
*உவந்தந்த தீனோர் தாயை*
*ஊருக்குள் கொண்டு சேர்த்தார்!* (விதி)

*நள்ளிரா போதில் வந்த*
*நங்கையை கண்டு திகைத்தார்*
*கள்ளமதி கொண்ட சிலரோ*
*கட்டினார் கதையை அம்மா!* (விதி)

*பார்போற்றும் தூதருக்கும்*
*சோதனை புவிமீதுண்டு*
*ஊர்தூற்றி பேசுகின்றார் :-*
*உத்தமி கெட்டுப் போனாள்* (விதி)

*இருவருக்கும் மனப்போராட்டம்*
*இறைதூதர் முகத்தில் வாட்டம்*
*ஒருமாதம் ஓயா ஒச்சம்*
*ஊராரும் கொண்டார் கூச்சம்* (விதி)

அப்துல்லா இபுனு உபையாம்
ஹஸ்ஸான் பின் தாபித்தோடு
மிஸ்தாபின் உதாதா ஹம்னா
மிகைப்பேசி தூற்றுகின்றார்! (விதி)
பார்போற்றும் தூதருக்கும்...

இருள் சூழ்ந்த வானில் ஓர்நாள்
இளங்காலை ஒளிக்கீற்றம்மா
அருள் இறைவேதவசனம்
அறிவித்தான் மங்கைகற்பை! (விதி)

புனிதையர் மீது பொய்யை
புகல்வார்கள் மீதுசாபம்
தனதென்றான் இறை! ஆயிஷா
தப்பித்தார் பழியின் மீண்டார்! (விதி)

என்ன நடந்தது ஏன் நடந்தது

புர்க்காவைப் போர்த்திக் கொண்டு
போய்விட்டார் நபியின் மங்கை
பரிதாபம் ஒட்டகை ஓட்டி
பார்க்காது படைபின் நகர்ந்தான் (விதி)

போர்த்துங்கள் அகத்தை! முகத்தை
போர்த்திய ஆயிஷாவைப்
பார்த்திருந்தால் ஒட்டகை ஓட்டி
படைவீட்டில் குழப்பம் இல்லை (விதி)

அகத்தையும் நன்கு போர்த்தி
அழகையும் திரை உள்ளாக்கி
முகம்என்னும் அடையாளத்தை
மூடாதீர்! தெய்வச்சட்டம்! (விதி)

# கோபத்தை விஞ்சிடும் கருணை

கொலை தண்டனை நிறைவேற்றப்படும் களத்தில் என்னுடைய இரத்த பந்து யாரேனும் வந்துவிட்டால் தண்டனைக்குரியவன் மன்னிக்கப்பட வேண்டுமென்பது நபிமொழி.

ஆனால் இது நடைமுறைபடுத்தப்பட்டால் நபிகளாரின் காருண்ய குணம் வெளிப்பட்டு விடுமென்றா இது மறைக்கப்படுகிறது?

*ஒருநாள் மதினா நகர்பதியில்*
*ஊருக்கு வெளியே சோலையிலே*
*அருமை தோழர் அபுபக்கரும்*
*அண்ணல் நபிகளும் அமர்ந்திருந்தார்*

*திருமறை சுவடியில் ஒருவசனம்*
*தெளிவுரை ஆய்ந்து கொண்டிருந்தார்*
*அருள்நிறை இறைவன் கருணைக்கும்*
*அன்புக்கும் அவனியில் எல்லை இல்லை*

*இறைவனின் அருளில் மனிதர்கள்*
*எவரும் நம்பிக்கை இழக்காதீர்*
*அறியா பாவம் எதுவாயினும்*
*ஆண்டவன் மன்னித்து விடுவானே*

*வசனத்தை ஓதி அபுபக்கர்*
*வள்ளல் நபிகளே விளக்குமென்றார்!*
*விசனித்து அப்போ தொருபெண்ணும்*
*விரைந்து வந்தாளே அவர்களிடம்!*

*ஈச்ச மரத்தின் இன்கனிகள்*
*இனிய மணத்தை எழுப்பிடுமே*
*காற்றுடன் கலந்து பரவிடுமே*
*கருத்திலும் புகுந்து சுவைதருமே*

விரைந்து வந்த பெண்பேதை
விழுந்தாள் நபிகளின் பாதத்தில்!
புரிந்தேன் யானொரு பெரும்பாவம்
புணர்ந்தேன் வாலிபன் ஒருவனைநான்!

அருமை நபியே ஆருயிரே
ஆண்டவன் தடுத்ததை செய்துவிட்டேன்
உரிமை கல்லால் எனை அடித்து
உம்பர் சொர்க்கம் புகச்செய்வீர்

கேட்டதும் நபிகள் தன் முகத்தை
வேறுதிசையில் திருப்புகிறார்
ஆற்றா துயருறும் அப்பெண்ணோ
அண்ணல் முகம்மதின் எதிர்வந்தாள்!

மீண்டும் நபிகள் முகம்திரும்ப
மின்னல் போலே நபிமுகத்தில்
தோன்றி தான்செய்த பாவத்தை
சான்றுடன் கூற தாவுகின்றாள்!

ஆன பொழுதில் அபுபக்கர்
அப்பெண்ணை கரத்தால் தாம்பற்றி
ஈனப் பெண்ணே ஓடிவிடு
இறைவன் உன்னை மன்னிப்பான்

இல்லை இல்லை அவள் பதைத்தாள்
எனினும்நான் செய்தேன் பெரும்பாவம்
அல்லாஹ் எனக்கும் விண்சொர்க்கம்
அளித்திட என்னை கொல்லுங்கள்

இல்லை பெண்ணே ஓடிவிடு
இறைவன் உன்னை மன்னித்தான்
சொல்லிய நபியின் குரல்கேட்டு
சுகமே அப்பெண் புறப்பட்டாள்!

ஒட்டகைக் குட்டிகள் ஓடிவரும்
ஒவ்வொன்றும் தாயிடம் பாலருந்தும்
நெட்டை மரங்களில் கூடுகளில்
நிறைந்த பறவைகள் இசையெழுப்பும்!

அண்ணல் நபியே அவளுக்கும்
ஆண்டவன் தண்டனை தவிர்த்ததுஏன்?
மண்ணகம் தெளிவாய் புரிந்துகொள்ள
மார்க்கம் சொல்லிட வேண்டும் என்றார்

தோழர் சொன்னசொல் தானெடுத்து
**தூய நபிகள் பகர்கின்றார் :-**
ஆழிகடல் போலாம் அவன்கருணை
அதனை உணர்வது நம்கடமை!

தடுத்ததை செய்தாள் எனினுமவள்
தன்பிழை வருந்திட மன்னிப்போம்!
படைத்தனன் என்னை அருள்மழையாய்
பாரில் பக்கரே புரிந்துகொள்ளும்!

கொலையாம் தண்டனை தரும்களத்தில்
குருதிவழியிலென் தோன்றல் அங்கு
தலை காட்டினாலும் கொலைக்குரிய
நபரை மன்னித்து விடுங்கள் என்றார்

கல்லால் அடிக்குமுன் வேசியையும்
காத்து ரட்சித்த ஈசாவினும்
அல்லாவின் அருளாம் முகம்மதெனும்
அண்ணல் கருணை பெருங்கடலாம்!

எந்தன் கோபத்தை என்கருணை
எப்போதும் விஞ்சிடும் எனுமிறைவன்
சொந்த மொழியாம் ஹதீஸ்குத்ஸி
சொற்களை ஏற்பீர் மாந்தர்களே!

பாலைவனத்திலும் மழை இறங்கும்
பாறைக்குள் தேரையும் உயிர்பிழைக்கும்
வாளை உயர்த்தாதீர் கொலைதண்டனை
மார்க்கம் தவிர்ப்பதை மறைக்காதீர்
ஒருநாள்.....



# தற்கொலைக்கு தடை

தற்கொலை செய்து கொள்வதை இஸ்லாம் தடை செய்திருக்கிறது. மரணத்தை விரும்பாதீர்! என்று அண்ணல்நபி நவின்றார்கள்.

*நள்ளிரவில் நான்நடந்து சென்றேன் - இவன்*
*தற்கொலை முயற்சியை கண்டுகொண்டேன்!*
*வெள்ளிஇரவு முடியும் முன்னே - உங்கள்*
*வீட்டின்முன் இவனை கொண்டுவந்தேன்!*

*சொல்லி உமரும் அந்நபரை - இறை*
*தூதரிடம் கையில் ஒப்படைத்தார்!*
*நல்லது மகனே! தற்கொலைக்கு - இறை*
*தடைவிதித்துள்ளான் அறிவாயா?*

*வள்ளல் நபிகள் கேட்டவுடன் - அந்த*
*வாலிபன் வெதும்பி அழுகின்றான்*
*கள்ளன்நான் இறைநபி மணியே - சவஆடை*
*சமாதியில் திருடும் கள்வன்நான்!*

*புதைத்த பிணத்தை தோண்டிடுவேன் - அதில்*
*போர்த்திய ஆடையை உருவிடுவேன்!*
*அதைப் பின் திருத்தி உடைதைத்து - சந்தை*
*தெருவில் சென்று விற்றிடுவேன்!*

*நேற்று நடந்த ஒருநிகழ்ச்சி - கபுரில்*
*நின்றவரெல்லாம் சென்ற பின்னே*
*காற்றும் ஓய்ந்து காரிருளில் - நான்*
*கபுரை தோண்டி பார்க்கையிலே*

*  *  *  *  *

கபன் : சவத்துக்கு உடுத்தும் ஆடை.

கபர் : சமாதி.

கபனுக்குள் கிடந்தாள் ஓரழகி – அவள்
கட்டழகில் மனம் பரிகொடுத்தேன்
எவருக்கும் தெரியாதென எண்ணி – அவள்
இன்பத்தில் என்னை புதைத்துவிட்டேன்!

நிகழ்ந்த பின்னே மனம்பதறி – நான்
நிலைகுலைந் தழுது நின்றிருந்தேன்
உவந்து கொண்டேன் தற்கொலையை – ஆனால்
உமரோ என்னை தடுத்துவிட்டார்!

ஆறாய் கண்ணீர் பெருக்குகிறான் – அவன்
அரற்றல் தெருவில் எதிரொலிக்கும்
பாராய் மகனே நபிசொன்னார் – நீ
பரமனிடத்தில் மன்னிப்புக் கேள்!

பறக்கும் பறவையும் விலங்குகளும் – மற்ற
பகுத்தறி வில்லா உயிரினமும்
தறிகெட்டு ஆத்திரம் கொள்வதுண்டா – பின்னர்
தற்கொலை செய்வதை கண்டதுண்டா?

ஊமைபோல் உனக்குள் இருக்கும் உயிர் – அதன்
உன்னதம் இறைவன் தானறிவான்!
காமத்தில் கோபத்தில் தடுமாறி – படைத்த
கர்த்தனை கொல்வது அழகாமோ?

# முகம்மத் எத்தனை முகம்மதடி!

ஏகமான மெய்ப்பொருளுக்கும் தூதருக்கும் இடையே திரைகிடையாது – லாநுஃப்ர்ரிக் பைனஅகதுன் மின் ருஸ்லி என்பது திருமறை சொல். முகம்மத்(ஸல்) ஆகிய எம்பெருமானை இறைவனின் ஜோதியாக பிரபஞ்ச முழுவதிலுமாக தரிசிப்பதே ஞானம் என்று ஸூஃபி ஞானிகள் கூறுகிறார்கள்.

*உள்ளே வாருங்கள் யாமுகம்மத் – உங்கள்*
*உள்ளம் கவர்ந்தவள் இங்குஉள்ளேன்!*
*மெல்ல முகம்மதின் கைப்பிடித்து – ஜைனப்*
*மேலே இழுத்தார் பல்லக்கினுள்*
*வெள்ளி நிலாவின் வெளிச்சத்திலே – அங்கு*
*வேகமாய் ஓடிடும் ஒட்டகத்தில்*
*கள்ளரைப் போலும் விழிக்கின்றார் – முகம்மத்*
*காதலி மாறிட பதைக்கின்றார்!*

*போருக்கு போகின்ற பாதையிலும் – எந்த*
*போரிலும் மீள்கின்ற வேளையிலும்*
*யாரும் ஓரிரு மனைவியுடன் – நபி*
*யாத்திரை கொள்வது வழக்கமம்மா*
*ஓரிரா ஒருபெண் மடியினிலே – நபி*
*ஓய்வு கொள்வது பழக்கமம்மா*
*ஈரிரா ஆயிஷா பல்லக்கிலே – நபி*
*ஏறிட ஜைனப் கண்டுகொண்டார்!*

*மூன்றாம் இரவினில் ஓர்தந்திரம் – ஜைனப்*
*முன்னிராப் பொழுதில் செய்துகொண்டார்*
*தூண்டா விளக்கொளி சோதியைப்போல்*
*துலங்கும் ஆயிஷா தன்னிடத்தில்*
*வேண்டாமடி உந்தன் உடைபல்லக்கு – எந்தன்*
*மெத்தை பல்லக்கில் நீஉறங்கு*
*நீண்ட படுக்கை இதன்மீது – நபியும்*
*நீயும் கிடந்திட சுகம் என்றார்!*

ஒன்று மறியாத ஆயிஷாவும் – ஜைனப்
ஒட்டகை பல்லக்கில் ஏறிகொண்டார்!
நின்று நகர்ந்த படையோடு – நபி
நித்திரை கொள்கின்ற நேரத்திலே
இன்று இரவிலும் ஆயிஷாவை – நெஞ்சில்
எண்ணி ஒட்டகை ஏறுகின்றார்
மென்று விழுங்கி தடுமாறி – ஜைனப்
மெல்லிடை மங்கை கை பற்றுகின்றார்!

ஒட்டகை மாறிய தறியாமல் – நபி
உள்ளே நுழைந்து தவிக்கின்றார்
கட்டழகு மங்கை ஜைனபும் தன் – அன்பு
கரத்தால் முகம்மதை கட்டிகொண்டார்
துஷ்ட முகம்மதே ஈரிராவும் – அந்த
தோழிக்கு மட்டுமே மடிசுகமா
விட்டு விடுவேனா? கேட்கின்றார்! – நபி
விட்டுவிடும் மன்னிக்க வேண்டும் என்றார்!

விடிந்தது காலை கருக்கிருட்டில் – பாலை
விடுதியாம் பசும் சோலைக்குள்ளே
நடந்தனர் ஆயிஷா ஜைனபுடன் – எந்தன்
தந்திரம் எப்படி? எனகேட்டார்!
கிடந்தனர் முகம்மத் என்னோடு! – ஆயிஷா
கிடந்தாயா தனிமையில் பாவம்? என்றார்!
கிடந்தாரா உன்னோடு? ஜைனப்ஜைனப் – என்னிடை
படிந்தாரே எப்படி? பதைபதைத்தார்!

முகம்மத் எத்தனை முகம்மதடி – இதில்
எந்த முகம்மது உண்மையடி?
முகத்தை துடைத்து கொண்டுஅங்கே – முகம்மத்
மூவராய் புன்னகை புரிந்துநின்றார்!
அகத்தில் குழப்பம் வேண்டாமே – என்னை
ஆசைப் பட்டவர்க்கு நானிருப்பேன்
தவித்த பெண்கள்முன் நூரொளியாய் – நூறு
நபிகள் நாயகம் காட்சிதந்தார்!

நூராய் நபிகள் நாயகம் காட்சிதந்தார் – நூறு
நபிகள் நாயகம் காட்சிதந்தார்



# தாடி அவள் உரிமை

தாடி நபிவழி – சுன்னத்தானது என்று கூறுவோர், தாடியை மனைவி விரும்பாவிடில் அது ஆகுமானதல்ல என்ற நபி மொழியையும் அறிந்து கொள்வது நல்லது. இது ஸூஃபிகளின் வழிவரும் நபிமொழி!

*பெண்ணுக்கு உரிமை வேண்டும் – தாய்*
*மண்ணுக்கு உரிமை வேண்டும்*
*கண்ணுக்கு உரிமை வேண்டும் – நெஞ்சின்*
*கருத்துக்கு உரிமை வேண்டும்*

*மகளிரின் நீதி மன்றம் – மதீனா*
*மகளிர்கள் காவல் நிலையம்*
*புகழ்மிகும் ஆயிஷா இல்லம் – பெண்கள்*
*புகலிடம் சரணாலயம்!*

*பண்வளர் நபிஇளம் தோழி – ஆயிஷா*
*படிஏறும் மாதரின் கானம்*
*பெண்ணுக்கு உரிமை வேண்டும் – தாய்*
*மண்ணுக்கு உரிமை வேண்டும்*

*ஆதிநாள் ஆவேச கருத்து – ஆண்*
*ஆதிக்கம் தன்னை எதிர்த்து*
*மாதரார் மனமார்ந்த கருத்து – உலகம்*
*மறுத்தும் மறையாத கருத்து*

*பெற்றோரின் சொத்திலே உரிமை – தன்*
*பிழைப்பை தான்தேடும் உரிமை*
*கற்றிடும் உரிமைதான் பெற்ற – கல்வி*
*கற்பித்து தருகின்ற உரிமை*

தன்பொருளை தான்ஆளும் உரிமை - தெருவில்
காலார நடக்கின்ற உரிமை
அன்புதனை வெளியிடும் உரிமை - தன்
ஆசைகள் தனைபேணும் உரிமை

உலகத்தை சுற்றிடும் உரிமை - மனதில்
உற்சாகம் பெறுகின்ற உரிமை
கலைஞானம் கற்கின்ற உரிமை - காதல்
களிப்பினில் சுகம்காணும் உரிமை
பண்வளர் .......

ஆணுக்கு சமமான உரிமை - அந்த
ஆயிஷா நபியிடம் வாதிட்டுபெறுவார்
தீனுக்கு தீபமாம் அவரை - வந்து
தேடினாள் ஓரிளம் மங்கை!

கண்களோ அழகான கவிதை - பெண்ணின்
கருத்திலே தெறித்ததோர் உரிமை!
என்காதல் கொழுனனின் முகத்தில் - தாடி
எனக்கும் பிடிக்கவே இல்லை

ஆயிஷா சொன்னார்கள் பெண்ணே - தாடி
அழகுஅது நபிமார்கள் மரபு
போய்நீ நேசிக்கப் பழகு - அழகை
புரியாமல் வெறுப்பது தவறு!

அந்நேரம் நபிஅங்கு வந்தார் - அந்த
அணங்கின் குறைகேட்டு அறிந்தார்
பொன்னாரம் சிதறுவது போல - நபி
புன்சிரிப்புடன் சொன்னார்கள் தீர்ப்பு!

ஆணுக்கு தாடி ஓர்அழகு - ஆனால்
அவன் மனைவி அதை வெறுத்தாலோ
வீண் அது முகத்துக்கு இழிவு - அவள்
விருப்பமே அவனுக்கு அழகு!
பண்வளர் .......

# தொண்டு செய் தோழா!

தொண்டர்க்கு தொண்டரே இறை தொண்டர் என்ற உண்மையை எம்பெருமான் (ஸல்) வாழ்க்கையின் பல சந்தர்ப்பங்களில் நிகழ்த்தி காட்டினார்கள்.

*எட்டுத் திக்கிலும் பேரிருட்டு – அந்த*
*இரவினில் பெரும்மழை இடிமின்னல்*
*கொட்டும் மழையிடை புயல்காற்று – விடியல்*
*குளிர்காற்றில் நபி வருகின்றார்*
*தட்டிய கதவை திறந்துவிட்டு – ஆயிஷா*
*தழுவி நபியை குறையிரந்தார் :-*
*நட்டநடு இரவில் எங்குசென்றீர்? – நான்*
*நடுங்கிய படியே விழித்திருந்தேன்*

*கைகளி ரண்டையும் நீட்டுகின்றார் – நபி*
*கமல உள்ளங்கை காட்டுகின்றார்*
*செக்கச் சிவந்திட்ட கையிரண்டில் – ரணம்*
*திட்டுதிட்டாகவே காயம் கண்டு*
*செய்கையால் மங்கையர் வினவுகிறார் – அந்த*
*செம்மல் நபியும் செப்புகிறார் :-*
*பக்கத்து தெருவினில் ஓரடிமை – யூதன்*
*பாயில் படுத்தான் நோயுற்றதால்*

*கோதுமை மாவை அறைப்பதற்கு – அவனை*
*கொண்ட முதலாளி கைநீட்டினன்*
*வேதனை காட்சியை கண்டுவிட்டேன் – அந்த*
*வேலையை நான்செய்து முடித்துவந்தேன்*
*போதனைமட்டும் என்வேலையல்ல – தொண்டு*
*புரிவதும் ஏழை எளியவர்கள்*
*மீதுறும் துன்பத்தை நீக்குவதும் – இந்த*
*மேதினியில் தெய்வப்பணி! என்றார்!*

# குருடர் கண்ட இறைஒளி

இறைவனுடைய படைப்பில் பேதமில்லை என்பதையும் குருடரே ஆயினும் அவர் கண்களிலும் இறையொளி உண்டு என்பதையும் இறைவன் தன் அருள் மறை குர்ஆனில் உரைத்துள்ளான்.

குருடர் ஒருவர் வாசலிலே - நின்று
கோமான் நபியே சந்தேகம்
அருள்மறை பாடமாம் ஜோதி அதில் - உள்ள
அரும்பொருள் உரைத்திட வேண்டும் என்றார்

இறைவன் ஒளியோ விண்புவியில் - எங்கும்
இலங்கிடுமென்பது உண்மையென்றால்
குருடன் எனக்கும் இறைவனொளி - அதை
காணும் வாய்ப்பு உண்டாமோ?

தருணம் அறியா அக்குருடர் - நின்று
தயங்கி நபியிடம் வினவுகின்றார்!
அருமை மனைவி ஆயிஷா - அந்த
அந்தகரை எட்டிப் பார்க்கின்றார்!

பார்த்தவர் பார்த்தப் படிநின்றார் - அந்த
பார்வையற்றவர் தன் கேள்வி
ஈர்த்திட மனத்தை வியப்போடு - நங்கை
இதன் பொருள் என்ன யோசித்தார்!

இறைவன் ஒளியோ விண்புவியில் - எங்கும்
இலங்கிடுமென்பது உண்மையென்றால்
குருடன் எனக்கும் இறைவனொளி - அதை
காணும் வாய்ப்பு உண்டாமோ?

வாசலில் நின்ற குருடரையும் – நபி
வாரும் பிறகெ   ன கடுகடுத்தார்
ஊசல் ஆடும் உள்கருத்தை – நபி
உணர முடியாமல் பரிதவித்தார்!

ஈசன் இரவில் பேசுகிறான் – மறையில்
இறங்கிய செய்தியை மறந்தீரோ?
நேசநபியே குருடரை நீர் – மிக
நெருடலா கவே பேசிவிட்டீர்!

ஒவ்வொரு உயிரும் இவ்வுலகில் – மெய்யை
உணர்ந்திட வந்து பிறந்திருக்க
எவ்விதம் பேதம் நீர்படைத்தீர் – குருடர்
இருவிழிக்குள்ளும் என் ஒளியாம்!

அன்பு மிகுந்த ஆயிஷாவின் – அந்த
அழகிய விழியிலும் எனதொளியாம்
இன்பம் பொங்க நீர்உணர்ந்து – இந்த
இகத்தில் எங்கும் எனை பாரும்!



## பார்வையால் பாவையர் ஆசைதீர்த்த பரமன் திருத்தூதர்

அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் தன் பார்வையாலேயே பாவையரின் காதல் தாபத்தை தீர்க்கும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். தெய்வீக அவதார மகாபுருஷர்களின் பேரின்ப நிலையை உலகம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

*மான் உறங்குது மயில்உறங்குது - இந்த*
*மாநிலமும் கண் உறங்குதம்மா*
*கான் உறங்குது கடல்உறங்குது - இரு*
*காதலர் நெஞ்சம் உறங்கவில்லை - அவர்*
*கண்களிரண்டும் உறங்கவில்லை*

*காமப் பார்வை பார்க்கின்றார் - கன்னி*
*கண்களால் கவிதை எழுதுகிறார்*
*தூய்மை திருமகள் ஆயிஷா - இறை*
*தூதரை காதலுக் கழைக்கின்றார்*

*தேன்இதழ் மங்கை மடிமீது - காதல்*
*தெய்வமாம் நபிகள்படுத்திருக்க அங்கு*
*வானவர் ஜிபுரீல் வருகின்றார் - அந்த*
*வள்ளல் நபியை அழைக்கின்றார்!*

*வானின் நிலவு முழுநிலவா - காதல்*
*வள்ளல்நபி முகம் முழுநிலவா?*
*ஞானம் மிகுந்த ஆயிஷாவும் - அந்த*
*தருணத்தில் நபியைத் தழுவுகிறார் (மான்)*

*இங்கும் அங்கும் பார்க்கின்றார் - நபி*
*இருதலை கொள்ளி எறும்பானார்*
*மங்கையின் வேதனை தீர்ப்பதா? - அந்த*
*வானவர் வார்த்தையை கேட்பதா?*

அவசர செய்தி நபிமணியே – அந்த
ஆண்டவன்உமக்கு அனுப்பியுள்ளான்!
துவள் இடைமங்கை மடிநீங்கி – கொஞ்சம்
தூரம் வருவீரா? என்றழைத்தார்

வானவர் கோனின் வருகையினை – அந்த
வாளைகுமரி அறிவாரா?
மோக விரக தாபத்திலே – முகம்மத்
முகம்மத் என மங்கை முனங்குகிறார்!

சட்டென நபியும் எழுந்தமர்ந்தார் – அந்த
சஞ்சலமங்கையோ பரபரத்தார்
சொட்டும் காமப் பார்வையினால் – இறை
தூதரை கலவிக்கு அழைக்கின்றார்!

இங்கிதம் அறியா ஜிபுரீலே – நீர்
ஏனிங்கு நிற்கிறீர் வெட்கமின்றி?
பொங்கும் பரவசப் பார்வை ஒன்றை – நபி
பூமகள் பார்வைக்குள் வீசுகின்றார்

ஏழு திரைகளும் திறந்ததம்மா – அல்குல்
இன்பத் திறைகடல் ஆனதம்மா
மூழ்கிய ஆனந்த உச்சத்திலே – மங்கை
மூச்சு முட்ட உயிர்குளிர்ந்தம்மா!

பார்க்கும் பார்வையால் மங்கையரின் – காமப்
பசியைத்தீர்க்கும் விந்தையிதை
ஏற்பதும் மறுப்பதும் உம்விருப்பம் – இது
ஏந்தல்நபி காதல் முத்திரையாம் (மான்)

ஏகன் மறைமொழி நபிவிரைந்து – உடன்
ஏற்றுக்கொண்டாரே! ஜிபுரீலிடம்!
ஆகம் அது என்ன மறைவசனம் – ஆம்! அது
அனைத்து புகழும் இறைவனுக்கு (மான்)

# இன்பம் தேடும் மனிதா அன்பை அடிக்காதே!

ஒரு நாளைக்கு 40 முறை உங்கள் மனைவியரை மன்னித்துவிடுங்கள் என்பது நபிமொழி.

மாநபி மரபை மதிக்கும் மனிதர்கள்
மனைவியை அடிக்காதீர் - அணைக்கும்
துணைவியை அடிக்காதீர்

உத்தமத் தோழர் உமரின் மகளார்
ஹஃப்சா முகம் மதியார் - நபிமணி
முகம்மதின் நாயகியார்
பத்தினி அவரும் பதியை ஓர்நாள்
எதிர்த்துப் பேசுகிறார் - நபிமணி
மதித்து கேட்கின்றார்!

தருணம் அங்கு வருகை தந்தார்
தந்தை உமர் கத்தாப் - மகள்நிலை
கண்டு மனம் பதைத்தார்!
ஒருகை ஓங்கி மகளார் முதுகில்
ஓரறை விடுகின்றார் - நபியோ
சீறி சினந்து பேசுகிறார்

உமக்கு மகள்தான் எனக்கு மனைவி
உமரே சரியில்லை - அடிக்கும்
உரிமை உமக்கில்லை!
எனக்கும் கோபம் எழுந்தது உண்மை
எனினும் மன்னித்தேன் - அவரென்
மனைவி நான் மதித்தேன்!

ஒவ்வொரு நாளும் நாற்பது முறைதன்
மனைவியை மன்னிப்பீர் - நபிமணி
கனிமொழி சொல் கேட்பீர்
மாநபி மரபை மதிக்கும் மனிதர்கள்
மனைவியை அடிக்காதீர் - அணைக்கும்
துணைவியை அடிக்காதீர்

# எங்கிருந்தோ கேட்கும் நபியின் குரல்

அண்ணலெம் பெருமானார் (ஸல்) கிடைக்கும் யுத்தப் பொருட்களை தோழர்களுக்கு பங்கிட்டு சொந்த மனைவிகளுக்கு கைவிரித்து விடுகிறார்கள் என்று அண்ணலரின் மனைவிகள் கருதினார்கள். நபி மணியோ தனிமையை நாடிச்சென்று ஒரு பள்ளியில் தங்கிவிடுகிறார்கள் நாட்கள் பல கழிந்தன...

*எங்கிருந்தோ இசை கேட்கின்றது*
*இயற்கையும் தன்செவி சாய்க்கின்றது*
*அங்கிருந்தே அண்ணல் குரல்கேட்டு*
*அன்பு மனைவியர் தவிக்கின்றார்!*

*எங்கிருந்தோ அண்ணல் குரல் ஓசை*
*இதுகுழல் யாழ் சிந்தும் தேனோசை*
*அங்கிருந்தே அருள் மாருதமாய்*
*அர்ரஹ்மான் அல்லமல்குர்ஆன்*

*படைத்தான் உங்களை ஈரமண்ணால்*
*பகுத்தறிவைத் தந்து முடிபுனைந்தான்*
*கொடுத்தான் இறைவன் அருட்கொடைகள்*
*கூறிடுவீர் இதில் பொய் உண்டோ?*

*நைல்நதி பரப்பின் பொன்னலையோ*
*நபிகுரல் சீனப் பழங்கவியோ*
*அல்ஹிந்த் வேத மாருதமோ*
*அறிஞர் சோக்ரதர் சொல்வளமோ!*

*மழைமுகில் தவழ்மலை தூர்சீனா*
*மாமுனி மோசே பொன்மொழியோ*
*அலைகடல் நீர்தரை மேல்நடந்த*
*அதிசய ஈசா தண்குரலோ!*

எங்கிருந்தோ அண்ணல் குரல் ஓசை
இதுகுழல் யாழ் சிந்தும் தேனோசை
அங்கிருந்தே அருள் மாருதமாய்
அர்ரஹுமான் அல்லமல்குர்ஆன்

இத்தனை நாட்கள் நபியின்குரல்
இசையைக் கேட்க முடியவில்லை
சித்தம் கலங்கி தவித்துவிட்டோம்
செல்வோம் வாரீர் நபியிடமே!

பத்தினி மாதர் பதின்மருமே
பரபரத்தார்கள் தம்வீட்டில்
எத்தனை தவறு செய்துவிட்டோம்
இப்படி நபியை இழந்துவிட்டோம்!

தத்துவ நபியே நாங்கள் உங்கள்
தாரம் என்பதை மறந்துவிட்டீர்
எத்தனை பொருள்கள் கிடைத்தாலும்
எடுத்து தோழர்க்கே வழங்குகிறீர்?

போரில் கிடைத்தப் பொருள்களையும்
பொதுவில் பிரித்து விட்டுவிட்டு
தார மனைவியர் தங்களுக்கு
தருவதில்லை ஒரு வெண்காசும்

அப்படிக் கூறி குறைபேசி
ஹஃப்சாவைத் தான் முன்னிறுத்தி
ஒப்பினர் மனைவியர்! நபிவிரைந்து
ஒதுங்கிப் பள்ளியில் தங்கிவிட்டார்

ஒருநாள் இருநாள் கடந்ததம்மா
ஒருமாதம் அது ஒருயுகமாம்
பெருகுதம்மா துயர் என்ன செய்வார்
பேதையர் மனைவியர் என்செய்வார்?

எங்கிருந்தோ இசை கேட்கின்றது
இயற்கையும் தன்செவி சாய்க்கின்றது
அங்கிருந்தே இன்று நபிகுரலில்
அமுதம் பொங்கும் மறைஓசை

ஓடிச் செல்கின்றார் மனைவியரும்
உத்தம நபியின் பள்ளிக்குள்ளே
தேடிச் சென்று ஓ நபிமணியே
திரும்ப வேண்டும் வீட்டுக்கு என்றார்!

ஆயிஷா அந்த பெண்ணரசி
அரும்பாய் நபிகொண்ட கண்ணழகி
தூய மனத்துடன் நபிமடியில்
தூங்கும் புனித விண்ணரசி

பன்முறை வானவர் ஜிபிரீலும்
வந்தது நபிமுன் அவர்வீட்டில்!
நன்மையின் சிகரம் அவர்கூட
நபியை எதிர்த்து பேசிவிட்டார்!

தோழர் உமரின் திருமகளார்
தோழியர் ஹஃப்சா நல்லறிஞர்
சூழும் தீனவர் பெண்டிருக்கும்
சொல்லித்தரும் வல்ல ஆசிரியர்

தொகுக்கபட்ட முதல் திருகுர்ஆன்
கொடுக்கப் பட்டதும் அவரிடமாம்
சகிப்பில்லாமல் ஹஃப்சாவும்
சாந்த நபியை தூற்றிவிட்டார்!

ஏழையின் பசியை ஆற்றிவிட்டு
இரவில் பட்டினியாய்ப் படுக்கும்
தாழ்மையின் உம்முல் மஸாக்கீனாம்
ஜைனப் பின்து ஃகுசைமாவாம்

பெருமானாரின் வாழ்நாளில்
பிரிந்து சொர்க்கம் புகுந்துவராம்
அருமை துணைவி அவர்கூட
அண்ணல் மீது குறைசொன்னார்!

குளிரில் அனுதினம் எழுந்திடுவார்
குனிந்து தஹஜ்ஜத் தொழுதிடுவார்
வளரும் மார்க்கம் வந்துபுகும்
மாதர்க்கு விளக்கம் தந்திடுவார்

இறுதி நாட்களில் நபிபெருமான்
உயிர்க்குப் பதிலாய்ப் தன்னுயிரை
தருவேனென்ற உம்மு ஸல்மா
தானும் நபியிடம் குறைகண்டார்!

மாவல் மஸாக்கின் மாதுவள்ளல்
ஏழைகள் புகலிடம் ஜெய்னப்ஜஹஷ்
ஆவல் கொண்ட அண்ணலோடு
ஆண்டவன் சேர்த்துவைத்த மங்கை

நபிபெருமானின் மாமி மகள்
தன்கையால் உழைத்து வாழ்ந்தவராம்
அபூர்வ பெண்மணி அவரும் அந்த
அண்ணல் செய்வது தவறென்றார்!

மோன நபியை தன்மடியில்
முழு நிலவாக ஏந்தியவர்
தீனின் நபியை போர்க்களத்தில்
தேடி மணந்து கொண்டவராம்

ஹாரிதின் மகளார் ஜுவைரியா
அறுநூறு வீரர் உயிர்காத்து
போரில் புதுமை செய்தவரும்
பூமான் நபியை குறைகண்டார்!

அபுசுப்யானின் அன்பு மகள்
அபிசீனியா சென்ற அகதியராம்
தவத்தில் சிறந்த உம்முஹபீபா
தானும் நபியை நொந்துகொண்டார்

நபியை நெஞ்சில் நாடுவதாய்
முன்னாள் கணவன் தானறைய
சபிய்யா கன்னத்தில் தழும்பு அவர்
தானும் நபிசெயல் தவறென்றார்!

தனது மணவினை நிகழ்ந்ததினால்
தாஹா நபிக்கு உதவியவர்
புனித கஅபா வாசலுக்கு
போய்வர கதவு திறந்தவராம்

அடிமை விடுதலை ஆர்வங்கொண்டு
அதற்கென உதவிகள் செய்பவராம்
கடுமை வணக்க மைமுனா
தவறு நபியின் செயலென்றார்!

எகிப்து நாட்டின் இளங்குயிலாம்
இனிய மரியம் கிப்தியா
புகழ்சேர் நபியின் ஓர்மகனை
புவியில் ஈன்ற பெண்ணரசி

மகிமை நபியை குறைகாணும்
மனைவியரோடு சேர்ந்து கொண்டார்
இகத்தை மதியா இறைநபியோ
ஏகனிடத்தில் புகல் கொண்டார்!

பல நாள் பிரிவுக்குப் பின்னர்

எங்கிருந்தோ இசை கேட்கின்றது
இயற்கையும் தன்செவி சாய்க்கின்றது
அங்கிருந்தே இன்று நபி குரலில்
அர்ரஹ்மான் அல்லமல்குர்ஆன்

ஒருநாள் இருநாள் கடந்ததம்மா
ஒருமாதமா அது ஒருயுகமாம்
பெருகுதம்மா துயர் என்ன செய்வார்
பேதையர் மனைவியர் என்செய்வார்?

துரப் துரப் துரப் துரப் துரப் ஓதுரப்
ததும்புதே நெஞ்சில் புளகாங்கிதம்
அரப்பொழியோ இது உத்ஒலியோ
அண்ணல் குரல்ஒலி கேட்டப் பெண்கள்

ஒடுகின்றார் நபியைத் தேடுகின்றார்
ஒவ்வொரு மாதும் வெதும்புகின்றார்
தேடற்கரிய நல் திரவியத்தை
தொலைத்து விட்டோமென புலம்புகின்றார்!

ஓடிச் சென்றார் பதின்மருமாய்
உத்தம நபியின் பள்ளிக்குள்ளே
தேடிச் சென்று ஓ நபிமணியே!
திரும்ப வேண்டும் வீட்டுக்கு என்றார்!

கூறும் மாதர் கூற்றின்முன்
கோமான் நபிக்கு இறைமொழியும்
இறங்க கண்ட மனைவிகளும்
**ஏகன் சொல்லுக்கு செவிகொடுத்தார் :-**

தூதரின் தூய மனைவியரே
துன்யா உலகம் வேண்டுமென்றால்
நீதர் நபியை குறைசொல்லாது
நீங்கள் விலகி போய்விடுங்கள்!

இம்மையின் மகிமை பெரிதெனவே
எண்ணும் உங்களை விட்டுவிட்டு
நன்மை உள்ள பெண்களோடு
நபிகள் அமைதி கொள்ளட்டுமே!

இம்மையின் வாழ்க்கை இது மாயை!
இறைவன் மறுமையில் வைத்துள்ளான்
நன்மையின் நலம்பல அங்குஉண்டு
நம்பிடுங்கள் நீங்கள் நலம்பெறுவீர்

கேட்டதும் மாதர் மனம் பதறி
கிருபையுள்ள எம் நபிமணியே
வேட்கையில்லை இதில் எங்களுக்கு
வேண்டாம் உலகப் பொக்கிஷங்கள்

நாங்கள் உங்கள் நாயகியாய்
நலம் பெறவேதான் விரும்புகிறோம்!
ஆங்கும் அந்த மறுமையிலும்
அண்ணலே உங்களோ டிருந்திடுவோம்!

பதறி மனைவியர் அழுகின்றார்
பாசமுள்ளநபி மனம்குழைந்தார்
சதமென நபியை நினைப்பவர்க்கு
ஜகத்தின் சுகம்அது பெரிதாமோ?

நபியின் பாதம் தேடுவதை
நாடிவாழும் மாந்தருக்கு
புவியும் வானும் பணிசெய்யும்
புரிந்துகொண்டால் சுகம்தேடிவரும்

# மைந்தனாய் பிறந்த மறுமைநாள் மகதி நபி

அண்ணல் (ஸல்) அவர்களின் மனைவி மரியமத்துல் கிப்தியா ஈன்ற மகன் மறைந்தான். பின்னாளில் மகதி நபியாய் அம்மைந்தர் பிறப்பார் என்று இறைவன் அறிவிப்பு வெளிப்பட்டது.

*கையையும் காலையும் உதைக்கின்றான் - மைந்தன்*
*கண்ணீர் கண்களில் ததும்புகிறான்*
*தையல் மரியமல் கிப்தியா - அந்த*
*தாய்மனம் வெதும்பி தவிக்கின்றாள்!*

*உய்யும் வழியை உலகுக்கு - நன்கு*
*உணர்த்த வந்த எம்பெருமான்*
*செய்வதறியாமல் இருக்கின்றார் - அந்த*
*தெற்வத்தின் முரண்பட மறுக்கின்றார்!*

*எம்மான் நபியே அன்புமகன் - அந்த*
*இபுறாஹிம் உயிர் பிழைத்திடவே*
*உம்மால் முடியும் இறைவனிடம் - மனம்*
*உருகிக்கேளும் என்கின்றார்*

*தோழமாரும் துணைவிகளும் - நபி*
*துவளக்கண்டு தவிக்கின்றார்*
*ஆழமதியின் நபிபெருமான் - அந்த*
*ஆண்டவன் அறிவது போதும் என்றார்!*

*நோயின் மெலிந்த அவனுடலை - அந்த*
*நூலிடையாள் தொட இடமில்லை*
*பாயில் கிடந்த தன் மகனை - அவள்*
*பார்க்கின்றாள் அவன் பார்க்கின்றான்*

அற்புத மைந்தன் தாய்நெஞ்சில் சாய்ந்து
ஆரத்தழுவி உயிர்துறந்தான்
கற்புடை மங்கை கிப்தியா – கண்கள்
கண்ணீர் கடலாய் பெருக்குகிறாள்!

வானில் கதிரவன் வருகின்றான் – அதனை
வளையமாய் கிரகணம் சூழ்கிறது
ஏனிந்த இருளென மாந்தர்கள் – பகலில்
இரவை பார்த்து திகைக்கின்றார்!

இறைவனின் இறுதி தூதரவர் – அந்த
ஏகனின் விதிவசப் பட்டோலை
வரிகளைப் படித்து பார்க்கின்றார் – மைந்தன்
மறுபடி மகதியாய் பிறந்திடுவான்

நானும் மகதியும் இருவிரல்போல் – என்று
நபிகள் காட்டிய அச்செய்தி
ஈனம் இல்லா நற்செய்தி – உலகில்
இறுதியில் வருவார் மகதியடா!



# எகிப்தை மறந்த இளவரசி

மகன் மறைந்த சோகத்தில் மரியமத்துல் கிப்திய்யா தன் தாயகமான எகிப்துக்கு போய்விட துணிகின்றார். நபியின் சோகம் அறிந்து திரும்புகிறார்.

*செய்வதறியாமல் தவிக்கின்றார் – நபி*
*சிம்மக் குரல்குன்றி உடைகின்றார்!*

***தவக்கல்* அல்லா என்றிருக்கும் – என்னை***
*தவிக்க விடுவதேன் காதலியே*
*சுமக்க முடியா மனச்சுமையை – நான்*
*சுமக்கவும் உனக்கு சம்மதமோ?*

*பிரிந்து செல்ல நினைக்கின்றாய் – உன்*
*பிரிவை என்மனம் சுமந்திடுமோ*
*தெரிந்தும் தெரியா உயிர்துணையே – என்னை*
*தெரிந்தும் பிரிந்தா போகின்றாய்?*

*மைந்தனை இழந்த கிப்தீய்யா – அந்த*
*மதீனா நகரை மனம்வெறுத்து*
*சொந்த எகிப்தின் திசைநோக்கி – அன்று*
*சோகப் பயணம் மேற்கொண்டார்!*

*ஒருநாள் நடந்து சென்றுஅவர் – அங்கு*
*உட்கார்ந்தார் ஓர் மரநிழலில்*
*இருகண் மூடி சாய்ந்துகொண்டார் – நெஞ்சில்*
*ஏந்தல் நபியை எண்ணுகின்றார் (தவக்கல்)*

*எத்தனை மனைவியர் உங்களுக்கு – என்னை*
*இழப்பதில் துன்பம் ஏற்படுமோ*
*இத்தனை காலம் உங்களுடன் – இனி*
*எகிப்தை நாடி செல்கின்றேன்!*

*தவக்கல் – ஆண்டவனே நீயே எனக்கு போதும்

நினைத்தார் மரியா கிப்தீய்யா - அங்கு
நிழலாய் கனவில் நபிவந்தார்? -
உனைத்தான் உயிரே! எனைப்பிரிந்து - உனக்கு
உற்றாரை நீயும் நினைத்துவிட்டாய்!

சிந்தையில் உறவை நினைப்பதெல்லாம் - இந்த
ஜெகத்தில் வாழ்வில் சகஜம்தான்
விந்தை என்நிலை விளங்காதா - என்
வேதனை உன்மனம் உணராதா? (துவக்கல்)

உனக்குள் நான்தான் இருக்கின்றேன் - என்
உணர்வில் மணக்கும் முல்லைநீ
இனிக்கும் நிழலின் அருமையெல்லாம் - வெய்யில்
எரிக்கும் பாலையில் வெளிச்சமன்றோ?

நபியின் குரலை அசரீரியாய் - மங்கை
நான்கு திசையும் கேட்கின்றார்
கவிழ்ந்த வானும் மணல்மேடும் - கனல்
கதிரவனும் கண்டு திகைக்கின்றார்!

மீண்டும் இருகண் மூடுகிறார் - அந்த
மேலவன் தூதரை நினைக்கின்றார்
மூண்டது உயிர்க்குள் பேரின்பம் - மங்கை
முகம்மதை தனக்குள்! சுவைக்கின்றார்!
(துவக்கல்)

நினைக்கும் போதும் காதல்சுகம் - தரும்
நித்திய நபியை நினைத்திருகண்
சுனைநீர் போல பொங்குகிறார் - எழுந்து
சோகம் கலைந்து ஓடுகின்றார்!

*காதல் நபியும் எல்லையிலே - நின்று*
*காத்திருந்தார் அந்த காரிகைக்கு*
*ஓதி உணரா அற்புதமே - உம்மை*
*ஒருபோதும் நீங்கமாட்டேன் நான்!*

*பிரிந்து செல்ல நினைக்கின்றாய் - உன்*
*பிரிவை என்மனம் சுமந்திடுமோ*
*தெரிந்தும்  தெரியா உயிர்துணையே - என்னை*
*தெரிந்தும் பிரிந்தா போகின்றாய்?*

*தவக்கல் அல்லா என்றிருக்கும் - என்னை*
*தவிக்க விடுவதேன் காதலியே*
*சுமக்க முடியா மனச்சுமையை - நான்*
*சுமக்கவும் உனக்கு சம்மதமோ?*

*செய்வதறியாமல் தவிக்கின்றார் - நபி*
*சிம்மக் குரலில் குன்றி உடைகின்றார்*
*உங்களை ஒருபோதும் நான்பிரியேன்!      - மாது*
*ஓவென்று கதறி அழுகின்றாள்!*

---

தவக்கல் அல்லா  அல்லா எனக்கு ஆதரவுநியே

# நற்குணமே சன்மார்க்கம்

இஸ்லாம் என்பதற்கு சாந்தி மார்க்கம் என்பதுபோல பல விளக்கங்கள் உள்ளன. ஆனால் இஸ்லாம் என்பது நற்குணம் என்பது நபிகள் நாதர் (ஸல்) அவர்களின் இறுதி விளக்கமாகும்.

*அத்திமர நிழலில் அண்ணல் நபி*
*ஆனந்தமாய் அமர்ந்தார்*
*பத்து பதினாறு சகாபாக்கள்*
*பக்கத்திலே இருந்தார்*
*எட்டுத் திசைகளிலும் சன்மார்க்கம்*
*இலங்க மனம் நிறைந்தார்*
*மட்டற்ற மகிழ்வு கொண்டே பெருமான்*
*மார்க்கம் பேசுகின்றார்!*

*தட்டுத் தடுமாறி ஆங்கே ஓர்*
*காட்டரபி வந்தார்*
*தேட்டமுடன் வந்தேன் எனக்கும்*
*தீனை விளக்கும் என்றார்*
*வந்தவர் ஆர்வம் கண்டு அண்ணல் நபி*
***மார்க்கம் விளக்குகிறார் :-***
*அந்த இறை ஒருவன் தூதர்களை*
*அவனே அனுப்புகிறான்*

*இம்மைக்கு மறுமை உண்டு! இறுதிநாள்*
*சொர்க்கம் நரகம் உண்டு!*
*இவ்விதம் உறுதிகொண்டு வாழ்தல்*
*இஸ்லாம்! என்றுரைத்தார்*
*காட்டரபி சென்றார் மறுதிங்கள்*
*கண்முன் தோன்றுகின்றார்*
*கேட்ட அக்கேள்வியையே நபியிடம்*
*கேட்டு நகைக்கின்றார்!*

மாற்றமின்றி நபியும் அவருக்கு
மரியாதை தருகின்றார்
ஏற்றமிகு கலிமா தொழுகையுடன்
நோன்பு ஐக்காத் ஹஜ்ஜு
மார்க்கத்தின் தூண்கள் என்றார்! தோழமார்
மௌனம் காத்திருந்தார்!
மூர்க்கரை போலும் காட்டரபி
மூன்றாம் மாதம் வந்தார்

தீர்க்கமுடன் உறைப்பீர் மார்க்கத்தை
தெளிவாய் என சினந்தார்!
மார்க்கம் உரைப்பீரென வந்துவந்து
நையாண்டி செய்கிறீரோ?
நையப் புடைப்போம் என தோழமார்
தள்ளிப் பதைப்பதைத்தார்!
ஐய பதட்டம் வேண்டாம்
நபிகள் அமைதி கொள்வீர் என்றார்!

சூத்திரம் போல் உரைத்தார் நபிஔ
சொல்லால் விளங்க வைத்தார்
ஆத்திரம் தவிர்ப்பீர்கள்! நற்குணம்
அதுவே தீன் இஸ்லாம்! நற்குணம்
அதுவே தீன் இஸ்லாம்!

சென்றதும் காட்டரபி – நபிகள்
செப்பினர் தோழரிடம் :-
இன்றும் அன்றும் இங்கே
வந்தவர்தான் ஜிபுரீல்! நம்மிடம்
வந்தவர்தான் ஜிபுரீல்!

# அரஃபாத் அருள் போதம்

பெருமானார் (ஸல்) அவர்கள் தம் இறுதி நாட்களில் மக்கா நகரை குறைஷிகளிடம் இருந்து வென்றனர். அரஃபாத் பெருவெளியில் அவர்கள் ஆற்றிய இறுதி உபதேசம் உலக வரலாற்றில் பொன் எழுத்தால் பொறிக்கப்பட வேண்டிய பொக்கிஷமாகும்.

*அந்திக் கதிரவன் சிந்தும் வெளிச்சத்தில்*
*சந்திரன் போலமர்ந்தார் - பெருமான்*
*சுந்தர கஸ்வா ஒட்டகம் மீதினில்*
*சொற்பெருக்காற்ற வந்தார்!*

*பெருவெளி அர:.பாத் பாறை பரப்பினில்*
*பீடுடன் ஏறுகின்றார் - பெருமான்*
*அருள்மலை ரஹ்மத் அதனில் இருந்து*
*அருளுரை ஆற்றுகின்றார்!*

*மக்காவை கைப்பற்றி கஅபாவை விடுவித்து*
*வல்லோனுக் கற்பணித்தார் - பெருமான்*
*திக்கும் திசையும் தீன்கொடி உயர*
*தேசத்தை ஆளுகின்றார்!*

*சுற்றி நபிகளை நட்சத்திரங்கள் போல்*
*துணைவியர் சூழ்ந்திருந்தார்*
*பற்றுமிக்கத் தோழர் லட்சத்து ஈரிரு*
*பத்தாயிரம் பேரிருந்தார்!*

*செக்கச் சிவந்ததோர் ஜிப்பா தலைப்பாகை*
*செம்மல் அணிந்திருந்தார் - அந்த*
*சொர்க்கத்தின் தலைவர் சொல்லும் சொல்கேட்டு*
*தோழமார் கண்குளிர்ந்தார் :-*

இறைவன் ஒருவன் ஏகன் அவனாம்
ஏகாந்தப் பரனவனாம் - அந்த
ஒருவனுக்கே புகழ் உரித்தாகும் அறிவீர்
ஓங்கார ஆட்சிக்குரியவனாம்

உயிர்தந்து வாழ்வித்து மரித்தபின் மீட்கும்
வல்லமை பொருந்தியவன் - அந்த
உயர்ந்தவன் அடிமை ஆகிய எனக்குத்தன்
வாக்கை நிறைவேற்றினான்!

பழிக்குப் பழிவாங்கி உயிர்கொலை புரிவதை
பரமன் தடுத்துவிட்டான் - பேராசை
கொழிக்கும் செல்வமாய் ஈட்டும் வட்டியாம்
கொடுமை தடுத்துவிட்டான்!

ஆட்சிக்கும் அன்புக்கும் அருளுக்கும் - உரியவன்
ஆண்டவன் இதை அறிவீர் - மற்ற
சூழ்ச்சி சாத்தான்களை நெஞ்சத்தில் நீக்கி
சுத்த மடைந்திடுவீர்!

மனைவியின் மீது கணவனின் உரிமைபோல்
மனைவிக்கும் உரிமைஉண்டு - கொண்ட
கணவன் கைகளில் மனைவி அமானிதம்
தந்தவன் கடவுள் கண்டீர்!

அடிமைக்கு விடுதலை தருவோரை பாராட்டி
அடிமைபால் அன்புகொள்வீர் - உம்முடன்
உடையில் உணவில் அடிமையை சமமாய்
நடத்துங்கள் மாந்தர்களே!

ஒருவருக் கொருவர் உடன் பிறந்தாரென
ஒன்று பட வாழ்வீர் - உங்கள்
உரிமையும் கடமையும் சமமாம் மற்றவர்
உரிமையை பேணும்! என்றார்!

ஒருகையில் இறைவேதம் மறுகையில் என்போதம்
ஒப்புகொடுத்து விட்டேன் – இரண்டும்
இறுதி நாள்வரை துணைவரும் அவைகளை
எடுத்து நடத்திடுவீர்!

இறைவனின் நெறிகளை நீங்கள் உணர்ந்திட
எடுத்து மொழிந்துவிட்டேன் – மக்களே
உரைப்பீர் உண்மையா கூறுங்கள்? எனகேட்டார்!
சொல்லுங்கள் உண்மையை நபி கேட்டார்!

பாலை மணல்வெளி எதிரொலி அதிரவும்
மக்கள் பதில்கொடுத்தார் – அரஃபாத்
நாலா திக்கிலும் உரைத்தீர்கள் உண்மை
நாங்களே சாட்சிகளே! என்றார்!

ஏகாநீ காண்பவன் கேட்பவன் எனநபி
இங்கிதமாய் உரைத்தார்! – இறைவன்
ஆகவே இஸ்லாத்தை உங்களின் மார்க்கமாய்
ஆக்கினேன் இன்று என்றான்! –
மக்களுக்கு இஸ்லாத்தை எத்திவைத்தான்!



# பிரபஞ்ச பஞ்சா ஊர்வலம்

உலகெங்கும் பஞ்சா பஞ்சத்தனெ பாக் – புனித ஐவர் தீ திருவிழா கொண்டாடப்படுகிறது. அதனை ஆதரிப்போரும் எதிர்ப்போரும் உள்ளனர். அத்திருநாளின் உட்பொருள்தான் என்ன?

*எந்தை எந்தை என்கின்றீர் அன்பே*
*என்னையும் சிந்தித்து பார்ப்பதுண்டோ?*
*சிந்தை கலங்கி கேட்கின்றார் அலீ*
*சேர்ந்ததுணை ஃபாத்திமுத்திடமே!*

*நேற்று இரவில் உறங்குகையில் உம்மை*
*நெருங்கி நானும் படுத்திருக்க*
*தோற்றத்தில் அங்கே உமக்கு பதில் இறை*
*தூதர் கிடந்திட கனவுகண்டேன்!*

*உமக்குள் அவரே இருப்பதென்றால் என்னை*
*உமது உள்ளம் நினைப்பதுண்டோ?*
*எனக்கும் ஓரிடம் உமதுநெஞ்சில் அன்பே*
*இருக்கிறதா? என்று வினவுகின்றார்!*

*காத்தமுன் நபியின் திருமகளார் தன்*
*கணவரை நிமிர்ந்து பார்க்கின்றார் :-*
*ஆத்திரம் எதற்கு அண்ணல்நபி என்னை*
*அவர்களின் இதய துண்டம் என்றார்!*

*எந்தையின் இதயத்தில் நான்பகுதி அவர்*
*எனக்குள் இருக்கும் உயிர் என்றார்!*
*பிந்திநான் என்றா சொல்கின்றீர்? அலீ*
*பிணக்குடன் வெளியில் சென்றுவிட்டார்!*

உடல்நிலை மோசம் அடைந்ததனால் நபி
உற்சாகமிழுந்து படுத்திருந்தார்
அடுத்து வந்த அலீயிடமும் நபி
அருமை மகள்பற்றி வினவுகிறார்!

காத்தூனெ ஜன்னத் என்மகளார் அவரை
கண்களங்காமல் வைத்திருப்பீர்!
ஃபாத்திமா ஈன்ற மைந்தர்களே எனது
வாரிசு! என்றும் நபி உரைத்தார்!

நேத்திரம் நிறைந்த நபிமணியே உங்கள்
நெஞ்சத்தின் பங்கு ஃபாத்திமுத்து
ஃபாத்திமுத்தும் தன் நெஞ்சுக்குள்ளே உங்கள்
பாசமே மிஞ்சி திளைக்கின்றார்

இருவர் இதயமும் ஒன்றுக்கொன்று இங்கு
இணைந்து கிடப்பது உண்மையென்றால்
அருமை நபியே எனக்கு இடம் இந்த
அகிலத்தில் எங்கு? எனவிழைந்தார்

கலகலவென்று நகைத்துவிட்டார் நபி
கண்ணீர் ததும்ப சிரித்துவிட்டார்
லகுமுக லகுமி ஓ அலீயே - அலீயே
தம்முக தம்மி எனஉரைத்தார்

உமது இரத்தம் என் இரத்தம் அலீயே
உமது தசையும் என்தசையாம்
அமைதியோடு நபி உரைக்க அலீ
ஆழ்ந்தார் ஆனந்த வாரிதியில்

நபியும் மகளும் அலீரலியும் ஈன்ற
நற்குண முள்ள ஹசன்உசைனும்
புவியின் பஞ்ச ஜோதிச்சுடர் அதை
புரிந்துகொண்டால் அது தெய்வச்சுடர்

# மீண்ட சொர்க்கம்

மக்கத் திருநகரில் வெற்றிக்களிப்புடன் நுழைந்த மாநபி(ஸல்) மனதில் எழுந்த முதல் காட்சி அன்புத் துணைவியர் கதிஜாவின் முகத்தோற்றமாகும். கதிஜா மீண்டும் தோன்றிய காட்சி கற்பனையல்ல உண்மை.

*கண்டுகொண்டேனம்மா கண்டுகொண்டேன் மீண்டும்*
*காதல் கதிஜாவை கண்டுகொண்டேன்!*
*நின்று கொண்டே நபிகண்பனித்தார்*
*நெஞ்சம் விம்மிவிம்மி நாதழுதழுத்தார்!*

*மாண்டவர் மீண்டது இல்லையென்பார் இந்த*
*மாநிலத்தார் கேட்கப் பரிகசிப்பார்!*
*ஆண்டவன் நாடினால் நடந்துவிடும் எந்தன்*
*ஆசை கதிஜாவை கண்ணால்கண்டேன்!*

*நீண்டத் தோகையும் ஒளிமுகமும் நெற்றி*
*நெகிழத் தொங்கிடும் நீலப்பட்டும்*
*தூண்டும் காதலின் பார்வைகளும் கொண்டு*
*தூய மயில்போல ஆடக்கண்டேன் (கண்டு)*

*வென்று விட்டோமம்மா வெற்றிகொண்டோம் மக்கம்*
*வீதிகளை யெல்லாம் வாகைகொண்டோம்*
*நன்றி கொண்டே நாயன் வீட்டுக்குள்ளே நின்ற*
*நானூறு ரூபமும் சாய்ந்துவிட்டோம்*

*இலட்சத்து சொச்சமாம் தோழர்களும் தங்கள்*
*இல்லத்தை இன்புற்று சென்றடைந்தார்!*
*இச்சைக்கு ரியது என்மனதில் எந்தன்*
*இனிய கதிஜாநான் எங்குசெல்வேன்? (கண்டு)*

*நபி – நெஞ்சம் விம்மிவிம்மி நாதழுதழுத்தார்.*

ஆசை கதீஜாவின் கோட்டைநோக்கி நானும்
ஆர்வம் மிகப்பொங்க ஓடிச்சென்றேன்
நேச கதீஜாவின் நிழலுமில்லை எந்தன்
நெஞ்சம் கதறுதே என்னசெய்வேன்

ஓடிச் சென்றேன் மையவாடிக்குள்ளே
ஓவென்றழுது நான் கதருகின்றேன்
தேடி கதீஜாவும் மயிலுருவில் என்முன்
தெளிவாய் வரக்கண்டேன் கண்டுகொண்டேன்
(கண்டு)
அன்று ஜபருத்தின் மரக்கிளையில் நானும்
அழகிய மயிலாகி நின்றதுபோல்
இன்று கதீஜாவின் ஆன்மாஎன்முன் வந்து
எழில் மயிலானதை கண்டுகொண்டேன்

போதும்போதும் இந்த வாழ்க்கை!என்றேன் உன்னை
பொருத்தீ கொண்டால் அதுபோதுமென்றேன்
மாது கதீஜாவும் மயிலுருவில் என்றன்
மார்பில் புரண்டிட கண்டுகொண்டேன் (கண்டு)

நானும் மயிலாக மாறிவிட்டேன் வானில்
நாலா திசையிலும் பறந்துசென்றோம்
சீன நாட்டிலோர் உப்பரிகை அங்கு
சென்று புகுந்தின்பம் கண்டுகொண்டோம்

கனவுமல்ல ஒளி காட்சியல்ல உண்மை
கதீஜாவை கண்ணார கண்டுகொண்டேன்
வினவும் மிஃகுராஜின் சம்பவம்போல் காதல்
மீதுர கதீஜாவை கண்டுகொண்டேன்!

கண்டுகொண்டேனம்மா கண்டுகொண்டேன் மீண்டும்
காதல் கதீஜாவை கண்டுகொண்டேன்!
நின்று கொண்டே நபிகண்பனித்தார்
நெஞ்சம் விம்மிவிம்மி நாதழுதழுத்தார்!

# மதினாவில் மலர்ந்த மக்களாட்சி

மாநபி மறைந்த நாளில் மதினாவில் தோன்றியது மக்களாட்சி. இது வரலாற்று உண்மை. உலகம் புரிந்துக் கொள்ளவேண்டிய அரிய நிகழ்வு. ஏதன்ஸ் நகரத்தை மக்கள் ஆட்சியின் தொட்டில் என்பார்கள் வரலாற்றாசிரியர்கள். மதின மாநகரமோ அம்மகத்தான தத்துவத்தின் கற்பப்பை ஆகும்.

*மக்களை மக்களாளும் மக்களாட்சி வாழ்கவே*
*மக்களை மடையராக்கும் மன்னராட்சி வீழ்கவே*
*மக்களை அடிமையாக்கும் அதிபராட்சி ஒழிகவே*
*மக்கள்கூடி தேர்ந்தெடுக்கும் தலைவராட்சி வாழ்கவே!*

*மலர்ந்ததெங்கு மக்களாட்சி மாநிலத்தில் மாந்தரே?*
*மலர்ந்ததென்று மக்களாட்சி மாநிலத்தின் மாந்தரே?*
*உளந்திறந்து உண்மைசொல்லும் சரித்திரங்கள் உண்டுமோ?*
*உலகம் உண்மை அறிந்துகொள்ள மனந்திறந்து பாடுவோம்!*

*அண்ணல்நபி நாதர்வாழ்ந்து அருள்நிறைந்த மண்ணிலே*
*ஆன்மஉய்வு பெற்றுநபி விண்புகுந்த நாளிலே*
*மண்ணில் அங்கு மக்களாட்சி விதைமுளைத்த கதையினை*
*மாநிலம் அறியநாங்கள் பண்ணிசைத்துப் பாடுவோம்!*

*அறிந்துகொள்க நானுமுங்கள் அரசனல்ல! தோழன் நான்!*
*அடுத்த தலைவர் அவரைநீங்கள் தேர்ந்தெடுத்து கொள்ளுங்கள்!*
*-மறைந்தபோது உரைவைத்தார் மாநபியார் மக்களை*
*மலரவைத்தார் குடியரசை மாமதினா நகரிலே!*

அன்சார்களாம் மதினாநகர் குடிகள் ஒன்று கூடினர்
அண்ணல்நபி உவந்ததோழர் நாங்கள் என்று கூறினர்!
தம்சார்பாக முஜாஹிரீன்கள் மக்கநகர் குரைஷிகள்
நபிகள்எங்கள் இரத்தபந்து உணர்ந்துகொள்க என்றனர்!

பனிசாய்தா நந்தவனம் அங்குவெகு நேரமாய்
பணிவோடு உம்மத்தோரின் வாதப்பிரதி வாதங்கள்
இனிதாக ஓர்முடிவு மூத்த தோழர் அபுபக்கர்
ஏற்பார்கள் கிலா∴பத்என்று சமாதானம் ஆகினர்!

அன்சார்கள் முஜாஹிரீன்கள் அனைவரும் அத்தோழரே
அண்ணல் நபியின் பிரதிநிதி எனமகிழ்ந்து ஏற்றனர்!
முன்வந்து முஷாஹபா செய்தவர்கள் வரிசையில்
மூமீன்கள் ஆண்டான் அடிமை பேதமின்றி இணைந்தனர்!

கிரேக்க நாட்டு ஏதென்சை ஏற்றிப்போற்றிப் புகழுவோர்
கீர்த்திமிக்க மக்களாட்சி தொட்டில் என்று கூறுவார்!
சிரேஷ்டமென்று கருதினாலும் ஏதென்ஸின் குடிகளில்
கீழோர்மேலோர் எனமக்கள் இருபிரிவாய் வாழ்ந்தனர்!

மேட்டுக்குடி மக்களுக்கே ஓட்டுரிமை என்றனர்
மேதினியில் ஏதென்சில் குடியரசு கண்டவர்!
கேட்டுகொள்வீர் மதினாவில் முதல்கலி∴பா அவர்களை
ஏற்றுக்கொண்டோர் பட்டியலில் அடிமைபிலால் உள்ளனர்!

சூப்பிவிட்ட பனங்கொட்டை போன்ற சிரசைஉடைய ஓர்
ஆப்பிரிக்க நீக்ரோவர் தலைவராக அமையினும்
ஏற்றுக்கொள்வீர் எனும்ஹதீஸின் அடிப்படையில் யத்ரிபில்
இனஜாதி பேதமிலா மக்களாட்சி மலர்ந்ததே!

*மக்களை மக்களாளும் மக்களாட்சி வாழ்கவே*
*மக்களை மடையராக்கும் மன்னராட்சி வீழ்கவே*
*மக்களை அடிமையாக்கும் அதிபராட்சி ஒழிகவே*
*மக்கள்கூடி தேர்ந்தெடுக்கும் தலைவராட்சி வாழ்கவே!*



# அந்தி வைகரையில்
# உத்தம நபியின் இறுத ஊர்வலம்

கி.பி. 632 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் நாள், ஹிஜ்ரி 11ஆம் ஆண்டு ரபிவுல் அவ்வல் மாதம் பிறை 12ஆம் நாள் அண்ணல் நபி அவர்கள் மண்ணுலகை விட்டு மறைந்தார்கள். விண்ணுலகில் அவர்கள் ஆன்மா சென்று புகுந்தது. மதினாவில் அவர்கள் மூமின்களின் தாய் ஆயிஷா(ரலி)யுடன் வாழ்ந்த குடிலிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

*உத்தம நபியின் சந்தூக்கு*
*ஊர்வலம் போகுது வீதியிலே*
*பத்தினி மார்கள் பதின்மருமே*
*பாதையில் நின்று பதறுகின்றார்!*
*உத்தமி கதீஜா திருமகளார்*
*உசேன் அசனுடன் கதறுகின்றார்*
*சித்தம் கலங்கி தோழர்பிலால்*
*தெருத் தெருவாக ஓடுகிறார்!*

*நீல வானத்தில் மேகத்திரள்*
*நிம்மதி யின்றி புரளுதம்மா*
*பாலை வனமணல் படிவங்கள்*
*பாவப்பட்டது போல் கிடக்குதம்மா*
*சோலை வனங்களில் சலனமில்லை*
*சோகம் பதுங்கி படுக்குதம்மா*
*காலை மாலையென்று பொழுதுமில்லை*
*காலம் மயங்கி சாய்ந்ததம்மா ! (உத்தம)*

*அல்லா உனக்கிது சம்மதமா?*
*ஆரவாரப் பெண்டிர் தேம்புகின்றார்!*
*எல்லாம் அழியும் இவ்வுலகில்*
*இறைவன் திருமுகம் தவிரஎன்று*
*குல்லுமன் அலைஹா ஃபானெ ன்றதோர்*
*குர்ஆன் மறைக்குரல் கேட்குதம்மா!*
*சொல்லும் மறைவரி வார்த்தைகளை*
*சொல்லி மக்கள் சோகம்ஆற்றுகின்றார்! (உத்தம)*

ஒட்டகை ஆநிறை ஆடுகளும்
ஒய்யார கோவேறு கழுதைகளும்
மட்ட குதிரைகள் மான்மறையும்
வானத்தில் பறக்கும் பட்சிகளும்
துஷ்டப் பருந்துடன் ராஜாளியும்
சுற்றித் திரியும் குருவிகளும்
வட்டப் புறாக்களும் மனம்வெதும்பி
வாடி முகம் வற்றி கிடக்குதம்மா! (உத்தம)

வேந்தர் அபுபக்கர் உமர்உதுமான்
மேதகு சகாபா ஆயிரம்பேர்
ஊர்ந்து நகர்கின்ற ஊர்வலத்தில்
உம்பரும் கலந்து நடக்கின்றார்!
சூழ்ந்த இருளுக்குள் ஹைதர்அலீ
சொந்த சஹாதத்து சொல்லுகின்றார்!
சாய்ந்து சாய்ந்து சூரர் ஜிபுரில்
சஞ்சல முகத்துடன் தொடருகின்றார் !(உத்தம)

வாழ்ந்தது போதும் போதுமென்று
வள்ளல் நபிகண்கள் மூடிக்கொண்டார்!
தாழ்ந்து கதிரவன் சாய்வதுபோல்
தாகாநபி மண்ணில் சாய்ந்துகொண்டார்!
ஏந்திழை கதிஜா வான்வரையில்
எட்டிஎட்டி நின்று பார்க்கின்றார்!
சாந்திசாந்தி என்றே இறைவன்அல்லா
ஸலவாத் நபிமேல் சொல்லுகின்றான்! (உத்தம)

# ஆனந்த சங்கமம்

இறைவனிலிருந்து வந்தோம். இறைவனளவில் மீள்வோம் இன்னாலில்லாஹி வ இன்ன இலைஹி இராஜிவுன சஹாதா என்பது மறைவாசகம். இடைவெளியில் நிற்கும் இந்த மனிதன் யார்? அந்த மாநபிகள் தான் யார்?

*இறைவனிலிருந்து வந்தனம்*
*இறைவனோடுதான் சங்கமம் சங்கமம்!*

*அனுத்துளி அனுத்துளி*
*அண்ட வெளியினில் சங்கமம் சங்கமம்!*

*ஆன்ம உயிர்த்துளி*
*அனந்த மானதில் சங்கமம் சங்கமம்!*

*பனித்துளி பனித்துளி*
*பாலை வெய்யிலில் சங்கமம் சங்கமம்!*

*மழைத்துளி மழைத்துளி*
*கடலின் மடியிலே சங்கமம் சங்கமம்!*

*நினைவெனும் ஆனவம்*
*நீல விசும்பினில் சங்கமம் சங்கமம்!*

*நிமிட மணித்துளி*
*கால ஆழியில் சங்கமம் சங்கமம்!*

*இணைந்து முகம்மது*
*ஏகமானதில் சங்கமம் சங்கமம்!*

*ஆதி ஆனந்தம்*
*அனந்த முகம்மதில் சங்கமம் சங்கமம்!*

*இறைவனிலிருந்து வந்தனம்*
*இறைவனோடுதான் சங்கமம் சங்கமம்!*

# தயவுபுரிவீர் நபிமுகம் காண
# தாயே கதிஜா மாதரசே!

காரிருள் இரவும் கழிந்ததுவாம்
கதிரவன் ஒளிவான் கசிந்தது வாம்
பாரிடை மாந்தர் துயில் களைய
பாடிடும் பறவைகள் விழித்தனவாம்
நேரிய நற்குண நாயகராம்
நபியை நாங்கள் காண்பதற்கே
சீரார் மணவறை தாள்திறவீர்
தாயே கதிஜா மாதரசே!

அலைகடல் வானப் பருந்தினைப்போல்
அடிமைகள் புகலிடம் தேடுகிறோம்
நிலைதடுமாறி நிற்கும் எமை
நீரே அறிவீர் யாரறிவார்
கலைவளர் மதீனா தெய்வீக
காரண முஹம்மதை காண்பதற்கே
மலர்குவிழ் மணவறை தாள்திறவீர்
மங்கல கதிஜா மாதரசே!

மங்கையர் குலத்தின் மணிவிளக்காம்
வளர்மதி ஆமினா மடிமலரை
சங்கையில் சிறந்த அப்துல்லா
தந்தை குறைசியர் குலநிலவை
பொங்கும் ஞானப் பூரணராம்
பூமான் நபிமுகம் காண்பதற்கு
தங்க மணவறை தாள்திறவீர்
அன்னையர் கதிஜா மாதரசே!

குடையிடும் முகிலை கண்மலர
குறித்திடும் புகைரா பாதிரியார்
தடையிலை இவரே இறுதிநபி
தரையுள மாந்தர் உணருமெனும்
கடையுக முடிவின் இரட்சகராம்
காத்தமுன் நபியை காண்பதற்கே
படர்ஒளி மணவறை தாள்திறவீர்
பண்பார் கதீஜா மாதரசே!

சிதறி கிடந்திடும் கஅபாவை
சேர்ந்து உயர்த்திடும் பணியதனில்
பதறிடும் மக்கா மாந்தரிடை
பகலவன் போலே எதிரெழுந்து
முதலொரு கல்லினை எடுத்துவைத்த
முஹம்மதை நாங்கள் காண்பதற்கு
புதுமையின் மணவறை தாள்திறவீர்
உத்தமி கதீஜா மாதரசே!

முத்தாம் மணியாம் ரத்தினமாம்
முற்றிய வைரம் மரகதமாம்
சுத்த ஸ்வர பாவினமாம்
சுகமே பரவும் மோகனமாம்
பத்தர் பணியும் பரன்தூதாம்
மஹ்மூது நபியை காண்பதற்கே
முத்தொளிர் மணவறை தாள்திறவீர்
தாயே கதீஜா மாதரசே!

வான்மறை தன்னை வையமெலாம்
வாழ்ந்திட மழையாய் பொழிந்தவரை
மான்மறை தனக்கும் மனமிரங்கி
பதிலியாய் நின்ற நாயகரை
கோனருள் சிந்தும் தேனடையாம்
கொண்டல் முஹம்மதை காண்பதற்கே
பான்சுடர் மணவறை தாள்திறவீர்
மதியே கதீஜா மாதரசே!

பத்தினி ஆயிஷா கற்பினையே
பழித்தவன் பழியைப் புறக்கணித்து
உத்தமி என்றே உலகுணர
உயர்த்திய பெண்குல காவலரை
இத்தரை தோன்றும் மாதவத்தோர்
ஏற்றிடும் முஹம்மதை காண்பதற்கே
சித்திர மணவறை தாள்திறவீர்
திருமதி கதீஜா மாதரசே!

ஏழை எளிய மாந்தருடன்
இம்மையில் இறைவா எனை அமர்த்து
ஏழை எளிய மாந்தருடன்
மறுமையில் இறைவா எனை எழுப்பு
ஏழைகளே என் தோழரென
இறைஞ்சும் நபியை காண்பதற்கே
வாழ்கை மணவறை தாள்திறவீர்
வளமார் கதீஜா மாதரசே!

தலைமேல் குப்பை கொட்டிடுமோர்
தத்தையின் உடல்நலம் குறைந்திடவே
அலையென அவளகம் தனில் புகுந்து
ஆறுதல் கூறிடும் தாபதரை
உலகினில் நற்குண தாரகையாய்
உயர்ந்திடும் அகுமதை காண்பதற்கே
கலைமிகு மணவறை தாள்திறவீர்
காருண்ய கதீஜா மாதரசே!

குலத்தின் பெருமை குடிப்பெருமை
குடும்பப் பெருமை இனப்பெருமை
நிலத்தில் வீசியென் காலடியில்
மிதித்தேன் மிதித்தேன் எனமுழங்கும்
நலத்தில் சிறந்த நாயகரை
நபியை அகுமதை காண்பதற்கே
நிலவெழில் மணவறை தாள்திறவீர்
சீருளம் கதீஜா மாதரசே!

முடிவின் முடிவில் ம∴குசரிலே
முதலோன் காட்சி தருகையிலே
நடை தடுமாறி பிறழாமல்
நாயனின் பொருத்தம் தனையடைய
குடைநிழல் அருளும் நபிக்கரசை
கோமான் நபியை காண்பதற்கே
வடிவுடை மணவறை தாள்திறவீர்
மனங்குளிர் கதீஜா மாதரசே!

பாங்கின் ஓசை கேட்கிறதே
∴பஜ்ரின் பொழுதும் மலர்கிறதே
பூங்குழல் நாத ஓசையுடன்
∴புர்கான் மறையொலி வளர்கிறதே
ஏங்கிடும் மானுட தாபமெல்லாம்
ஏற்றிடும் அகுமதை காண்பதற்கே
பாங்குடை மணவறை தாள்திறவீர்
பரிவே கதீஜா மாதரசே!

வானும் மண்ணும் குளிர்கிறதே
வசந்த காற்றும் வருகிறதே
கான்கடல் கரைநிலம் பாரெல்லாம்
கவின்மிகு காட்சி பொலிகிறதே
ஆனவம் தவிர்த்து அருள்தழைக்க
அண்ணல் முஹம்மதை கண்டுதொழ
வானவில் மணவறை தாள்திறவீர்
கனிவே கதீஜா மாதரசே!

# நன்றியறிதல்

தமது முன்னுரையில் உலகம் புகழும் புஸ்ரா ஷரீஃப் என்ற நபிகாவியத்தை எழுதிய இமாம் பூஸ்ரி இமாம் பின்வருமாறு கூறுகிறார்கள்:–

உலகில் தோன்றியுள்ள தீர்க்கதரிசிகள் அனைவரும் எம்பெருமானாகிய முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் ஜோதிச் சுடர்களே ஆவார்கள்.

மேலும் ஸூஃபிகளாகிய மெய்ஞானிகள் முகம்மத் என்னும் திருத்தூதரின் தோற்றம் இறைவனின் தோற்றமே ஆகும் என்று வலியுறுத்துகிறார்கள். ஃபகத்ராஅல்ஹக்கு – என்னை பார்த்தவன் இறைவனையே பார்த்தான் என்ற ஹதீஸ் மொழியை சுட்டிக்காட்டுகிறார்கள்.

எனவே தான் நம்முடைய இந்த கவிதை நூல் முகம்மது நபி (ஸல்) அவர்கள் வாழ்க்கையின் மறுபக்கமாகிய ஹகீகத் – மெய்ஞ்ஞான நிலைப்பாட்டை முற்படுத்தி எழுதப்பட்டுள்ளது.

நானில வாழ்வை! நான்மறை வாழ்வை! நபிகளின் வாழ்வை! என்று பலவாராக உமறுப்புலவர் அப்பா தங்களின் முதுமொழி மாலை என்ற பாடல்களில் புகழ்ந்து கூறியுள்ளார்கள். அவர்கள் கூறும் நபிகளாரின் அந்த அற்புத வாழ்வின் சில சம்பவங்களை கவிதைகளாக்கி உள்ளோம்.

இந்த பாசுரத்தில் பொங்கும் கவிதைகளின் ஆதார சுருதிகளை என்னால் நினைவு கூராமல் இருக்க முடியாது. அதற்காகவே கூறுகிறேன். ப ள் ளி நாட்களிலிருந்து நான் கவிதைகள் எழுதி வந்திருக்கிறேன். எனினும் நான் எழுதுவது கவிதை தான் என்பது மாநிலக் கல்லூரியில் நுழைந்த பிறகுதான் எனக்கு தெரியவந்தது.

மாநிலக்கல்லூரியின் தமிழ் ஆசிரியர் சுப்ரமணியம் நான் எழுதி வைத்திருந்த ஏடுகளை புரட்டிப் பார்த்துவிட்டு வியந்தார். தமிழ்த்துறைப் பேராசிரியராக

இருந்த பெருமகன் தங்கவேலனார் என்னை அழைத்துப் பாராட்டி அயரவைத்தார். பேராசிரியர் வெள்ளையனாரும் பேராசிரியை பாகீரதி அம்மாளும் என் கவிதை தமிழைப் பற்றி வகுப்பறைகளில் பேசிக்கொண்டே இருந்தார்கள்.

மாநிலக் கல்லூரியின் பெருமை மிகுந்த பிக்இங்க்லிஷ் லெக்சர் ஹாலில் ஆயிரக்கணக்கான மாணவர்களிடையே முதன்முதலில் அரங்கேறிப் பாடிய என்னை அன்புடன் பாராட்டிய கவியரசர் கண்ணதாசன் அவர்களை பரவசத்துடன் இங்கு நான் எனது மானசீக இலக்கிய குருவாக குறிப்பிட்டாக வேண்டும்.

ஆனால் கவிதையில் மொழி இனிமையும் இலக்கண அமைதியும் இருந்தாலும் உணர்ச்சி எனும் உயிரோட்டம் கலந்திருந்தால் தான் அது இலக்கியமாகும். என் கவிதைகளுக்கு உயிரோட்டம் தந்த பெருமை மறைந்த என் இனிய நண்பர் மதுரை நகர் கண்ட வழக்குறைஞர் விக்டோரியா மாணவர் விடுதியின் உடனுறை என் உடன் பிறவா சகோதரர், என் கவிதைகளின் முதல் ரசிகர் இலக்குமண மூர்த்தியை சாரும்.

எனது கவிதைகளை முதன் முதலாக இசை அமைத்து பாடி என்னை இன்புறச்செய்த பெருமை நட்பின் இனியர் முன்னாள் அமைச்சர் கா. இராசா முகம்மது அவர்களை சாரும். என்னை முதன் முதலாக கவிஞனே என்று அழைத்து என் கவித்துவத்துக்கு முதல் மரியாதை தந்த தகைமை தமிழினக் காவலன் புரட்சி புயல் வைகோ அவர்களுடையதாகும்.

என் இதய சுரங்கத்திலிருந்து வெளிவந்த கவிதைகளின் முதல் ரசிகை, கல்லூரியில் இயற்பியல் மாணவி என் தோழி கௌரி ஆவார். எனது முதல் ஆங்கில கவிதையை வாசித்து இலக்கணம் திருத்திய பெருமை மற்றொரு மாணவியான சகோதரி, மாண்புமிகு மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தின் காதல் மனைவி திருமதி நளினி அவர்களை சேரும்.

எனது கல்லூரி தோழன் மறைந்த ஓவியன் தணிகாசலன், எனது உளவியல் துறை வகுப்பறை தோழிகள் ருக்மணி, சுஜாதா நான்கு வரிகளில் ஆட்டோகிராஃபில் நான் எழுதி தந்த ஆங்கில கவிதையை கல்லூரி முழுதும் தன் தோழிகளிடம் கிசுகிசுத்து மகிழ்ந்த ஸ்ரீகலா,

கல்லூரியிலிருந்து வெளிவந்து சென்னையில் குடியேறி எழுத்தாளும் தவத்தில் இறங்கியபோது எனது மொழி ஆற்றலுக்கும் கவிதைகளுக்கும் முதல் ஆதரவு தந்த கனிவும் பாசமும் குன்றாத சிரியன் கிறிஸ்துவ மலையாள தம்பதிகள் என் அண்ணி ஆனி ஜோசப் அவரது கணவர் எனது அண்ணன் ஜோசப், என்னுள் எரிந்த இலக்கிய தணலை மணிவிளக்கு மாத இதழில் அச்சேற்றி குன்றிலேறிய தீபமாக்கிய எனது மனம் கவர்ந்த தலைவர் முஸ்லிம் லீக்கின் தளநாயகர் சிராஜுல் மில்லத் அப்துஸ் சமத், வலங்கைமான் அப்துல்லா, அன்புத் தோழர் அருளிசை முரசு அண்ணன் நாகூர் ஹனிபாவின் இசையமைப்பாளர் மறைந்த இன்பராஜ்,

ஆகிய இவர்களெல்லாம் என் மொழிவளத்தின் ஆதார சுருதிகளாவார்கள். எனது கவித்துவத்தின் ஆணிவேர்கள் ஆவார்கள். நான் கவிதை கோலம் வரைய காரணமாய் அமைந்தவர்களாவார்கள்.

ஆனால், என்னுள் இன்ப ஊற்றெனப் பொங்கும் முகம்மத் என்னும் நாமம் என் இதயத்தில் நுழைந்ததெப்படி. எப்படி? அப்பெயர் என் அகத்தில் புகுந்தது என்று ஆராய்ந்தும் ஆராய்ந்தும் அறிவதற்கு எட்டவில்லை.

எனினும் எனது தாயார் ஃபாத்திமாபீவி எனக்கு பாலூட்டும் போதே முகம்மத் என்னும் இனிய திருநாமத்தை தாலாட்டாகப் பாடி செவி வழியே என் இதயத்தில் புகுத்திவிட்டார்கள் என்றே எனக்கு தோன்றுகிறது.

நபிகள் பெருமான் (ஸல்) அவர்களின் இரத்த பந்துத்துவ பாரம்பரியம் எனக்கு உண்டு. முகம்மத் என்ற நாமம் தரித்த முன்னோர்கள் பலரின் பந்துத்துவமும் எனக்கு உண்டு.

நாகூரிலிருந்து கி.பி. 1808 – ம் ஆண்டில் கூத்தூரில் வந்து இல்லறம் புகுந்து நல்லறம் கண்ட எனது தந்தைவழி பாட்டனாரின் பாட்டனார் அலீயார் சாகிபு, சின்ன எஜமான் சையிது முகம்மது யூசுபு தாதா நாயகத்துக்கும் உம்மு சாஹிபா சுல்தான் பீவி அவர்களுக்கும் பிறந்த தலைமகனார் காட்டுபாபா ஃபக்ருத்தீனின் பேரனாவார்கள்.

தென்னகமெலாம் புகழ் மணக்கும் எனது பாட்டனார் நாகூர் ஆண்டவர் காதிர் ஒலி கன்ஜசவாயி  பாதுஷா நாயகத்தின் இதயாசனத்தமர்ந்திருக்கும் குருமகானின் உன்னதப் பெயர் முகம்மது கவுது குவாலீரி என்பதாகும்.

கீர்த்திமிக்க புகாராவிலிருந்து புறப்பட்டு வடஇந்தியாவின் மூல்தானில் உறைந்து, மன்னர் மன்னர் முகம்மத் பின் துக்ளக்கின் அவையில் நுழைந்து அருளாசி வழங்கி ஊஜ்ஜில் அடக்கம் கண்ட மகான், மகுதூம் ஜகான் ஜகான் கஸ்தின் பேரர் திருவாரூர் தலம் கொண்ட முகம்மது காசிம் ஒலியுல்லா எனது பாட்டனார் முகம்மது அலீயின் தாய்மாமன் ஆவார்.

மைசூர் மாவீரர் திப்புசுல்தானின் சிற்றப்பர் ஷேக் இமாமின் வழித்தோன்றல் கூத்தூரில் வாழ்ந்த பெருமகன் பக்கீர் முகம்மது எனது தாய்வழிப் பாட்டனார் அலாவுதீன் சாஹிபின் பாட்டனாவார். அலாவுதீன் சாஹிபின் தாயார் ஜுலைகா பீவி நாகூர் ஆண்டவர்களின் நானூற்றி நான்கு ஃபக்கீர்களில் ஒருவரான முகம்மத் அலீ முஜாஹிரின் சந்ததியினர் ஆவார்.

இறைவனால் ஏவப்படுவதால் இயம்புகிறேன். கற்பகருவறை கொடிகளில் முகம்மத் என்ற திருநாமம் கொண்ட மகான்கள் பலரின் பேரனாகப் பிறக்கும் பாக்கியம் பெற்ற என்னை நான் முகம்மதின் பாதம்பட்ட

மண்ணின் மறுபிறவி என்று அறிகிறேன். எனினும் எனது தலையாய நன்றி அறிதல் என்னை எழுத வைத்த மங்கையர்க்கரசி கதிஜாவுக்கு உரியதாகும்.

மாநபியின் காதலியர் மாதரசி கதிஜாவை என் இதயத்தின் உணர்வுகளால் தரிசித்து சேவிக்கிறேன். கதிஜா என்ற அந்த உன்னதமான திருநாமத்தை நான் இளமை காலத்தில் இருந்து நேசித்து வருகிறேன். அந்த நாமம் என் இதய வீணையில் சந்ததமும் எழும் இராக ஆலாபனை ஆகும்.

உலகில் தோன்றிய எந்த ஒரு ஆண்மகனுக்கும் கிடைக்காத பெண்குலத்தின் அற்புதமாக கதிஜா பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தெய்வத்தின் பரிசாக கிடைத்தார்கள். என்னால் பெருமானாரையும் கதிஜா மாதரசியையும் இருவராகப் பிரித்து பார்க்க முடியாது.

எனது நெஞ்சின் நாயகமாகிய நபியே! கதிஜா மீது நீங்கள் கொண்டிருந்த காதலுக்காக இந்த அடிமை உங்கள் பாதத் திருவடிகளில் சமர்ப்பிக்கும் இந்த காவியத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.

தங்கள் தாமரைப் திருப்பாதங்களை எனது சிரசின் மீதும் எனது உண்மையான நேசர்களின் சிரசின் மீதும் அருள் புரியுங்கள்.

மு.அ. ஹைதர் அலீ யகீனுல்லாஷா
நெல்லிக்குப்பம்



www.netsufi.com

Free edition, Not for sale